Digitization by eGangotri South Center

वैदिकश्रीः வைதிக ஸ்ரீ:

Vaithikasri

January 2018

₹. 25/-

Volume -15 Issue -06



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வைதிக ஸ்ரீ:

ஆசிரியர்:' வேதவித்யாலங்கார ப்ருஹ்மஸ்ரீ

நன்னிலம் V. ராஜகோபால கனபாடிகள்

New No 488.Old 175, T. T. Krishnamacharry Road, Alwarpet, Chennai,18.

vaithikasri@yahoo.com -www.vaithikasri.com

ஹேவிளம்பி வரு, மார்கழி-தை மீ

JANUARY 2018, Volume(Year)15.issue_06.Continuing issue 174

விஷயானுக்ரமணிகா (பொருளடக்கம்)

ஆசிரியர் எண்ணங்கள்	03	சனி தோஷ பரிஹாரங்கள்	32
வைகுண்ட ஏகாதசி	07	முத்துஸ்வாமிதீக்ஷிதர்கீர்த்தனங்கள்(68)	
ஆருத்ரா தரிசனம்	09	(சிதம்பர நடராஜமாஸ்ரயேஹம்)	34
மார்கழியும் திருவாதிரையும்	10	ஸிவானந்த லஹரீ(ச்லோகம்12)	35
ஸ்ரீ த்யாகராஜர் ஆராதனை	12	சந்த்ராஷ்டம நாட்கள்	36
கூடாரைவல்லி	13	மஹான்களின் மஹத்துவம்	37
போகிப்பண்டிகை	14	(ஸத்குரு ஸ்ரீ த்யாகராஜர்-1)	
தைமாதப்பிறப்பு-உத்தராயணம்	15	விதுர நீதி (ச்லோகம் 312-315)	40
தைப்பொங்கல்	16	அத்புதமான ஸ்தோத்ரங்கள்	42
சிறப்பான நேரங்கள்	17	நாரதோக்ததத்தாத்ரேயஸ்தோத்ரம்(2)	
மகர ஸங்க்ராந்தி-தைப்பொங்கல்	18	பால போதினி	45
மாட்டுப் பொங்கல்	20	ஸந்தேஹ நிவாரணீ	46
காணும் பொங்கல்	21	அறுபதைக்கடந்த மஹான்கள்	51
மாக ஸ்நானம்	22	நல்வழிகாட்டும் நல்லவர்கள்(13)	55
ஸ்யாமளா நவராத்திரி	26	பித்ரு தர்ப்பண ஸங்கல்பங்கள்	56
ரத ஸப்தமி	28	வைதிகர்களுக்காக (பகுதி 26)	59
பீஷ்ம அஷ்டமீ	30	இந்த மாத பஞ்சாங்கம்	60
		ஆன்மிக விளக்கக்கூட்டங்கள்	62

இந்த புஸ்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்து பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறு பிரஸுரம் செய்வதோ அச்சு-மிண்ணனு ஊடகங்களில் மறு பதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



சார்! உங்கள் எதிர் வீட்டிலிருப்பவர், உங்களைப்பார்த்தும் பார்க்காதது மாதிரியும் உங்களை வெறுக்கும் பாவத்திலும் செல்கிறாரே! அது ஏன் சார்! ,அதுவா! அவரும் நானும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வது கிடையாது, ஏன், ஒருவருக்கொருவர் முகாலோகனம் (முகத்தைப் பார்ப்பது) கூட கிடையாது, எத்தனை நாளாக சார்? அதுவா! சுமார் 50 வருஷமாக, சார்! அப்படி என்ன உங்களுக்கும் அவருக்கும் பகை? , எனக்கும் அவருக்கும் எந்த ஒரு சண்டையோ சச்சரவோ கிடையாது, ஆனாலும் பகைதான்? எப்போதிலிருந்து சார்!? அது வெகுகாலமாக, அதாவது எனது தாத்தாவுக்கும் அவர் தாத்தாவுக்கும் பகை, ஆகவே எனது தாத்தாவும் அவர் தாத்தாவும் பேசிக் கொள்ளமாட்டார்கள், அதை ஒட்டியே எனது அப்பாவுக்கும் அவர் அப்பாவுக்கும் பேச்சு வார்த்தை இல்லை, அதை ஒட்டியே நானும் எங்கள் குடும்பத்தினரும், அவரிடமோ அவர் குடும்பத்தினரிடமோ எந்த ஒரு தொடர்பும் வைத்துக் கொள்வதில்லை

சில காலம் முன்பாக ஒருவருக்கொருவர் பேசிக் கொண்ட மேற்கண்ட பேச்சு வார்த்தை தற்செயலாக நம் காதில் விழுந்தது, யோசித்தோம், இது ஸரியா? இவர்களுக்குள் எந்த ஒரு சண்டையோ சச்சரவோ இல்லை, ஆனாலும் முன்னோர்களை மதிக்கும் விதமாக இவர்களின் பகை என்று கூறப்படுவது ஏற்கத்தக்கதா? யோசிக்கத்தான் வேண்டும்

மனிதனாகப் பிறந்தவர்கள் ஆசைக்கும் கோபத்துக்கும் வசப்பட்டவர்கள், ஆசையற்ற கோபமற்ற மனிதர்களே உலகில் இல்லை, ஆனாலும் கோபமோ சண்டையோ சச்சரவோ நீடித்து பல வருஷம் பலகாலம் இருப்பதை சாஸ்திரம் அனுமதிக்கவில்லை, ஒருவரின் நடத்தையோ பேச்சோ செயலோ நமக்குப் பிடிக்க வில்லை என்றால்அவரை விட்டு விலகி இருப்பது நமது விருப்பம், சுதந்திரமும் கூட, ஆனால் அவரிடம் வெறுப்பு காண்பிக்கக் கூடாது ஒரு மனிதன் வெகு காலம் நல்லவனாகவோ கெட்டவனாகவோ இருப்பதில்லை, மாற்றத்தை நோக்கி முன்னேறும் இவ்வுலகில், ஒவ்வொருவரின் மனதும் அடிக்கடி மாறிக் கொண்டேதான் இருக்கிறது,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிலகாலம் முன்பாக ஒருவன் கொடுஞ்சொல் பேசுபவனாக அதர்ம காரியங்கள் செய்பவனாக மனிதாபிமானம் அற்றவனாக இருந்தான், என்பதற்காக பலகாலம் கழித்தும் அந்த மனிதன் அந்த குணங்களுடனேயேதான் இருப்பான். என்று எவ்வாறு தீர்மானிக்க முடியும்? அவ்வப்போது அவனை நெருங்கி பேசிப் பழகிப் பார்த்தால் அல்லவா அவனின் குணம் செயல் பேச்சு மாறி இருக்கிறதா? என்பதை அறிந்து கொள்ள முடியும், ஆகவேதான் சாஸ்திரமும் சுமார் மூன்று மாதத்திற்கு அல்லது மூன்று வருஷத்திற்கு ஒரு முறை, நாம் பழகிக் கொண்டிருக்கும், அல்லது விலகி இருக்கும், மனிதரை நெருங்கி, அவருடன் பேசிப் பழகி ஆராய்ந்து அதற்குத் தக்க செயல்பட வேண்டும் என்று சொல்கிறது,

தீர்க்க கோபஸ்து சாண்டாளः என்பதாக மிக நீண்ட நாள் ஒருவரிடம் விரோதம் (பகை) பார்ப்பவன், சண்டாளன், தீயவன், என்றும் கடுமையாக எச்சரிக்கிறது சாஸ்திரம், ரயில் வண்டி பிரயாணம் போல் அமைந்துள்ள நம் வாழ்க்கை பிரயாணத்தில் நடு நடுவே பலரும் நம்முடன் சேருவார்கள் விலகுவார்கள், அவர்களிடம் நாம் அன்பாகப் பேசிப் பழகுவதுதானே தர்மம்? மனிதாபிமானமும் கூட? அதற்கு மாறாக அவர்களிடம் வெறுப்பு காட்டினால், நஷ்டம் நமக்குத்தானே தவிர மற்றவருக்கு அல்லவே! யோசிக்கலாமே!

பால்யப்பருவம், வார்தக்ய பருவம் போக, நாம் விபரம் தெரிந்து வாழும் வாழ்க்கை என்பது ஸுமார் இருபது அல்லது முப்பது வருஷ காலங்கள்தான், அந்த காலத்திலாவது நாம் நமது உற்றார் உறவினர்களுடனும் அக்கம் பக்கத்தினருடனும்சுற்றுப்புறத்தருடனும் அன்பாகப் பேசிப் பழகி மகிழ்ச்சியாக இருக்க வேண்டாமா?

தற்காலத்தில் ஒரே அடுக்கு மாடிக் குடியிருப்பில் வஸிக்கும் பலரும் ஒன்றாக செயல்பட வேண்டும் என்னும் நோக்கத்தில் ஒரு அஸோஸியேஷன் -ஸங்கம்- உருவாக்கி அதை நிர்வஹிக்கிறார்கள், ஆனால் அந்த ஸ்தாபனத்தில் உள்ளவர்களுக்குள் ஒற்றுமை இருக்கிறதா? என்றால் யோசிக்கத்தான் வேண்டியுள்ளது, சங்கத்தின் (ஒற்றுமை என்னும்) நோக்கமே நிறைவேறாமல் போய் விடுகிறது, காரணம் ஒருவருக்கொருவர் ஏற்பட்டுள்ள பகைதான், காரணம் கேட்டால்? ஒருவர் மற்றவரைப் பற்றி குற்றம் சொல்வார்கள், அவர் இவரைப் பற்றி, இதை ஆராய்ச்சி செய்ய முடியுமா? அதற்கு முடிவுதான் உண்டா?

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸ்ரீமத் ராமாயணத்தில் ஸுந்தர காண்டத்தில் ஒரு காக்ஷி, ஸ்ரீ ராமர் ராவணனை ஸம்ஹரித்து விட்டு ஸ்ரீஜய ராமராக பிரகாசிக்கிறார், தமது வெற்றிச் செய்தியை, அசோகவனத்தில் உள்ள ஸ்ரீ ஸீதாதேவியிடம் தெரிவித்து வா, என்று சொல்லி ஸ்ரீ ஆஞ்சனேயரை அனுப்புகிறார் ஸ்ரீ ராமர், ஸ்ரீ ஹனுமானும் அசோகவனம் சென்று தாயாரை நமஸ்கரித்து வெற்றிச் செய்தியைச் சொல்கிறார், மிகவும் மகிழ்ச்சியடைந்த ஸீதா தேவி, ஆஞ்சனேயா! இப்படிப்பட்ட மகிழ்ச்சியான செய்தியைச் சொல்லி எனது துக்கத்தைப் போக்கடித்த உனக்கு, நான் என்ன கைமாறு செய்யபோகிறேன்?, ஏதாவது வரம் வேண்டுமெண்றால் கேட்டுக் கொள் என்கிறாள் ஸ்ரீ ஸீதா தேவி,

ஸ்ரீ ஹனுமாரும், தாயே! எனக்கு தாங்கள் ஒரே ஒரு வரம் தர வேண்டும், அதாவது, நான் ஒன்றைச் செய்ய தாங்கள் அனுமதிக்க வேண்டும் என்று கேட்கிறார், ஸ்ரீ ஸீதா தேவியோ! நீ என்ன செய்யப் போகிறாய்? என்று கேட்க, ஹனுமாரும், தாங்களை இந்த அசோக வனத்தில் ஸுமார் பத்து மாதமாக மிரட்டியும் வசை பாடியும் ஆட்டம் பாட்டத்துடனும் துன்புறுத்திய இந்த அரக்கிகளை நான் இப்போதே ஸம்ஹரிக்க தாங்கள் அனுமதிக்க வேண்டும் என்று கேட்கிறார், பதறிப்போன தாயாரான ஸீதை, ஆஞ்சனேயா! உனக்கு ஏன் பழிவாங்க வேண்டும் என்னும் கெட்ட எண்ணம்? இதற்கு நான் ஒரு போதும் அனுமதியேன் என்கிறாள், ஆஞ்சனேயரோ, இல்லை அம்மா!, இந்த அரக்கிகள் தாங்களிடம் அபசாரம் (குற்றம்) புரிந்தவர்கள், ஆகவே இவர்கள் தண்டனைக்கு உரியவர்கள், குற்றம் புரிந்தவர்களை தண்டிக்க வேண்டும் என்பது ந்யாயம் தானே! என்கிறார்,

கருணை உள்ளம் கொண்ட ஸ்ரீ ஸீதாதேவியோ,ஆஞ்சனேயா! இவர்கள் தாங்களாகச் செய்யவில்லையே!, ராவணனின் சொல்படியே செயல் பட்டார்கள், ஆகவே முதலாளியின் கட்டளையை நிறைவேற்றும் பணியாளர்களை தண்டிப்பது நியாயமில்லையே! என்று சொல்லி விட்டு மேலும் சொல்கிறாள், ஆஞ்சனேயா! குற்றம் புரிந்துள்ளார்கள் ஆகவே இவர்கள் தண்டிக்கத்தக்கவர்கள் என்னும் உனது எண்ணம் தவறு, குற்றம் புரிந்தவர்களை தண்டிக்கத்தான் வேண்டும் என்பது கட்டாயமில்லையே! அவர்களை மன்னிக்கவும் செய்யலாமே!

மேலும் குற்றம் செய்த நபர்கள் அனைவரையும் தண்டிக்க வேண்டும் என்றால், இவ்வுலகில் வாழும் அனைவரையும் தண்டிக்கத்தான் வேண்டும், ஏனென்றால் ந கஶ்சித் நாபராத்யதி என்பதாக

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இவ்வுலகில் குற்றம் செய்யாதவர்கள் என்பவர்கள் ஒருவர் கூட இல்லை, ஒவ்வொருவரும் ஏதோ ஒரு விதத்தில் யாரோ ஒருவருக்கு குற்றம் செய்தவர்கள்தான், இதற்கு நீயோ நானோ ஏன்! ஸ்ரீ ராமரே கூட விதிவிலக்கல்ல, ஆகவே இன்று முதல் குற்றம் செய்தவர்களை தண்டிக்க வேண்டும் என்னும் எண்ணத்தை விட்டுவிடு ஆஞ்சனேயா! என்று உபதேசித்தாள் தாயார், ஸ்ரீ ஆஞ்சனேயரும் நமஸ்கரித்து அதை ஏற்றுக் கொண்டார்

ஸ்ரீ ஸீதை ஹனுமாருக்குச் செய்த இந்த (குற்றம் செய்தவர்களை தண்டிக்க வேண்டும் என்னும் எண்ணம் கூடாது என்னும்) உபதேசம், இவ்வுலகில் வாழும் நம்மைப்போன்ற மனிதர்களுக்காகத்தான், மேலும் குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை என்னும் தமிழ் முது மொழிக்கேற்ப நம்மைச் சுற்றியுள்ள அனைவரிடத்திலும் நாம் குற்றங்களையே பார்த்துக் கொண்டிருந்தால், யாரும் நம்மைச் சுற்றி இருக்க மாட்டார்கள், நம்மை தன்னந்தனியே விட்டு விட்டு நம்மை விட்டு விலகிப்போய் விடுவார்கள், ஆகவே மனிதர்களாகிய நாம் கூடியவரையில், ஒருவருக்கொருவர் விரோதம் பார்க்க-பாராட்ட-க் கூடாது ஒருவருடனும் நெடு நாளைய பகை கூடாது,

மற்றவரின் பார்வையில் (அவருக்கு) நாம் விரோதியாகத் தெரிந்தாலும் கூட, நாம் மற்றவரை (அவரை) நமது விரோதியாகப் பார்க்க- பாவிக்க-வேண்டாமே!, ஒருவரிடம் நமக்கு அவ்வப்போது கோபமோ விரோதமோ ஏற்பட்டால் கூட, அதை நீடித்து வளரச் செய்ய வேண்டாமே!, பூர்வ பாஷீ பிரியம் வத: என்று ஸ்ரீ ராமருக்காண நல்ல குணத்தில் (பண்புகளில்) ஒன்று, அதாவது முதன்முதலில் மற்றவர் நம்மிடம் வந்து நம்முடன் பேசிப் பழக வேண்டும் என்று காத்திராமல்-நினைக்காமல், விரோதியாக இருந்தாலும் கூட மற்றவரிடம் தாமாகவே முதலில் அவரை நாடிச் சென்று அவருடன் பேசிப் பழகி அவரது தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும் பண்புள்ளவர் ஸ்ரீ ராமர் என்கிறார் வால்மிகி மஹரிஷி,

நாமும் இதைப்போன்ற பண்புகளை வளர்த்துக் கொள்ளவும் , தாயாரான ஸ்ரீ ஸீதையின் உபதேசத்தை (ஒருவரிடமும் குற்றம் பாராட்டக் கூடாது என்பதை) கடைபிடிக்கவும், நீண்ட பகை பாராது மற்றவரிடம் பேசிப் பழகி மகிழ்ச்சியாக ஒற்றுமையுடன் ஸுகமாக வாழவும் நமது மனதில் நல்ல எண்ணத்தையும் அதற்கான சூழ்நிலையையும் உருவாக்கித் தந்து ஸ்ரீ பகவான் ரக்ஷிக்கட்டும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வைகுண்ட ஏகாதசி 29-12-17 வெள்ளி



एकादशी समं किञ्चित्
पावनं न च विद्यते ।
स्वर्ग मोक्षप्रदा एषा
राज्य पुत्रप्रदायिनी ।।

ஏகாதஶீ ஸமம் கிஞ்சித்
பாவனம் ந ச வித்³யதே
ஸ்வர்க³ மோக்ஷப்ரதா³
ஏஷா ராஜ்யபுத்ரப்ரதா³யினீ

ஸ்வர்கம் மோக்ஷம் நல்ல புத்ரன், அரச பதவி முதலிய பலன்களைத் தருவதில் ஏகாதசிக்கு இணையான விரதம் கிடையாது என்கிறது தத்துவ ஸாரம் என்னும் புஸ்தகம். வைகுண்ட ஏகாதசிக்கு மோக்ஷ ஏகாதசி என்ற பெயரும் உண்டு. ஸ்ரீமஹாவிஷ்ணு வஸிக்கும் வைகுண்டத்தில் வாசல் திறக்கும் தினம் இன்று. இதன் அடையாளமாக பெருமாள் கோவில்களில் சிறப்பாக ஒரு வாசலைத் திறந்து அதன்வழியே பெருமாள் தரிசனம் தருகிறார். வருஷத்தில் 25 ஏகாதசிகளில் முக்கியமானவை நான்கு ஏகாதசிகள்,

அதாவது ஆனி மாதம் சுக்ல ஏகாதசி முதல் ஐப்பசி மாதம் சுக்ல ஏகாதசி வரை விஷ்ணு யோகநித்திரையில் இருக்கிறார், அப்போது நிகழும் ★ஆனி மாத சுக்ல (சயன) ஏகாதசி, ★பெருமாள் வலப்புறமாகத் திரும்பிப் படுக்கும் ஆவணி வளர்பிறை (பரிவர்த்தன) ஏகாதசி, ★ துயில் கலைந்து எழுந்திருக்கும் கார்த்திகை வளர் பிறை (உத்தான-ப்ரபோதன) ஏதாதசி, ஆகியவை முக்கியமானவை, மார்கழி வளர்பிறை (வைகுண்ட) ஏகாதசி இவற்றை விட மிகவும் முக்கியமானது , ஏகாதசி என்ற சொல்லுக்குப் பதினோராம் நாள் என்று பொருள். ஞானேந்திரியங்கள் ஐந்து. வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம் ஆகிய கர்மேந்திரியங்கள் ஐந்து. மனம் ஒன்று ஆகிய பதினொன்றையும் பெருமாளுடன் ஐக்கியப்படுத்தி மனதில் பெருமாளை நினைத்திருப்பதே ஏகாதசி விரதம், உடலாலும் உள்ளத்தாலும் பெருமாளுடன் ஒன்றியிருப்பதே உபவாஸம் எனப்படும், எட்டு வயதுக்கு மேற்பட்டவர்களும், என்பது வயதுக்கு உட்பட்டவர்களும் இந்த ஏகாதசி விரதத்தை மேற்கொள்ளலாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்த நாளில் விரதம் இருப்பவர்களுக்கு ஸ்ரீவைகுண்ட நாதனே பரமபத வாசலைத் திறந்து வைத்து, அருள் பாலிக்கிறார் என்கிறது புராணம்,

இந்த உத்ஸவம் அனைத்து விஷ்ணு ஆலயங்களிலும் கொண்டாடப் படும் என்றாலும் குறிப்பாக ஸ்ரீரங்கத்தில் விசேஷமாகக் கொண்டாடப் படுகிறது, அதாவது இன்று அதிகாலை 4 மணி அளவில் பரம பத வாசல் திறக்கும், இன்று நம்பெருமாள் சிவப்பு நிற ரத்ன அங்கியில் சேவை ஸாதிப்பார்.

கஸ்தூரீ திலகத்துடன், ரத்னங்கியிலே சிவப்பு, வெள்ளை, பச்சை, முத்து , பவளம் என்று எல்லா நிற மணிகளும் மின்ன, மெல்லிய சல்லாத் துணி இடையினில் உடுத்தி, கிளி மாலையுடன் , கோல விளக்கே , கொடியே, விதானமே என்று ஆண்டாள் பாடியபடி அழகாக எம்பெருமான் தங்க தோளுக்கினியாளில் எழுந்தருளி விடியர்காலையில் அரங்கன் பட்டர் வம்சத்தினரின் வேத விண்ணப்பம் கண்டருளி, அரையர்கள் திருவாய்மொழி தொடங்க, இரத்தின அங்கியில் சிம்ம கதியில் நமக்கு வைகுண்ட பேற்றை வழங்க, ரங்கா, ரங்கா என்ற கோஷத்துடனே எழுந்தருளுவார்,

பக்தர்களின் பக்தி அலை நடுவே பரமபத வாயிலை அடைந்து பிரஜா நதி மண்டபத்தில் வேத முழக்கம் கேட்டருளி, பரமபத வாசல் திறக்க, பரமபத நாதனாய் ஸேவை சாதித்து, திருமாமணி மண்டபம் என்னும் ஆயிரங்கால் மண்டபம் சேர்ந்து, நாள் முழுதும் ஸேவை ஸாதிப்பார், பொது ஜன சேவையும், அரையர் சேவையும் நடைபெறும், இரவு திருமாமணி மண்டபத்திலிருந்து புறப்பட்டு வீணை வாத்தியத்துடன் மூலஸ்தானத்தை அடைவார் நம் பெருமாள், பாக்யமுள்ளவருக்கே இந்த ஸேவை கிட்டும்.

லக்ஷ்மீ நிவாஸே ஜக³தாம் நிவாஸே ஹ்ருத் பத்³ம வாஸே ரவி பி³ம்ப³வாஸே

க்ருபா நிவாஸே கு³ணப்³ருந்த³வாஸே ஸ்ரீரங்க³ராஜே ரமதாம் மநோ மே

ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் இருப்பிடமானவரும், உலகமனைத்திலும் ஊடுருவி இருப்பவரும், குறிப்பாக ஸூரிய மண்டலத்தின் நடுவில் இருப்பவரும், கருணைக்கு இருப்பிடமானவரும், குணக் கூட்டங்க ளுக்கு இருப்பிடமானவரும், ஸ்ரீரங்கத்தில் வஸிப்பவருமான அந்த ரங்கராஜாவினிடத்தில் என் மனது ரமிக்கட்டும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆருத்ரா தரிசனம் 02-01-2018 செவ்வாய்

பட்டினத்தார் துறவு பூண்டபின் அவரது கணக்குப் பிள்ளையான சேந்தன் என்பவர் விறகு வெட்டிப் பிழைத்து வந்தார். அந்த நிலையிலும் அவரது விருந்தோம்பல் நிற்கவில்லை. அவரது ஈகை குணத்தைப் பெருமைப்படுத்த ஈசனே அவர் வீட்டுக்கு விருந்தாளியாய் வந்தார். இருந்த அரிசிமாவையும், வெல்லத்தையும் வைத்துக் களியாகச் சமைத்தாள் சேந்தனின் மனைவி. இருக்கும் காய்கறிகளை ஒன்றாக்கி தாளகமும் (ஏழுதான்கூட்டு) தயாரித்து சாப்பாடு போட்டார். சாப்பிட்டு விட்டு வழிச் செலவுக்கும் கேட்டு வாங்கிக் கொண்டார் ஸபாபதி. மறு நாள் தில்லை ஆலயத்தில் இறைந்து கிடந்த களியைக் கண்டு அர்ச்சகர்கள் பதறினர். களி சிந்திய வழியைத் தொடர்ந்து சென்ற அவர்கள், சேந்தனாரின் வீட்டை அடைந்து நடந்ததை அறிந்து புளகித்தனர். அன்று முதல் திருவாதிரைத் திருநாளில் களிசெய்து நிவேதிப்பது பழக்கமாயிற்று.

ஆர்த்ரா என்றால் நனைதல் என்று பொருள். சிவபிரான் அருள் மழையில் மக்கள் நனையும் நாள் இது. பதஞ்சலி, வியாக்ரபாதர் என்கிற இருபக்தர்களுக்காக சிதம்பரத்தில் நடராஜர் ஆனந்தத்தாண்டவம் ஆடிய புனித தினம். கன்னிப்பெண்களுக்கு எண்ணெய் தேய்த்து நீராட்டி, நுனி இலையில் களியும், தாளகமும் இட்டு சாப்பிடச் செய்த பிறகே, பிறர் சாப்பிடுவது மரபு. நடராஜர் காலடியில் உள்ள முயலகன் போல் அஹந்தை கொண்டு புத்தி தடுமாறி நடப்பவரை சித்ஸபேசன் அடக்கி ஒடுக்கி களியாக்கி விடுவார் என்பதையும், அடியார்களுக்குக் களிப்பைத் தருவார் என்பதையும் குறிக்க களி தரப்படுகிறது. கறுப்பு என்பது சனியின் நிறம். இன்றும் ஆலயங்களில் ஆருத்ரா தரிசனத்தன்று சனி உபாதையிலிருந்து நீங்க கறுப்பு மை பிரஸாதமாக வழங்கப்படுகிறது.

दर्शनात् अभ्रसदसि தர்ஶனாத் அப்ரஸதஸி என்றவாறு (சிதம்பரத்தில்) இன்று காலையில் நடைபெறும் மஹாபிஷேகத்தையும், ஆனந்த நடனத்தையும், கண்டவர்களுக்கு மறு பிறவி இல்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மார்கழியும் திருவாதிரையும்

அஸ்வினி முதலிய 27 நக்ஷத்திரங்களில் ஐந்தாம் நக்ஷத்திரத்துக்கு மிருகசீர்ஷம் என்று பெயர். ஒவ்வொரு நக்ஷத்திரத்திற்கும் இன்ன இன்ன விதமான உருவம் என்று ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மிருகசீர்ஷ நக்ஷத்திரம் ஒரு மானின் தலை போன்ற அமைப்புள்ளதான மூன்று நக்ஷத்திரங்கள் சேர்ந்திருக்கும். மிருகம் என்னும் பதத்திற்கு மான் என்று பொருள். சீர்ஷம் அல்லது சிரஸ் என்ற பதத்துக்குத் தலை என்று பொருள். எந்த மாஸத்தின் பூர்ணிமை மிருகசீர்ஷ நக்ஷத்திரத்தில் வருகிறதோ, அந்த மாஸத்திற்கு மார்க்கசீர்ஷ மாஸம் என்று பெயர். மார்க்கசீர்ஷம் என்னும் பெயரே சிதைந்து, ஷகரம் ழகரம் ஆகித் தமிழில் மார்கழி எனப்படுகிறது.

மார்கழி மாதத்திற்கு என்ன விசேஷம்? : மானிடர்களுக்கு 30 நாழிகை இரவு. தேவமானப்படி தேவலோகத்துக்கு நம் நாளில் 180 நாள் ஒரு பகலும், 180 நாள் ஓர் இரவும் ஆகும். மேரு சிகரத்தில் உள்ளது சுவர்க்கலோகம். பூமியின் வடதுருவத்துக்கு நேர்மேலாக உள்ளது மஹாமேரு. ஒருவன் வடதுருவத்தில் நின்றானானால் அவனுக்கு ஆறு மாதம் பகலாகவும் ஆறு மாதம் இரவாகவும் இவ்வுலகிலேயே காணப்படும். அவனை ஸூர்யன் பிரதக்ஷிணம் செய்வதாகவே அவனுக்கு அவ்விடத்தில் தோன்றும். வட துருவமே உத்தர மேருவின் ஸ்தானம் என்பதற்கு-ஸர்வேஷாம் ஏவ வர்ஷாணாம் மேரு உத்தரத ஸ்தித: என்னும் வாக்யம் பிரமானம். பூவுலகத்திலுள்ள பாரத வர்ஷம் முதலிய எல்லா வர்ஷங்களுக்கும் வடக்கில் மேரு இருக்கிறது. ருத்ராக்ஷ ஜப மாலையிலும் 108 மணிகள் தவிர, தனியாக நீண்டிருக்கும் ஒரு ருத்ராக்ஷத்திற்கு மேரு என்று பெயர். அது போலக் கோளாகாரமான இந்த பூலோகத்தின் வடதுருவத்திற்கு மேலே நம் திவ்யத்ருஷ்டிக்குக் கோசரமானபர்வதம் மஹாமேரு பர்வதம். அந்த மஹாமேரு பர்வதத்தின் சிகரத்திலுள்ளது தேவலோகம். தேவலோகத்தில் வஸிப்பவர்களுக்கு நம்முடைய ஆறு மாதம் (தை முதல் ஆனி முடிய) பகலும், நம்முடைய மற்ற ஆறு மாதம் (ஆடி முதல் மார்கழி முடிய) இரவும் ஆகிறது. மார்கழி மாதம் முடிந்தவுடன் உத்தராயணம் பிறக்கிறது. அப்பொழுதுதான் தேவ லோகத்திற்குப் பகல் ஆரம்பிக்கிறது. மார்கழி மாதமே தேவ லோகத்துக்கு உஷக்காலம் அல்லது வைகறை. தேவர்கள் எல்லாரும் உஷக்காலத்தில் பகவானுடைய ஸந்நிதிக்குச் சென்று அவருக்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸுப்ரபாதம் சொல்லி அவருடைய திவ்யமங்கள மூர்த்தியானது திருக்கண் மலர்ந்தருளியதும் முதல் ஆராதனம் செய்கின்றார்கள். இதுவே திருப்பள்ளி எழுச்சி. இதையே ஆழ்வார், நாயனார் முதலிய அடியார்கள் திவ்யப்ரபந்தங்களில் ஆனந்தத்துடன் பாடியிருக்கிறார்கள் இந்தத் திருப்பள்ளி எழுச்சி என்னும் தமிழ்ச் சொல்லே சிதைவுபட்டு, திருப்பக்ஷி என்று வழங்கி வருகிறது. தேவர்களுடைய உஷக்காலமும் மானிடர்களுடைய உஷக்காலமும் இம்மார்கழி மாதத்தின் விடியற்காலத்தில் ஒன்றி விளங்குகிறது. ஸமுத்திரத்தில் கிழக்கே போக வேண்டிய ஒரு பாய்கட்டிய கப்பல் மேல்காற்று அடிக்கும் பொழுது புறப்பட்டால் எவ்வளவு சுலபமாய்ப் போய்ச் சேர்ந்துவிடும் என்பது அனுபவத்தில் தெரிந்த விஷயம். தேவ லோகத்தினரின் மனம் முழுவதும் பகவானிடத்தில் ஈடுபட்டிருக்கும் தெளிவான இந்த உஷக்காலத்தில் நம்முடைய இச்சிறுமனம் என்னும் ஓடத்தையும் பகவானிடத்தில் சேரும் வண்ணம் ஓடவிட்டால் நமது பகவத் யாத்திரை எவ்வளவு சுலபமாக இருக்கும்!

வேதத்தில் ஒவ்வொரு நக்ஷத்திரத்துக்கும் ஒவ்வொரு தேவதை சொல்லப்பட்டிருக்கிறது.உதாரணமாக அநுஷ நக்ஷத்திரத்துக்கு மித்திரன் என்னும் ஸூர்யன். ஆருத்ரா நக்ஷத்திரத்துக்கோ ருத்ரன் என்னும் பரம சிவனே தெய்வம். மார்கழி மிருகசீர்ஷ நக்ஷத்திரத்தில் வரும் பூர்ணிமை அநேகமாய் அதற்கடுத்த நக்ஷத்திரமாகிய ஆருத்ரா நக்ஷத்திரத்திலேயே பூர்த்தி அடையும். சிவனுடைய நக்ஷத்திரமானது பூர்ண சந்திரனுடன் சேரும்பொழுது தேவ-மனுஷ்ய-மானப்படி உஷக்காலம் கூடுவதே ஆருத்ரா தரிசனம். அதுவே மார்கழி மாதம் திருவாதிரை நாள். ஆருத்ரா என்னும் சொல்லுக்கே நனைந்தது என்று பொருள். அலங்கார ப்ரியோ விஷ்ணு: அபிஷேக ப்ரிய: சிவ: " என்ற முதுமொழியின்படி எப்பொழுதும் தீர்த்தத்தில் நனைந்து அபிஷிக்தராய் இருப்பதே பரமசிவனின் லக்ஷணம். உள்ளம் நனைந்து உருகுவதே பக்தி. நனைவதே தாபத்திற்குச் சாந்தி. பூர்ண சந்திரனே கண்ணுக்கு சாந்தி. விடியற்காலமே உடல் தாபத்திற்குச் சாந்தி. பரமசிவனே உள்ளத்தாபத்திற்குச் சாந்தி. தாபம் நிறைந்த நமது சித்தத்திலும் குடியிருப்பதால் தான் இவ்வளவு தணிப்பையும் அவர் தாங்குகிறார். தலையிலோ சீதளமான கங்கை, அமிர்தமயமான சந்திரன், உலராத சடை, கையிலும் காலிலும் சில்லென்னும் பாம்புகள் இடது பாகம் முழுவதும் கருணையே உருக்கொண்டவளான பனிமலை மகள், மாதமோ மார்கழி மாதம், காலமோ விடியற்காலம்! இவ்வளவும் போதாவென்றோ உடல் முழுவதும் சந்தன அபிஷேகம்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸத்குரு த்யாகராஜர் 171ஆவது ஆராதனை 06-01-2018 சனி

தமிழ்நாட்டில் தஞ்சை ஜில்லா திருவாரூரில் 4-5-1767ல் (ஸர்வஜித் சித்திரை 25 திங்கள் பூச நக்ஷத்திரம் கடக லக்னத்தில்) ராமப்ரும்ஹம் என்பவரின் இரண்டாவது குமாரராக பிறந்தவர்- 18 வயது நிறையும் முன்பே காஞ்சீபுரம் ஸ்ரீராமக்ருஷ்ண யதீந்த்ரர் என்னும் மஹான் இவருக்கு ஸ்ரீராம (தாரக) மந்த்ரத்தை உபதேசித்து, 96-கோடி ஜபம் செய்யுமாறுஅருளினார்.அதுமுதல் 21 வருடங்கள் தீவிரமாக தொடர்ந்து நாள்தோறும், 1,25,000 நாமா வீதம் 96 கோடி ராமநாமம் ஜபம் செய்தார்

இதன் மஹிமையால் ஸ்ரீ ஸீதா ராமசந்திர மூர்த்தி ப்ரத்யக்ஷமாகவும் (நேரிலும்) கனவிலும் தரிசனம் தந்து அனுக்ரஹித்துள்ளார். வால்மீகி முனிவருக்கு ஸ்ரீராமாயணத்தை உபதேசித்த நாரதமஹரிஷியே, அவருடைய அம்சமாய் தோன்றிய த்யாகராஜருக்கு, இசைஞானத்தை அருளுவதற்காக ஒரு ஸந்யாசி (துறவி) வடிவில் வந்து ஸ்வரார்ணவம், நாரதீயம் என்ற ஸங்கீத இலக்கணநூல்களை அளித்து மறைந்தார். அவ்வப்போது தன்னுடைய ஆனந்த அநுபவங்களை ஸ்ரீராமரிடம் க்ருதிகள் மூலம் தெரிவிப்பார் ஸ்ரீ த்யாகராஜர்.

ஸங்கீதத்தையே பரப்ருஹ்மமாக உபாஸித்து இறுபத்து நான்காயிரம் கீர்த்தனங்களை பாடியுள்ள இவரின் பெருமையை கேட்டு தஞ்சை சரபோஜி ராஜாவும், திருவனந்தபுரம் ஸ்வாதித் திருநாள் மஹாராஜாவும் ஆஸ்தான வித்வானாக அழைத்த போதும் ராஜ ஸேவையை விரும்பாது ராம ஸேவையையே விரும்பியவர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இவருடைய அண்ணா ஒருஸமயம் கோபத்தால் இவர் வழிபட்டுவந்த ஸ்ரீ ராம விக்ரஹத்தை காவேரியில் புதைத்து விட,ஸ்ரீ த்யாகராஜர் எங்குதேடியும் விக்ரஹம் கிடைக்காமல் தவிக்க, ஸ்ரீ ராமரே ஸ்வப்னத்தில் தோன்றி, தான் இருக்குமிடத்தையுணர்த்த, இவரும் அதை எடுத்து ப்ரதிஷ்டை செய்து பூஜித்து வந்தார் . திருப்பதியில் ஸ்ரீனிவாஸன் இவரது கீர்த்தனத்திற்க்கு திரையை விலக்கி கொண்டு செவி சாய்த்தார். ஸ்ரீ த்யாகராஜஸ்வாமிகள் கடைசியில் 1847ஆம் வருஷம் ஸன்யாசாச்ரமம் ஏற்று அதே வருஷம் புஷ்ய பஹுள பஞ்சமியில் கீர்த்தனம் பாடிக்கொண்டே பஞ்சநத (முக்தி) க்ஷேத்ரமான திருவையாற்றில் காவேரிக்கரையில் ஸ்ரீ ராமசரணத்தையடைந்தார். அன்னாரது ஸமாதி அமைந்துள்ள திருவையாற்றில் இவரது 171ஆம் ஆண்டு ஆராதனை ஸங்கீத வித்வான்களாலும் பக்தர்களாலும் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

கூடாரைவல்லி 11-01-18 வியாழன்



கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா! உன்
தன்னைப் பாடிப்பறை கொண்டு யாம்
பெறும் ஸம்மானம் நாடுபுகழும் பரிசினால்
நன்றாக சூடகமே தோள் வளையே தோடே
செவிப் பூவே பாடகமேயென்றனைய
பல்கலனும் யாமணிவோம் ஆடை
யுடுப்போம் அதன் பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.

இன்றுமார்கழி27ஆம் நாள்.திருப்பாவை 27ஆம் பாடல் கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா என்று தொடங்குகிறது. ஆகவே இன்று கூடாரைவல்லி என்று அழைக்கப் படுகிறது. இன்று இல்லங்களில் சர்க்கரைப் பொங்கல் செய்து ஸ்ரீ விஷ்ணுவுக்கு நிவேதனம் செய்வது சிறப்பு, மேலே குறிப்பிட்ட பாடலில் ஒரு வரி பாற்சோறு மூட நெய் பெய்து முழங்கை வழி வார என்பது, பாற்சோறு மூட ஊற்றிய நெய் முழங்கை வழியாக வழியும்படி என்பது பொருள். எனவே தான் இன்று அனைத்து ஆலயங்களிலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவுக்கு சர்க்கரைப் பொங்கல் நிவேதனம் செய்யப்படுகிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

போகிப் பண்டிகை 13-01-2018 சனி



மார்கழி மாதம் கடைசி நாள் மங்களஸ்நாநம் செய்து அனைத்து கறிகாய்களையும்,பக்ஷணங்களையும் பகவானுக்கு நிவேதித்து பிறகு சாப்பிட வேண்டும். முன்பு கோகுலத்தில் ஸங்கராந்தியில் மூன்று நாட்கள் கோபர்கள் தேவேந்திரனை பூஜிக்க ஆரம்பித்தனர். ஸ்ரீகிருஷ்ணன் இந்திரனது கர்வத்தை அடக்க இந்த்ர பூஜையைநிறுத்திகோ ப்ராம்ஹணர்களை பூஜிக்கும்படி செய்தார், இந்திரன் கோபங்கொண்டு ஏழுநாள் உக்ரமாக மழை பொழிந்தான்,ஸ்ரீகிருஷ்ணன் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து பசுக்களையும் யாதவர்களையும் காப்பாற்றினார். தேவலோகத்திலிருந்து காமதேனு வந்து பூஜிக்கும்படிச் செய்தார், தேவேந்திரனும் அகந்தை அடங்கி ஸ்ரீ கிருஷ்ணனிடம் சரணடைந்தான். போகத்தை அனுபவிப்பவன் போகி. தேவேந்திரனே போகானுபவத்தில் சிறந்தவன். அவனைப் போல் நாமும் ஸகல போகங்களையும் அனுபவிக்க வேண்டுமென்று இன்று இந்திரனை நினைத்துப் பூஜை செய்ய வேண்டும், வீட்டையெல்லாம் சுத்தம் செய்து, பழைய மண் பாண்டங்களையெறிந்து, மிகப்பழையவற்றைத் தீயிலிட்டு, மங்களஸ்நானம் செய்து, விசேஷ விருந்துண்டு போகிப்பண்டிகையை கொண்டாட வேண்டும்.

தனுர் மாத பூஜா முடிவு 14-01-18 ஞாயிறு

மார்கழி மாதம் முழுவதும் அதிகாலையில் செய்து வந்த தனுர் மாத (உஷ:கால) பூஜை இன்றுடன் முடிவடைகிறது,மாதம் முழுவதும் பூஜை செய்ய இயலாதவர்கள், இன்று ஒரு நாளாவது ஸூரியன் உதய மாவதற்கு முன்னர் ஸ்னானம் செய்து ஸ்ரீ மஹாவிஷ்ணுவை அபிஷே கம் முத்கான்னம்(பொங்கல்) நிவேதனம் செய்து பூஜை செய்ய வேண்டும், நாளை (15-01-18 திங்கள்)முதல் வழக்கப்படி ஸூர்ய உதயத்துக்குப் பின்பு நித்ய கர்மாக்களை முடித்த பின்னரே வீட்டில் பூஜைகளைச் செய்ய வேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தை -மாதப்பிறப்பு

உத்தராயணபுண்யக்காலம்

14-01-18 ஞாயிறு மதியம் 01.44 மணி (த்ருக்)

14-01-18 ஞாயிறு மாலை 4.30 மணி (வாக்)

☛தை மாதம் பிறக்கும் நக்ஷத்திரம்: மூலம்

	1 மகர சுக்ர 7 விரு-செவ் 9 மகர-புத 25 கும்ப-சுக் 26 கும்- புத		ராஹு
சூரிய கேது			
புதன் சுக்ர சனி	சந்தி	செவ் குரு	

ஒவ்வொரு மாதப்பிறப்புக்கும் ஒவ்வொரு (பொருள்) தானம் விசேஷமாகக் கூறப்பட்டுள்ளது, **ஷப்ரவேசே தாரூணாம் தானமக்ரே ஸ்தயேவ ச ஜ்ஜஷ ப்ரவேஸே தா³ரூணாம் தா³ந மக்³நேஸ் ததை²வ ச** என்பதாக ஜ்ஜஷம் எனப்படும் மகர ராசியில் ஸூர்யன் பிரவேசிக்கும் தை மாத ஸங்க்ரமணத்தில் (ஹோமங்கள் யாகங்கள் நடைபெறும் இடங்களில்) அக்னி நன்கு எரிவதற்குத் தேவையான விறகு ஸமித்து வரட்டி முதலியவற்றை வாங்கி தானம் செய்வது சிறந்தது, மேலும் ஆலயம், பள்ளிக்கூடம்-வேதபாடசாலை போன்ற தர்மஸ் தாபனங்களுக்கோ அல்லது தேவையானவர்களுக்கோ நன்கு வெளிச்சம் ஏற்படத் தேவையான தீபங்களை (மின் ஸாதனங்களை) வாங்கித் தரலாம், சக்தியுள்ள அனைவரும் (குறிப்பாக ஆயில்யம்-கேட்டை-ரேவதி நக்ஷத்ரங்களில் பிறந்தவர்கள்)தை மாதப்பிறப்பான இன்று காலை

மமஜன்மர்க்ஷே ஸூர்யஸங்க்ரமண ப்ரயுக்த தோ³ஷ ஶாந்த்யர்த்²தம் அக்³நே: (அபேக்ஷித) தா³ரூணாம் தா³நம் கரிஷ்யே

மம ஜன்மர்க்ஷே ஸூர்ய ஸங்க்ரமண ப்ரயுக்த தோ³ஷ ஶாந்த்யர்த்²தம் அக்³நே: (அபேக்ஷித) தா³ரூணாம் தா³நம் கரிஷ்யே என்று ஸங்கல்பித்துக் கொண்டு தானம் செய்யும் பொருட்களை அல்லது அதற்குத் தேவையான திரவியத்தை கையில் வைத்துக்கொண்டு

மம ஜன்மர்க்ஷே ஸூர்ய ஸங்க்ரமண ப்ரயுக்த தோ³ஷ ஶாந்த்யர்த்²தம் உத்தராயண புண்யகாலே அக்³நே: தா³ஹகத்வ ஸம்பாத³காநி இமாநி தா³ரூணி (தத் ஸம்பாத³காநி ஹிரண்யானி) ஸம்ப்ரத³தே³

என்று சொல்லி ஸ்வாமி ஸன்னிதியில் தரையில் வைத்து விட்டு நமஸ்காரம் செய்யவும், பிறகு அதை எடுத்து யாரோ ஒருவருக்கு -அல்லது ஆலயத்துக்கு தந்துவிட வேண்டும், இதனால் நல்ல கண்பார்வை வாழ்க்கையின் இருள் விலகி நல்ல ப்ரகாசம்,நீண்ட ஆயுள், மாதம் முழுவதும் நிம்மதி, பணவரவு, நல்லோர் சேர்க்கை மனஸ்சாந்தி ஆகியவை ஏற்படும் என்கிறது நிர்ணயஸிந்து புஸ்தகம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தைப்பொங்கல்- 14.01.18 ஞாயிறு

ஸூர்யன் வடக்கு நோக்கிப் பயணம் செய்யும் உத்தராயண காலமான தை முதல் நாள் பொங்கல் திருநாள். ஸூரியன்உதிக்காவிட்டால் சந்திரனுக்கு ஒளி இல்லை. பயிர்கள் வாடிவிடும். நீர்நிலைகளிலுள்ள நீரை மேகத்திற்கு எடுத்துச்செல்பவை ஸூரியனின் உஷ்ண கிரணங்கள் தான், ஆகவேதான் நிலத்தில் விளைந்த கரும்பு, நெல், இஞ்சி, மஞ்சள் கொத்து, வாழை என்று அந்த வருஷம் விளைந்த விளைச்சலை (பெர்ருட்களை) வைத்து, தேர்போல் கோலமிட்டு, காவியிட்டு, புத்தரிசியிட்டு முதலில் பாலைப் பொங்கவிட்டு சர்க்கரைப் பொங்கல் செய்து, ஸூரியனை பூஜிக்க வேண்டும், ஸூர்யதேவன் சிவனின் அஷ்டமூர்த்திகளில் ஒருவர், பரமேஸ்வரனுக்கும் மஹாவிஷ்ணுவுக்கும், பராசக்திக்கும் வலது கண்ணாக பிரகாசிப்பவர், உலகத்தில் மழை, பணி, வெப்பம் ஆகியவை ஸூரியனின் ஸஞ்சாரத்தால்தான் உண்டாகிறது. ஸூரியனும் சந்திரனும் ப்ரத்யக்ஷ தேவதைகள், ஸூர்யனின் ரதத்திற்கு ஒரு சக்கிரம், பன்னிரண்டு ஆரக்கால்கள், வேதத்தின் ஏழு சந்தஸ்களும் தேரின் ஏழு குதிரைகளாக இருக்கின்றன , அந்தக்குதிரைகள் வாரத்தின் ஏழு நாட்களையும், பன்னிரண்டு ஆரக்கால்கள் பன்னிரண்டு மாதங்களையும் குறிக்கின்றன. அந்த ரதத்தில்வாலகில்யர் எனப்படும் விரலளவே உள்ள 60,000 ரிஷிகள் ஸூரியனை ஸ்தோத்ரம் செய்கின்றார்களாம், (இது அறுபது நாழிகளைக்குறிக்கும்). ஸூர்யனின் தேர் சக்கரத்தின் மேல்பாகம் உத்தராயணத்தையும், கீழ்பாகம் தக்ஷிணாயணத்தையும் குறிக்கின்றது. இவ்வாறு காலஸ்வரூபமாகவும் வேத ஸ்வரூபமாகவும் இருக்கும் ஸூர்யன் ப்ருஹ்மா விஷ்ணு ருத்ரர்(சிவன்) ஆகிய மும்மூர்த்திகளின் ஸ்வரூபம். முறையாக இவரை இன்று பூஜிப்பதாலும், ஆதித்ய ஹ்ருதயம் போன்றவற்றால் ஸூர்ய நமஸ்காரம் செய்வதாலும் நல்ல உடல்வலிமை, நீண்டஆயுள், மனஸ்சாந்தி ,முதலியன கிட்டும். விவாஹமான ஆண்களும் பெண்களும் தம்பதிகளாக ஸத்குரு மூலம் ஸூர்ய நமஸ்கார மந்திர ஜபத்தை உபதேசம் செய்து கொள்ள இன்று மிகச்சிறந்த நாள் ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிறப்பான நேரங்கள்

தை மாதம் எப்போது பிறக்கிறது? ஸூர்யன் தனுர் ராசியிலிருந்து மகர ராசியில் நுழைவதையே தைமாதம்பிறக்கும் நேரம் எனக்குறிப்பிடுகிறோம். த்ருக்கணித பஞ்சாங்கப்படி 14-01-18 ஞாயிறு மதியம் 01.44 மணிக்கும், வாக்கிய (பாம்பு) பஞ்சாங்கப்படி 14-01-18ஞாயிறு மாலை 4.30மணிக்கும் தை மாதம் பிறக்கிறது.

☛மாதப்பிறப்பு தர்ப்பணம் எப்போது ?:

अयने विंशति:पूर्वे मकरे विंशति: परे அயநே விம்சதி: பூர்வே மகரே விம்சதி: பரே என்கிறபடி உத்தராயணத்தில் தை மாதம் பிறந்து 20 நாழிகை வரை புண்ய காலம் .அந்த நேரத்தில்தான் பித்ருக்களுக்கு தர்பணம் ஸூர்யபூஜை தானங்கள் ஆகியவற்றைச் செய்ய வேண்டும். ஆகவே 14-01-18 ஞாயிறு மதியம் 01.44 மணிக்கு மேல் (வாக்ய பஞ்சாங்கத்தை அனுஸரிப்பவர்கள் மாலை 04.30 மணிக்கு மேல்) ஸூரிய பூஜைக்கு முன்னர் உத்தராயண புண்ய கால (தைமாதப் பிறப்பு) தர்பணம் செய்யலாம்,

☛ அடுப்பில் பொங்கல் பானை வைப்பது எப்போது?

14-01-18 ஞாயிறு மதியம் மணி 01.44 மணிக்கு மேல் 02.40 மணிக்குள் ஸூரிய ஹோரையில் ஸ்ரீஸூர்யநாராயண பூஜைக்கு நிவேதனம் செய்ய புதிய அடுப்பில் புதிய பொங்கல் பானையை வைக்கலாம்.

☛ ஸ்ரீ ஸூர்ய (நாராயண) பூஜை எப்போது?:

14-01-18 ஞாயிறு (பித்ருக்களுக்கு தர்ப்பணம் முடிந்த பிறகு) மதியம் ஸுமார் 01.44 மணி முதல் 02.44 மணிக்குள் ஸூரிய ஹோரையில் ஸூர்ய நாராயணருக்கு (ஸங்க்ராந்தி) பூஜை செய்ய சிறந்த நேரம்.மேலும் இன்று நாள் முழுவதுமே ஸூர்யனை பூஜைகள் ஸ்தோத்ர பாராயணம் அர்ச்சனை முதலியவற்றால் ஆராதிப்பது ஆரோக்யத்தைத் தரும்

☛காணும் பொங்கல் காக்காய்க்கு கனுப்பிடி வைப்பது எப்போது?

15-01-18 திங்கள் (பொங்கல் மறுநாள்) ஸூர்யோதயத்துக்கு முன் அதிகாலை 05.40 மணி முதல் 06.40 மணிக்குள் சுக்ர ஹோரையில் உடன் பிறந்த ஸஹோதரர் நன்மைக்காக பெண்கள் கனுப்பிடி வைக்க மிகச் சிறந்த நேரம்.

☛ மாட்டுப்பொங்கல் அன்று கோபூஜை எப்போது?

15-01-18 திங்கள் மாட்டுப்பொங்கலன்று இந்திரனுக்கும் கோவுக்கும் (பசுவிற்கும்) பூஜையை காலை 06.40 மணி முதல் 07.40 மணிக்குள் சுக்ர ஹோரையில் அல்லது 10.40 முதல் 11.40 மணிக்குள் குரு ஹோரையில் செய்வது உத்தமமாகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மகர ஸங்க்ராந்தி
தைப்பொங்கல்
14-01-2018 ஞாயிறு
ஸ்ரீ ஸூர்ய நாராயண பூஜா ஸங்கல்பம்

ஆசமனம் செய்து, பவித்ரம் போட்டுக் கொண்டு, சுக்லாம்பரதரம்- ஓம்பூ:- மமோபாத்த+ ப்ரீத்யர்த்தம் வரை வழக்கம் போல் சொன்னபிறகு,

शुभे शोभने मुहूर्ते आद्यब्रह्मण: द्वितीयपरार्धे श्वेतवराह कल्पे वैवस्वत मन्वन्तरे अष्टाविंशति तमे कलियुगे प्रथमेपादे जम्बूद्वीपे भारतवर्षे भरतखण्डे मेरो: दक्षिणे पार्श्वे शकाब्दे अस्मिन् वर्तमाने व्यावहारिके प्रभवादि षष्टि संवत्सराणां मध्ये हेमलम्बनाम संवत्सरे दक्षिणायणे हेमन्ततौ धनुर्मासे कृष्ण पक्षें त्रयोदश्यां शुभतिथौ भानुवासर ज्येष्ठानक्षत्र वृद्धियोग गरजकरण एवङ्गुण विशेषण विशिष्टायां त्रयोदश्यां शुभतिथौ मम सहकुटुम्बस्य श्री सूर्य नारायण प्रसाद सिध्यर्थं मकर सङ्क्रमण पुण्यकाले कल्पोक्त प्रकारेण सपरिवार श्री सूर्य नारायण पूजां करिष्ये

ஶுபே[1] ஶோப[1]னே முஹூர்தே ஆத்[3]யப்ரஹ்மண: த்[3]வீதீய பரார்த்[3]தே[1], ஶ்வேத வராஹ கல்பே வைவஸ்வத மன்வந்தரே, அஷ்டாவிம்ஶதி தமே, கலியுகே[3], ப்ரத[2]மே பாதே[3] ஜம்பூ[3] த்[3]வீபே பா[1]ரத வர்ஷே ப[1]ரத க[2]ண்டே மேரோ: த[3]க்ஷிணே பார்ஶ்வே ஶகாப்[3]தே[3] அஸ்மிந் வர்த்தமானே வ்யாவஹாரிகே ப்ரப[1]வாதி[3] ஷஷ்டி ஸம்வத்ஸராணாம் மத்[1]யேஹேமலம்ப[3]நாம ஸம்வத்ஸரே தக்ஷிணாயனே ஹேமந்தர்தௌ தனுர் மாஸே கிருஷ்ண பக்ஷே த்ரயோதஶ்யாம் ஶுப[1]திதௌ[2], பானு வாஸர ஜ்யேஷ்டா நக்ஷத்ர வ்ருத்தி யோக கரஜ கரண ஏவங்கு[3]ண விஶேஷண விஶிஷ்டாயாம் த்ரயோதஶ்யாம் ஶுப[1]திதௌ[2], மம ஸஹ குடும்பஸ்ய ஶ்ரீ ஸூர்ய நாராயண ப்ரஸாத[3] ஸித்[1]யர்த்த[2]ம் மகர ஸங்க்ரமண புண்யகாலே கல்போக்த ப்ரகாரேண ஸபரிவார ஶ்ரீ ஸூர்யநாராயண பூஜாம்

வைதிகஶ்ரீ வாசகர்களுக்கு
மகர ஸங்க்ராந்தி பொங்கல் நல்வாழ்த்துக்கள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸ்ரீ ஸூர்ய நாராயணனின் பெருமை

ப்ரவேதவராஹ கல்ப ஆரம்பத்தில் விராட் புருஷனின் கண்ணிலிருந்து ஸூர்யன் தோன்றினார் என்கிறது புருஷ ஸூக்தம், ஆனால் புராணங்கள் வைவஸ்வத மன்வந்தரத்தில் கஸ்யபரிடமிருந்து அவதரித்தார் என்கின்றன. ஸூர்யன் கோடிக்கணக்கான தனது கிரணங்களால் உலகத்துக்கு ஒவ்வொரு விதமான நன்மையைச் செய்கிறார். ஸூர்யனின் சில கிரணங்கள் மழையைத் தருகின்றன. சில கிரணங்கள் ஒவ்வொரு ப்ராணிக்கும் ஜீவ சக்தியை அளிக்கின்றன. சில கிரணங்கள் நோய்களை அகற்றி உடலை வளர்க்கின்றன. சில கிரணங்கள் உலகை பீடிக்கும் கெட்டத் தன்மையை அழிக்கின்றன. சில கிரணங்கள் ஒவ்வொரு பொருளிலுமுள்ள அசுத்தத்தை அகற்றி சுத்தம் செய்கின்றன. சில கிரணங்கள் ஆசைகளை நிறைவேற்றுகின்றன. அனைத்து நன்மைகளையும் தருபவர் எனினும் நோயை அகற்றி ஆரோக்யம் தருவதிலும் மிகச்சிறந்தவர் இவர். ஆதலால்தான் **ஆரோக்யம் பாஸ்கராதிச்சேத்** என்கிறது சாஸ்திரம், நோயால் பீடிக்கப்பட்டவர் யஜுர் வேதம் அருணம் முதல் ப்ரச்னம் ஸூர்ய நமஸ்காரம் கூறி நமஸ்கரித்தால் ஒருமண்டலத்தில் கொடிய நோயும் அகலும், குஷ்டரோகம், கேன்ஸர், எய்ட்ஸ் முதலான வியாதிகள் கூட ஸூர்ய நமஸ்காரத்தால் விலகும்.நோயை அகற்ற மருந்தே வேண்டாம் ஸூர்யகிரணங்களே போதும் என்கிறார்கள் விக்ஞானிகள், கண் நோயை போக்குவதில் சூரிய கிரணத்திற்கு உள்ள சக்தியை வேதம் நமக்குக் கூறி உபதேசிக்கிறது. கிருஷ்ணரின் புத்ரர் ஸாம்பனுக்கு ஏற்பட்ட குஷ்டரோகத்தை ஸாம்பர் ஸூர்ய நமஸ்காரம் ஸூரிய பூஜை செய்து அகற்றிக்கொண்டார் என்கிறது புராணம்., வெட்ட வெட்ட முளைக்கும் ராவணணின் தலையைக் கண்டு குழப்பத்துடனும் கவலையுடனும் இருந்த ஸ்ரீராமர் அகஸ்தியரின் ஆக்ஞைப்படி ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்ரம் சொல்லி ஸூர்யனை ப்ரார்த்தித்து ஸ்ரீராவணனை ஸம்ஹரித்தார் என்கிறது ஸ்ரீமத்ராமாயணம், ஸத்ராஜித் என்னும் பக்தனுக்கு ஒவ்வொரு நாளும் 20பாரம் அளவு தங்கத்தைத் தரும் ஸ்யமந்தக மணியைத் தந்தார் ஸூர்யன் என்கிறது ஸ்ரீபாகவதம், ஸூர்யமண்டலத்தில் இடையே ஸ்ரீமன் நாராயணர் ஸாம்ப பரமேஸ்வரர் இருப்பதாகவும், மும்மூர்த்திகளின் வடிவானவர் ஸ்ரீஸூர்யர் என்றும் ஸந்தியாவந்தனமந்திரம் கூறகிறது.ப்ரும்மலோகம்செல்லும் துறவிகளும் போரில் இறந்தவீரரும் ஸூர்ய மண்டலம் வழியாகச் செல்கிறார், ஸூர்ய அஷ்டாக்ஷரீ மந்திரம் வேதத்தில் கூறப்படுகிறது. ஸூர்ய உபாஸனை மூலம் அனைத்தையும் பெறலாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மாட்டுப் பொங்கல்- இந்திர பூஜை -கோ பூஜை

(15-01-2018 திங்கள்)



பாற்கடலிருந்து காமதேனு தோன்றினாள். அவளுடைய ஸந்ததி இருக்கும் லோகம் கோ லோகம் எனப்படும். ராதாகிருஷ்ணர் அங்குகோக்களுடனும் கோபிகைகளுடனும் ஆனந்தமாக வஸிக்கின்றார். அந்த கோக்களின் பாலினாலும், நெய்யினாலும் வேதமந்த்ரத்தை கூறி யாகம் செய்கின்றனர். யாகத்தினால் மழையும், மழையால் உலக க்ஷேமமும் உண்டாகிறது. பசு காமதேனு அம்ஶமானதால் அதன் ஒவ்வொரு உறுப்பும் மானிடர்களுக்குப் பேருபகாரம் செய்வது மிகவும் சிறப்புடையது. பகவானுடைய அபிஷேகத்திற்கு பால் முதலியவைகளும், பசுக்களிடமிருந்து கிடைக்கினறன. ஸகல தேவர்களும் பசுவினது சரீரத்தில் வந்து தங்கியுள்ளனர். ஸ்ரீதேவி பஶுவின் ப்ருஷ்ட பாகத்தில் வஸிப்பதால் காலையில் எழுந்தவுடன் கோவின் பின்புறத்தை தரிசிக்க வேண்டும். அதிதி (விருந்தாளி) யாரும் அகப்படாத நாளில் கோவை அதிதியாக பாவித்து அன்னமளிக்கலாம். இன்று மாடுகளை வில்வ இலை, வெட்டி வேர், சிவப்பு பூசணி (பறங்கி)ப்பூ , முதல் நாள் சூரிய பூஜை செய்த புஷ்பம், ஆகியவை சேர்ந்த, சிறிது பன்னீர் விட்ட நீரில் மாடு கன்றுகளைக் குளிப்பாட்ட வேண்டும், கொம்புகளுக்கு வர்ணம் பூசி, குப்பி அணிவித்து, துண்டையும் கட்டி, கழுத்திலும் கால்களிலும் சலங்கை அணிவித்து, நெற்றியிலும், உடம்பிலும் சந்தனம், மஞ்சள் பூசி, குங்குமம் இட்டு, உடம்பில் கோடி வஸ்திரம் போட்டு, கோவை பூஜை செய்ய வேண்டும், மேலும் பசுமாடு வைத்திருப்பவர்கள் மாட்டுக் கொட்டகையை அலம்பி கோலமிட்டு காவி பூசி சாணத்தால் பிள்ளையார் பிடித்து கணபதியையும் தேவேந்திரனையும் சர்க்கரைப் பொங்கல் நிவேதித்து பூஜை செய்ய வேண்டும், பசு மாடுகளை புஷ்பம் போட்டு நமஸ்கரித்து ப்ரார்தித்துக் கொள்ள வேண்டும்.

பஶுமாட்டுக்கு புல் கொடுக்கும் போது சொல்லத்தக்க ஸ்லோகம்:

सौरभेयः सर्वहिताः सर्वपाप प्रणाशिनः।

प्रतिगृह्णन्तु मे ग्रासं गावः त्रैलोक्य मातरः।।

ஸௌரபே[1]ய: ஸர்வ ஹிதா: ஸர்வ பாப ப்ரணாஶிந:

ப்ரதிக்[3]ருஹ்ணந்து மே க்[3]ராஸம் கா[3]வ: த்ரைலோக்ய மாதர:

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கானும்(கனுப்) பொங்கல் (15-01-18 திங்கள்)

ஸங்கராந்திக்கு அடுத்த நாள் கனுப் பண்டிகை, பெண்களுக்கு இது விசேஷமான நாள். இன்று காலையில் ஸூர்ய உதயத்துக்கு முன்பாக (05.40 முதல் 6.40 மணிக்குள்) கனுப்பிடி வைக்கலாம், நதிக்கரையில் அல்லது ஆலயங்களின் குளக்கரையில் அல்லது மொட்டைமாடி போன்ற திறந்த வெளியில் அல்லது வீட்டின் முற்றத்தில் கோலம் போட்டு செம்மண் இட்டு ஒவ்வொருவரும் இரண்டு மஞ்சள் இலை அல்லது வாழை இலையை நுனி கிழக்கு முகமாகப் பரப்பி, முதல் நாள் சாதத்தில் சிறிது மஞ்சள், குங்குமம் போட்டு, தனித் தனியாக மஞ்சள் சாதம், சிகப்பு சாதம், வெள்ளைச்சாதம் என (ஒவ்வொரு வகையிலும் ஏழு அல்லது ஒன்பது உருண்டைகள்) பிடித்து வைத்துக்கொண்டு, ஒவ்வொன்றிலும், ஒற்றைப்படை வரிசையாக மூன்று வரிசை வைத்து, அக்ஷதை புஷ்பம் போட்டு,

காக்கைப்பிடி, கனுப்பிடி வைத்தேன், காக்காய்க்கெல்லாம் கல்யாணம்

என்று கூறி தேங்காய் உடைத்து, கற்பூரம் ஏற்றி, நமஸ்கரித்து, ஆரத்தி எடுக்க வேண்டும். (முதல்நாளே பொங்கல் பானையில் கட்டிய மஞ்சளை எடுத்து, மூன்று அல்லது ஐந்து வயதான ஸுமங்கலிப்பெண்களிடம் தந்து, நெற்றி மற்றும் திருமாங்கல்ய சரட்டில் மூன்று முறை தேய்த்து (தீற்றி)க் கொள்ளவேண்டும்)கனுப்பிடி வைத்த பிறகு ஸ்நானம் செய்து புது வஸ்த்ரம் அணிய வேண்டும். பிறந்த வீடு செழிக்கவும் தனது ஸஹோதரர் நீடூழி வாழவும் பெண்கள் இதைச் செய்கிறார்கள் இன்று யமதர்ம ராஜா காக்கை வேஷமிட்டு வந்து சாப்பிடுவதாக ஐதீகம். இவ்வாறு கணுப்பிடி வைத்து தங்களின் நலனை வேண்டும் தங்கள் ஸஹோதரிகளுக்கு உடன் பிறந்த ஸஹோதரர்கள் மஞ்சள் குங்குமம் தக்ஷிணை தந்து தௌரவிக்க வேண்டும்,

தை அமாவாஸை- 16-01-2018 செவ்வாய்

ஸூர்யனும் சந்திரனும் இணையும் நாளே அமாவாஸை, ஸமுத்ர ஸ்னானம், ஜபம் தானம் முதலிய அனைத்து புண்ய காரியங்களும் செய்ய உகந்த நாள், குறிப்பாக பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்யவேண்டிய நன்நாள் இது. இதனால் நமது முன்னோர்கள் அருள் கிட்டும், இன்று செய்யும் அனைத்து தானமும் தர்ம கார்யங்களும் மற்ற நாட்களில் செய்வதால் ஏற்படும் புண்யங்களைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அதிக புண்யங்களை வாரி வழங்கும், ஸூரியன் மகர ராசியில் தை மாதத்தில் உத்தராயணத்தில் வரும் அமாவாஸையான இன்று இயன்றளவு புண்யத்தை சேமிக்க முயற்சிப்போம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

துன்பங்களை விலக்கும் மாக ஸ்னானம்

18-01-2018 முதல் 15-02-2018 முடிய

மாக ஸ்னானம் என்றால்? பௌர்ணமியும் மகா நக்ஷத்ரமும் சேர்ந்தால் அதற்கு மாக மாதம் எனப்பெயர். தை மாதம் சுக்ல பக்ஷ ப்ரதமை முதல் மாசிமாதம் அமாவாஸை வரையுள்ள நாட்களே (18-01-2018 வ்யாழன் முதல் 15-02-18 வரை) மாக மாதமாகும். இந்த மாக மாதத்தில் ஒவ்வொரு நாளும் ஸூரியன் உதயமாவதற்கு சிறிது முன்பாக அருகிலுள்ள நதி, குளம், ஏரி, கிணறு, ஆகியவற்றிலோ அல்லது தனது வீட்டிலோ முறைப்படி செய்யப்படும் ஸ்னானமே **மாக ஸ்னானம்** எனப்படும்.

மாக ஸ்னானம் செய்வதால் என்ன பயன்?: மாக ஸ்னானத்தை முறையாகச் செய்வதால் நாம் அறிந்தும் அறியாமலும் செய்த ஏராளமான பாவங்கள் விலகி உடல் வலிமை நீண்ட ஆயுள் மன நிம்மதி முதலிய நன்மைகள் உண்டாகும் .

மாக ஸ்னானம் யார் யார் செய்யலாம்?: ஜாதி மத பாகுபாடின்றி அனைத்து ஜாதியினரும் குழந்தைகள் ஆண்கள் பெண்கள் பெரியவர்கள் என அனைவரும் இதைச்செய்து பயனடையலாம்.

மாக ஸ்னானம் எப்பொழுது செய்ய வேண்டும்?: மாகமாதம் முழுவதும் (30 நாட்களிலும்) ஒவ்வொரு நாளும் சூரியன் உதயமாவதற்கு முன்பாக, மாக ஸ்னானம்செய்ய வேண்டும். இயலாதவர்கள் மூன்று, இரண்டு, அல்லது ஒருநாளாவது மாக ஸ்னானத்தைச் செய்யலாம்.

மாகஸ்னானம்செய்யும் வழி முறை: காலை ஸுமார் நான்கு அல்லது நாலரை மணிக்கு எழுந்து தந்த தாவனம் செய்து (பல்தேய்த்து விட்டு) நெற்றியில் விபூதி திருமண் குங்குமம் முதலிய திலகம் தரித்து கொண்டு, கையில் சொம்பு குடம் ஆகிய ஏதாவது ஒரு ஜலபாத்ரத்தை எடுத்துக்கொண்டு அருகிலுள்ள காவேரீ நதி, குளம், ஏரி, கிணறு, அல்லது தனது வீட்டிலோ ஸ்னானம் செய்யும் இடத்திற்குச்சென்று கிழக்கு நோக்கி அமர்ந்து கொண்டு கீழ்கண்ட முறையில் ஸங்கல்பம் செய்து கொள்ள வேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸங்கல்பம்: **नक्षत्रे राशौ जातस्य (जातायाः) मम समस्त दुरित क्षयार्थं मकरस्थे रवौ माघमास पुण्यकाले अस्मिन् शुभोदके माघस्नानमहं करिष्ये** நக்ஷத்ரே ராஶௌ ஜாதஸ்ய(ஜாதாயாः) மம ஸமஸ்த து³ரித க்ஷயார்த்த²ம் மகரஸ்தே² ரவௌ மாக³மாஸ புண்யகாலே அஸ்மின் ஶுபோ⁴த³கே மாக⁴ ஸ்னான மஹம் கரிஷ்யே என்று ஸங்கல்பம்சொல்லி விட்டு கிழக்கு நோக்கி கீழ்க்கண்ட ஸ்லோகம் சொல்லி மௌனமாக ஸ்னானம் செய்ய வேண்டும்.

माघ मासे रटन्त्याऽऽपः किञ्चिदभ्युदिते रवौ ।

ब्रह्मघ्नं वा सुरापं वा कं पतन्तं पुनीमहे ।

मकरस्थे रवौ माघे गोविन्दाऽच्युत माधव।

स्नानेनाऽनेन मे देव! यथोक्त फलदो भव ।

कृष्णाच्युत! निमज्जामि प्रभातेऽस्मिन् शुभोदके।

अनेन माघ स्नानेन सुप्रीतो मां समुद्धर ।

दुःख दारिद्रय नाशाय श्रीविष्णो स्तोषणाय च।

प्रातःस्नानं करोम्यद्य माघे पापविनाशनम् ।

1) மாக⁴மாஸே ரடந்த்யாப: கிஞ்சி த³ப்⁴யுதி³தே ரவௌ
ப்ரஹ்மக்⁴நம் வா ஸுராபம் வா கம் பதந்தம் புநீமஹே

2) மகரஸ்தே² ரவௌ மாகே⁴ கோ³விந்தா³ச்யுத! மாத⁴வ!
ஸ்நாநேநா(அ)நேந மே தே³வ! யதோ²க்த ப²லதோ³ ப⁴வ

3) க்ருஷ்ணா(அ)ச்யுத! நிமஜ்ஜாமி ப்ரபா⁴தே(அ)ஸ்மின் ஶுபோ⁴த³கே
அநேந மாக⁴ ஸ்நாநேந ஸுப்ரீதோ மாம் ஸமுத்³த⁴ர

4) து:க்க² தா³ரித்ர்ய நாஶாய ஸ்ரீவிஷ்ணோஸ் தோஷணாய ச
ப்ராத: ஸ்நாநம் கரோம்யத்³ய மாகே⁴ பாப விநாஶநம்

இதன் பொருள் : மாகமாதத்தில் ஸூர்யன் சிறிது உதித்துள்ளபோது அனைத்து நதிகளின் ஜலங்களும் ஒன்று சேருகின்றன. அந்த ஜலங்கள் ப்ருஹ்மஹத்தி ஸுராபானம் முதலிய பாபங்களைச் செய்தவர்கள் உட்பட யாரைத்தான் தூய்மைப் படுத்தாது? (அனைவரையும் தூய்மைபடுத்தும் என கருத்து) (1) ஹே மாதவ ! ஹே கோவிந்த! ஹே அச்யுத! ஸூரியன் மகரராசியில் உலா வரும் மாக மாதத்தில் நான் செய்யும் இந்த மாக ஸ்னானத்தால் சாஸ்த்ரங்களில் கூறிய பலனை எனக்குத் தந்தருள்வாயாக(2)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஹே க்ருஷ்ண! ஹே அச்யுத! ப்ரபாதமெனும் இந்தவிடிகாலை நேரத்தில் தூய்மையானஜலத்தில் ஸ்னானம் செய்கிறேன். இந்த மாக ஸ்னானத்தால் த்ருப்தியடைந்த நீ என்னை அனைத்து இன்னல்களிலிருந்தும் காப்பாற்றுவாயாக (3) மாகமாதத்தில் இன்று துக்கம் மற்றும் தரித்ரம் விலகுவதற்காகவும் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் ப்ரீதிக்காகவும் பாபங்களைப் போக்கும் காலை ஸ்னானத்தைச் செய்கிறேன் (4) என்று சொல்லி ஸ்னானம் செய்து விட்டு **अद्यकृत माघ स्नानाङ्गं अर्घ्यप्रदानं करिष्ये** 'அத்³ய க்ருத மாக⁴ ஸ்னானாங்க³ம் அர்க்⁴ய ப்ரதா³னம் கரிஷ்யே'என்று சொல்லி கீழ்க்கண்ட ச்லோகங்களைச் சொல்லி மும்மூன்று முறை ஜலத்தால் அர்க்யம் விட வேண்டும்.

तपस्यर्क्कोदये नद्यां स्नात्वाऽहं विधिपूर्वकम् ।

माधवाय ददामीद मर्घ्यं धर्मार्थ सिद्धिदम्। माधवाय नमः इदमर्घ्यम्(३)

सवित्रे प्रसवित्रे च परं धाम्ने नमोस्तु ते ।

त्वत्तेजसा परिभ्रष्टं पापंयातु सहस्रधा । सवित्रे नमः इदमर्घ्यम् (३)

गङ्गा यमुनयोर्मध्ये यत्र गुप्ता सरस्वती ।

त्रैलोक्य वन्दिते!देवि त्रिवेण्यर्घ्यं ददामि ते । त्रिवेण्यै नमः इदमर्घ्यम्(३)

अनेन अर्घ्य प्रदानेन माधवादयः प्रीयन्ताम् ।।

1)தபஸ்யர்க்கோத³யே நத்³யாம் ஸ்நாத்வா(அ)ஹம் விதி⁴ பூர்வகம்

மாத⁴வாய த³தா³மீத³ மர்க்⁴யம் த⁴ர்மார்த்த² ஸித்³தி⁴த³ம்,

மாத⁴வாயநம: இத³ மர்க்⁴யம் இத³ மர்க்⁴யம் இத³ மர்க்⁴யம்

2)ஸவித்ரே ப்ரஸவித்ரே ச பரம் தா⁴ம்நே நமோஸ்து தே,

த்வத் தேஜஸா பரிப்⁴ரஷ்டம் பாபம் யாது ஸஹஸ்ரதா⁴

ஸவித்ரே நம: இத ³மர்க்⁴யம் இத³ மர்க்⁴யம் இத³ மர்க்⁴யம்

3)கங்கா யமுநயோர் மத்⁴யே யத்ர கு³ப்தா ஸரஸ்வதீ

த்ரைலோக்ய வந்திதே தே³வி த்ரிவேண்யர்க்⁴யம் த³தா³மி தே

த்ரிவேண்யை நம: இத³ மர்க்⁴யம் இத³ மர்க்⁴யம் இத³ மர்க்⁴யம்

அநேந அர்க்க்⁴ய ப்ரதா³னேன மாத⁴வாத³ய: ப்ரீயந்தாம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இதன் பொருள்: தபஸ் எனப்படும் மாகமாதத்தில் ஸூரியன் உதிக்கும் போது நதியில் நான் முறையாக ஸ்னானம் செய்து மாதவனின் பொருட்டு தர்மம் (அறம்) அர்த்தம் (பொருள்) ஆகியவற்றின் லித்தியைப் பெற்றுத்தரும் அர்கியத்தைத் தருகிறேன் (1) அனைவரையும் அவரவர் செயல்களைச் செய்யத் தூண்டுபவராகவும் அனைத்து தேவர்களின் இருப்பிடமாகவும் உள்ள ஸூரியனுக்கு எனது நமஸ்காரம். ஹே ஸூர்யனே ! என்னுடைய பாபங்கள் அனைத்தும் உனது தேஜஸ்ஸால் (வெப்பத்தால்) கொளுத்தப்பட்டதாக ஆயிரக்கணக்கில் சிதறியதாக ஆக வேண்டும்.(2) கங்கைக்கும் யமுனைக்கும் இடையில் மறைந்து செல்லும் ஸரஸ்வதி நதியே ! மூன்று உலகங்களாலும் வணங்கப்படும் த்ரிவேணி தேவியே! உனக்கு இந்த அர்க்யத்தைத் தருகிறேன்.(3)இந்த அர்க்யப்ரதானத்தால் மாதவன் முதலியவர்கள் ஸந்தோஷம் அடையட்டும். இவ்வாறு முறையாக ஸ்னானம் செய்து விட்டு ஸூர்யனை நோக்கி நின்று கொண்டு

दिवाकर! जगन्नाथ! प्रभाकर! नमोस्तु ते ।परिपूर्णं कुरुष्वेदं माघ स्नानं मया कृतम्

தி[3]வாகர ஜகந்நாத[2] ப்ரபா[4]கர நமோஸ்து தே,

பரிபூர்ணம் குருஷ்வேத[3]ம் மாக[4] ஸ்னானம் மயா க்ருதம்

என்று பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும். பிறகு சக்திக்குத் தக்கவாறு நதிக் கரையில் இருக்கும் ஏழைகளுக்கு தக்ஷிணை முதலியவற்றைத் தர வேண்டும். இந்த மாக ஸ்னானத்தை மாதம் முழுவதும் (29நாட்களிலும்) செய்ய முடியா விட்டாலும் ஒன்று, இரண்டு, நாட்களாவது செய்யலாம். அதிகாலையில் செய்ய முடியாவிட்டாலும் ஸூரிய உதயம் ஆனபிறகும் கூட (ஸந்த்யா வந்தனம் செய்து விட்டு)ச் செய்யலாம். ஒவ்வொரு நாளும் அறிந்தும் அறியாமலும் ஏராளமான பாவங்களைச் செய்து வருவதின் பலனாக அவ்வப்போது துன்பங்கள் உண்டாகின்றன. ஆகவே அவ்வப்போது சில நல்ல கர்மாக்களால் பாவங்களைப் போக்கிக்கொள்ள வேண்டும். மாக ஸ்னானத்தால் அனைத்து பாபங்களும் விலகி இவ்வுலகிலும் மேலுலகிலும் நன்மையை அடையலாம்.

बालाश्च तरुणाः वृद्धाः नर नारी नपुंसकाः ।

स्नात्वा माघे शुभे तीर्थे प्राप्नुवन्ति ईप्सितं फलम् ।।

பா[3]லாஸ் ச தருணா: வ்ருத்தா[4]: நர நாரீ நபும்ஸகா:

ஸ்நாத்வா மாகே[4] ப[4]பே[4] தீர்த்தே[2] ப்ராப்நுவந்தி ஈப்ஸிதம் பலம்

சிறுவர்கள், வாலிபர்கள் முதியோர்கள், ஆண்கள், பெண்கள் ஆகிய அனைவரும் மாக மாஸத்[illegible]ரூத்த ஜலத்தில் முறையாக ஸ்னாநம்செய்வதால் அவர்கள் விரும்பும் [illegible]ருளை (பலனை) அடைவார்கள் என்கிற இந்த வாக்கியப்படி அனைத்து நன்மைகளையும் மாக ஸ்னானத்தால் பெறலாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸ்யாமளா (தேவி) நவராத்திரி

(18-01-18 வியாழன் முதல் 26-01-18 வெள்ளி)

ஒவ்வொரு வருஷமும் வஸந்த நவராத்திரி, ஶரந் நவராத்திரி, வாராஹீ நவராத்திரி, ஸ்யாமளா நவராத்திரி, என்பதாக நான்கு தேவீ நவராத்ரிகள் என்று கூறுகிறது தேவீ பாகவதம், இவைகளுக்குள் மாக மாதம் சுக்லபக்ஷ பிரதமை முதல் நவமி வரையுள்ள ஒன்பது நாட்கள் ஸ்யாமளா நவராத்திரி எனப்படும், ஸ்யாமளா என்னும் தேவி, ராஜ ஸ்யாமளா, மாதங்கீ, மந்த்ரிணீ போன்ற பல்வேறு ரஹஸ்யமான பெயர்களில் அழைக்கப்படுகிறாள்,

ஸ்ரீ லலிதா தேவி பண்டாஸுரனுடன் போர் புரியப் புறப்பட்டபோது லலிதா தேவியின் கையிலுள்ள மனஸ் தத்துவமான கரும்பிலிருந்து தோன்றியவளே ஸ்யாமளா தேவி, லலிதாவின் மந்த்ரிணியாக பிரகாசிக்கும் இவள் லலிதாவுக்கு சக்தியைத் தந்தவள், லலிதாதேவியின் அக்ஷர சக்தியாக விளங்குபவள், ஸரஸ்வதியைப் போன்றே அருளுபவள் என்றாலும் கூட வெளியிலுள்ள கலைகளுக்கும் திறமைகளுக்கும் அதிபதி ஸரஸ்வதி தேவி, ஸ்யாமளா தேவியோ தஹராகாசத்தில்(உள்ளே)உள்ள கலைகளுக்கு அதிபதி, ஸ்யாமளா க்ஷேத்ரம் எனப்படும் மதுரையில் மீனாக்ஷியாக பிரகாசிப்பவள் ஸ்யாமளா தேவிதான்.

இந்த ஸ்யாமளா நவராத்திரி ஒன்பது நாட்களிலும் ராஜஸ்யாமளா (மாதங்கீ) தேவியின் மந்திரங்களை குருமுகமாக உபதேசம் செய்து கொண்டு ஜபம் செய்யலாம், வீணையைக் கையில் தாங்கிக் கொண்டு காக்ஷிதரும் ஸ்யாமளா தேவீ ஸங்கீதக் கலைக்குத் தலைவியாவாள், ஸங்கீதம் கற்றுக் கொள்பவர்களுக்கும் ஸங்கீதத்தை உபாஸிப்பவர்களுக்கும் குறிப்பாக வீணை வாஸிப்பவர்களுக்கும் விசேஷமாக அருள் புரிபவள் ஸ்யாமளா தேவி, ஆகவே இந்த நவராத்திரி ஒன்பது நாட்களும் ஸங்கீத இசைப்பாடுவதாலும் ஸங்கீதத்தைக் கேட்பதாலும் ஸங்கீதத்தில் ஈடுபட்ட இசை வல்லுனர்களை அம்மனாக பாவித்து தாம்பூலம் தக்ஷிணை தந்து மகிழ்விப்பதாலும் ஸ்யாமளா தேவியின் பூரண அருள் கிடைக்கும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சந்திர தரிசனம் 18-01-2018 வியாழன்

ஒவ்வொரு மாதமும் சுக்ல பக்ஷ த்விதீயையன்று மாலையில் மூன்றாம் பிறை சந்திரனை கீழ்க்கண்ட ச்லோகம் சொல்லி தரிசனம் செய்வதால் மன நிம்மதியும், தெளிவான ஞானமும் ஆரோக்யமும், தம்பதிகளுக்குள் ஒற்றுமையும் ஏற்படும்

த³தி⁴ ஶங்க² துஷாராப⁴ம் க்ஷீரோ தா³ர்ணவ ஸம்ப⁴வம்,

நமாமி ஶஶிநம் ஸோமம் ஶம்போ⁴ர் மகுட பூ⁴ஷணம்

வர-சூந்த சதுர்த்தி 21.01.2018 ஞாயிறு

माघ शुक्ल चतुर्थ्यां तु कुन्द पुष्पै: सदाशिवम् ।

सम्पूज्य यो हि नक्ताऽऽशी सम्प्राप्नोति श्रियं नर: ।।(நிர்ணய-162)

மாக⁴ ஶுக்ல சதுர்த்²யாம் து குந்த³புஷ்பை: ஸதா³சிவம்

ஸம்பூஜ்ய யோ ஹி நக்தாஶீ ஸம்ப்ராப்நோதி ஶ்ரீயம் நர:

மாகஶுக்ல சதுர்த்தியான இன்று பகலில் உபவாஸம் இருந்து மாலையில் குந்தம் எனப்படும் வெள்ளை மல்லிகைப்பூவால் உமையுடன் ஸதாஶிவரை (சிவனை) பூஜை செய்து அஷ்டோத்தரம் ஸஹஸ்ரநாமம் முதலியவற்றால் வீட்டிலோ ஆலயத்திலோ அர்ச்சனை செய்து இரவில் சிவனுக்கு நிவேதனம் செய்ததை ப்ரஸாதமாக சாப்பிடலாம், இதனால்குறைவற்ற ஐஸ்வர்யம் (செல்வம்) கிட்டும்.

வஸந்த -ஸ்ரீ-பஞ்சமீ 22.01.2018 திங்கள்

माघमासे नृप श्रेष्ठ! शुक्लायां पञ्चमी तिथौ ।

रति कामौ तु सम्पूज्य कर्तव्य: सुमहोत्सव: ।। (ஸ்ம்ருதி கௌஸ்-479)

மாக⁴மாஸே ந்ருப ஶ்ரேஷ்ட² ஶுக்லாயாம் பஞ்சமீ திதௌ²

ரதி காமௌ து ஸம்பூஜ்ய கர்தவ்ய: ஸுமஹோத்ஸவ:

மாக ஶுக்லபஞ்சமிக்கு ஸ்ரீ பஞ்சமீ என்றும் வஸந்த பஞ்சமீ என்றும் பெயர், இன்று மல்லிகைப்பூவால் மஹாலக்ஷ்மியுடன் மஹாவிஷ்ணுவையும், ரதி தேவியுடன் மன்மதனையும் படத்திலோ விக்ரஹத்திலோ பூஜை செய்து பலவித பக்ஷணங்களுடன் நிவேதனம் செய்ய வேண்டும், ஸங்கீதம் நர்த்தனம் நாம ஸங்கீர்த்தனம் ஆகியவற்றால் குடும்பத்தில் அனைவரையும் ஸந்தோஷப் படுத்த வேண்டும், குறிப்பாக புதிதாக விவாஹமான தம்பதிகளை மன்மதன் ரதி தேவியாக பாவித்து அவர்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கித்தந்து ஸந்தோஷப்படுத்த வேண்டும், கணவன் மனைவி இருவரும் ஒருவருக் கொருவர் அன்பாக இருக்க இன்று செய்யப்படும் மன்மதன் ரதிதேவீ பூஜை மிகவும் பயனுள்ளதாக அமையும். குடும்பத்தில் ஒற்றுமையும் ஸந்தோஷமும் நீடிக்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ரத ஸப்தமீ

24.01.2018 புதன்

ரதம் என்றால் தேர், ஏழுகுதிரைகள் பூட்டப்பட்டு அருணன் என்னும் ஸாரதியால் (தேரோட்டியால்) செலுத்தப்படும் ரதத்தில் இடைவிடாமல் ஸஞ்சரிக்கும் சூரியன், தனது ரதத்தை (தேரை), தெற்கு திசையிலிருந்து விலக்கி வடக்கு திசையை நோக்கித் திருப்புவதால் இன்றைய நாளுக்கு **ரத ஸப்தமீ** என்று பெயர். கஸ்யப மஹரிஷிக்கும் தேவர்களின் தாயாரான அதிதிக்கும் புத்ரராக ஸூரியன் அவதரித்த (பிறந்த) நாள்தான் ரதஸப்தமீ.

இன்று அதிகாலையில் ஸ்னானம் செய்யும் ஸமயத்தில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என அனைவரும் ஏழு எருக்கு இலைகளுடன் மங்கள அக்ஷதை (அரிசி), அருஹம்புல், கோமயம் (பசுஞ்சாணி), மஞ்சள் பொடி, ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்து தலையில் வைத்துக் கொண்டு, ஸூர்யனை (கிழக்கு திசையை) நோக்கியவாறு கீழ்க்கண்ட மந்திரத்தைச் சொல்லி ஸ்னானம் செய்வதால், ஸூரியன் நமக்கு அருள்புரிவார் என்றும், அதனால் நாம் முன் ஏழு பிறவிகளில் செய்த பாவங்கள் அகலும் என்றும் புராணங்கள் கூறுகின்றன. நாமும் இன்று இவ்விதம் முறையாக **அர்க்கபத்ர (எருக்கு இலை) ஸ்னானம்** செய்து கண் கண்ட கடவுளான ஸ்ரீ ஸூரிய பகவானின் அருளை அடைவோமாக!,

ரத ஸப்தமீயன்று தலையில் 7 எருக்க இலைகளை வைத்துக் கொண்டு ஸ்னானம் செய்யும்போது சொல்ல வேண்டிய ஸ்லோகங்கள்.

सप्तसप्ति प्रिये! देवि! सप्त लोकैक पूजिते !!
सप्त जन्माऽर्जितं पापं हर सप्तमि! सत्वरम् ।।
यत् यत् कर्मकृतं पापं मया सप्तसु जन्मसु ।
तन्मे रोगश्च शोकश्च माकरी हन्तु सप्तमी!।।
नौमि सप्तमि! देवि! त्वां सप्त लोकैक मातरम् ।
सप्ताऽर्क पत्र स्नानेन मम पापं व्यपोहय ।।

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

1.ஸப்த ஸப்திப்ரியே ! தே³வி! ஸப்த லோகைக பூஜிதே!
ஸப்த ஜன்மார்ஜிதம் பாபம் ஹர ஸப்தமி ! ஸத்வரம்

2.யத்³ யத் கர்ம க்ருதம் பாபம் மயா ஸப்தஸு ஜன்மஸு
தன்மே ரோக³ம் ச ஶோகம் ச மாகரீ ஹந்து ஸப்தமீ

3.நௌமி ஸப்தமி ! தேவி ! த்வாம் ஸப்தலோகைக மாதரம்
ஸப்தா(அ)ர்க்க பத்ர ஸ்னானேன மம பாபம் வ்யபோஹய!

(1) ஏழுகுதிரைகள் பூட்டிய தேருடன்கூடிய ஸூர்யனின் ப்ரியமான தேவியே! ஏழு உலகங்களாலும் பூஜிக்கப்படுபவளே! ஹேஸப்தமிதேவி! ஏழு ஜன்மங்களில் நான் ஸேகரித்துள்ள பாபங்களை விரைவாக அபஹரித்துக்கொள். (2) மகர(தை)மாத ஸப்தமியே!, என்னால் முன் ஏழு ஜன்மங்களிலும் செய்யப்பட்ட 1,முன்பிறவியில், 2, இந்த பிறவியில், 3, மனதால், 4,உடலால், 5,வாக்கால், 6,அறிந்தும் 7,அறியாமலும் செய்தவை என ஏழுவிதமான பாபங்களால் ஏற்பட்ட ஏற்படப்போகும் நோய்களிலிருந்தும், துன்பங்களிலிருந்தும் என்னை விடுவிப்பாயாக. (3) ஹே ஸப்தமி தேவியே! ஏழுலகங்களுக்கும் தாயாரான உன்னை வணங்குகிறேன். ஏழு எருக்க இலைகளால் நான் செய்யும் ஸ்னானத்தால் எனது பாபத்தை போக்கி அருள்புரிவாயாக. இவ்வாறு ச்லோகம் சொல்லி ஸ்னானம் செய்து விட்டு வஸ்த்ரம் உடுத்திகொண்டு 'ரத²ஸப்தமீ ஸ்நானாங்க³ம் அர்க்³ய ப்ரதா³னம் கரிஷ்யே என்று ஸங்கல்பம் கூறிகொண்டு

सप्त सप्ति रथारूढ ! सप्तलोक प्रकाशक। दिवाकर! गृहाणाऽर्घ्यं सप्तम्यां ज्योतिषां पते!

दिवाकराय नमः इदमर्घ्यम् । इदमर्घ्यम् । इदमर्घ्यम्।

ஸப்த ஸப்தி ரதா²ரூட⁴ ! ஸப்தலோக ப்ரகாஶக !

தி³வாகர ! க்³ருஹாணார்க்⁴யம் ஸப்தம்யாம் ஜ்யோதிஷாம் பதே !

தி³வாகராய நம: இத³மர்க்⁴யம், இதமர்க்⁴யம்,இதமர்க்⁴யம்,

ஏழுகுதிரைகள் பூட்டிய தேரில் அமர்ந்திருப்பவரே ! ஏழு உலகங்களுக்கும் ஒளியளிப்பவரே ! ஹே திவாகர ! நக்ஷத்ர மண்டலங்களுக்குத்தலைவரே ! ரதஸப்தமியன்று என்னால் தரப்படும் இந்த அர்க்ய (ஜல)த்தை பெற்றுக் கொள்ளுங்கள். என்னும் மந்த்ரம் சொல்லி சுத்தமான தீர்த்தத்தால் ஸூர்யனுக்கு மூன்று முறை அர்க்யம் தர வேண்டும். மேலும் இன்று வைவஸ்வத மன்வாதி புண்யகாலமாகையால் பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்பவர்கள் இன்று முன்னோர்களுக்கு தர்ப்பணமும் செய்யவேண்டும். இன்று செய்யப்படும் தானங்கள் அளவற்ற பலனைத்தரும். ஆகவே சக்திக்குத் தக்கவாறு ஏழைகளுக்கு தானங்களையும் செய்யலாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பீஷ்ம: என்றால் பயங்கரம் எனப்பொருள், (தனது தந்தை ஸந்தனு மஹாராஜாவுக்காக) யாரும் செய்ய இயலாததான **இறுதிவரை விவாஹமே செய்து கொள்ள மாட்டேன்** என்று பயங்கரமான உறுதிமொழியை ஏற்றதால் தேவவிரதர் என்னும் இவருக்கு **பீஷ்மர்** என்னும் காரணப்பெயர் ஏற்பட்டது, சிறந்த தர்மாத்மாவும், சிறந்த வில்லாளியுமான பீஷ்மர் இறுதிவரை ப்ருஹ்மசாரியாகவே வாழ்ந்து குருக்ஷேத்ரப்போரில் போரிட்டு , உத்தராயணம் (தை மாதம்) பிறந்தபிறகு அஷ்டமி திதியில் மோக்ஷத்தை அடைந்தார். இந்த நன்நாள் தான் பீஷ்மாஷ்டமீ. மிகச்சிறந்த மஹாபுருஷரான பீஷ்மாசாரியருக்கு இவ்வுலகில் பிறந்த அனைவரும் இன்று ஜலத்தால் அர்க்யம் தரவேண்டும் என்கிறது சாஸ்திரம். ஆகவே விவாஹமானவர்கள், மற்றும் ப்ருஹ்மசாரிகள் ஆகிய அனைவரும் (தந்தையுள்ளவரும் கூட) இன்று காலை முறையாக ஸ்னானம் மற்றும் நித்ய கர்மாக்களை முடித்துவிட்டு (காலை 6.30 முதல் 8.20 மணிக்குள்) பீஷ்மருக்கு சுத்தஜலத்தால் கீழ்கண்டவாறு அர்க்யம் தர வேண்டும்.

கிழக்கு நோக்கி அமர்ந்து கொண்டு 'பீஷ்மாஷ்டமீ புண்யகாலே பீஷ்ம தர்பணம் கரிஷ்யே' என ஸங்கல்பம் செய்து கொள்ளவும்.பிறகு பூணூலை நிவீதியாக (மாலையாக)போட்டுக்கொண்டு, ஸுத்த ஜலத்தால் (எள்ளு கலக்காமல்) இரண்டு கைகள் நிறைய ஜலம் எடுத்துக்கொண்டு கீழ்கண்ட ச்லோகம் சொல்லி பீஷ்மருக்கு அர்க்கியம் தரவேண்டும்.

भीष्मः शान्तनवो वीरः सत्यवादी जितेन्द्रियः ।

आभि रद्भि रवाप्नोतु पुत्रपौत्रोचितां क्रियाम् । भीष्माय नमः इदमर्घ्यम्

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பீ⁴ஷ்ம: ஸாந்தநவோ வீர: ஸத்யவாதீ³ ஜிதேந்திரிய:

ஆபி⁴ ரத்பி⁴ ரவாப்நோது புத்ர பௌத்ரோசிதாம் க்ரியாம்

பீ⁴ஷ்மாய நம: இத³ மர்க்⁴யம்-இத³ மர்க்⁴யம்-இத³ மர்க்⁴யம்

சந்தனு மஹாராஜாவின் புதல்வரும், மிகச்சிறந்த வீரரும், எப்பொழுதும் ஸத்யத்தையே பேசுபவரும், ஐந்து இந்த்ரியங்களையும் (புலன்களை) ஜயித்தவருமான பீஷ்மர், இந்த அர்க்யஜலங்களால், புத்ரன் பௌத்ரன் (மகன் பேரன்) ஆகியவர்களால் முறைப்படி செய்யப்பட்ட ச்ராத்தம் தர்பணம் ஆகிய பித்ருகார்யங்களால் ஏற்படும் த்ருப்தியை அடையட்டும். (1)

वैयाघ्रपाद गोत्राय साङ्कृत्य प्रवराय च ।

अपुत्राय ददाम्यर्घ्यं सलिलं भीष्मवर्मणे ।। भीष्माय नम: इदमर्घ्यम्

வையாக்⁴ர பாத கோ³த்ராய ஸாங்க்ருத்ய ப்ரவராய ச

அபுத்ராய த³தா³ம்யர்க்⁴யம் ஸலிலம் பீ⁴ஷ்மவர்மணே-

பீ⁴ஷ்மாய நம: இத³மர்க்⁴யம்-இத³மர்க்⁴யம்-இத³மர்க்⁴யம்

வ்யாக்ரபாத மஹர்ஷியின் குலத்தில் பிறந்தவரும், ஸங்க்ருதி மஹர்ஷியின் வழி வந்தவரும், (தந்தைக்காக விவாஹமே செய்துகொள்ளாமல் இருந்ததால்) புத்ரனில்லாதவருமான, பீஷ்ம வர்ம மஹாராஜாவுக்கு இந்த அர்க்ய ஜலத்தைத் தருகின்றேன்.(2)

गङ्गापुत्राय शान्ताय शन्तनो: आत्मजाय च।

अपुत्राय ददाम्यर्घ्यं सलिलं भीष्मवर्मणे ।।

भीष्माय नम: इदमर्घ्यम्, अनेन अर्घ्यप्रदानेन भीष्म: प्रीयताम्

க³ங்கா புத்ராய ஸாந்தாய ஸந்தநோ: ஆத்மஜாய ச

அபுத்ராய த³தா³ம்யர்க்⁴யம் ஸலிலம் பீ⁴ஷ்ம வர்மணே

பீ⁴ஷ்மாய நம: இத³மர்க்⁴யம், அநேன அர்க்⁴ய ப்ரதா³நேன பீ⁴ஷ்ம:ப்ரீயதாம்

கங்காதேவியின் புதல்வரும், சாந்த வடிவானவரும், ஸந்தனு மஹாராஜாவின் தவப்புதல்வரும், அபுத்ரருமான பீஷ்மாசார்யருக்கு இந்த தூய ஜலத்தால் அர்க்யத்தை ஸமர்பிக்கிறேன், என்னால் தரப்பட்ட இந்த மூன்று அர்க்ய ஜலத்தால் பீஷ்ம மஹாராஜா த்ருப்தியை அடையட்டும். (3) இவ்வாறு முறையாக பீஷ்மருக்கு அர்க்யம் தருவதால் பீஷ்மாசார்யரின் அருளால் அனைத்து நோயும் விலகி நீண்ட ஆயுளும், ஆரோக்யமும், நல்ல ஸந்ததியும், ஸத்யத்தில் பிடிப்பும் ஏற்படும் என்கிறது சாஸ்த்ரம், ஆகவே இந்த நன்நாளில் நாமும் பீஷ்மரை நினைத்து அவருக்கு அர்க்யம் தந்து நன்மையையடைவோம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சனி(கிரஹ) தோஷ பரிஹாரங்கள்

சாந்தி குஸுமாகரம் புஸ்தகப்படி

***नील वस्त्र दानम्** நீல வஸ்த்ர தா³னம்: கறுப்பு அல்லது நீலக்கலருள்ள வஸ்த்ரத்தை (ஆடைகளை) தானம் செய்தல்: அதாவது பொருளாதாரம் கல்வி பதவி ஆகியவற்றில் தன்னை விட கீழ் நிலையிலுள்ளவர்களுக்கு சனிக் கிழமை அல்லது பூச நக்ஷத்ரத்தன்று கறுப்பு அல்லது நீல நிறத்தாலான வேஷ்டி சட்டை புடவை ட்ரஸ் போன்றவற்றை தெய்வ ஸன்னிதியில் தானமாகத் தரலாம்

***विष्णु बिम्ब दानम्** விஷ்ணு பி³ம்ப³தா³னம் தங்கம் அல்லது வெள்ளியால் சாஸ்த்ரீய முறையில் செய்யப்பட்ட ஸ்ரீ விஷ்ணு பிம்பத்தை -விக்ரஹத்தை- தானம் செய்தல், அதாவது ஆலயங்களுக்குத் தேவையான பஞ்ச லோகத்தால்-வெள்ளியால் செய்த ஸ்ரீவிஷ்ணு பிம்பத்தை தானமாகத் தரலாம்

***अयो दण्ड दानम्** அயோத³ண்ட தா³னம் இரும்பாலான தண்டத்தை (தடியை) தானம் செய்தல், வீடு கட்டும் ஏழைகளுக்கு-மாற்றுத் திறனாளிகளுக்கு அல்லது சீர் செய்யப்படும் -புதிதாகக் கட்டப்படும்- ஆலயங்களுக்கு, குறிப்பாக ஆஞ்சனேயர் ஸ்ரீ மஹாவிஷ்ணு ஐயப்பன் ஆலயங்களுக்குத்- தேவையான இரும்பாலான நீண்ட கம்பிகளை வாங்கி தானமாகத் தந்து உதவலாம். மேலும்

माषाश्च तैलं विमलेन्द्र नीलं तिला: कुळुत्था: हि मही च लोहम्
सदक्षिणां चेति वदन्त्यभिज्ञा: तुष्टाय दानं रविनन्दनाय

மாஷாஸ்ச தைலம் விமலேந்த்³ர நீலம்திலா:குளுத்தா:ஹி மஹீ ச லோஹம்
ஸத³க்ஷிணாம் சேதி வத³ந்த்யபி⁴க்ஞா: துஷ்டாய தா³நம் ரவிநந்த³னாய

என்னும் வசனப்படி ★ கறுப்பு எள்ளு, நல்லெண்ணை, எருமை மாடு, இரும்பு, ஶ்யாம (மேக) நிறத்திலுள்ள பசுமாடு, ஆகியவற்றை சிறிது தக்ஷிணையுடன் சேர்த்து ஏழைகளுக்கு தானமாகத் தரலாம், அல்லது மேற்கூறிய பொருட்களை தினஸரி உபயோகத்துக்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

★ஸௌந்தர்யலஹரியிலுள்ள **त्वया हृत्वा वामम्** த்வயா ஹ்ருத்வா வாமம் என்னும் 23ஆவது ச்லோகத்தை தெய்வ ஸன்னிதியில் ஆசாரத்துடன் தினஸரி 19 முறை வீதம் தொடர்ந்து இயன்றவரை பாராயணம் செய்து வரலாம்

***कूर्मो भार्गव पुत्रस्य** கூர்மோ பா⁴ர்க³வ புத்ரஸ்ய என்னும் ஸ்ரீ வேதாந்த தேசிகரின் தசாவதார ஸ்தோத்ரத்தை ஒட்டி, மஹாவிஷ்ணுவின் கூர்மாவதார படத்தை வீட்டில் பூஜையறையில் வைத்து, பசும்பால் நிவேதனம் செய்து பூஜித்து கூர்ம (ஸ்ரீ விஷ்ணு) ஸ்தோத்ரம் சொல்லி நமஸ்கரித்து வரலாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

★ தினஸரி அதிகாலை ஸ்நானம், ஸந்த்யா வந்தனம், வீட்டில் பூஜை, ஹோமம், ஆலய தரிசனம், போன்றவற்றையோ அல்லது வீடு அலுவலக ஸம்பந்தமான வேலைகளையோ செய்துகொண்டு எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பவர்களை சனி தோஷம் பாதிக்காது

★**स्थिरवार व्रतम्** ஸ்தி²ரவார வ்ரதம்:ஸ்காந்த புராணத்தில் சொல்லியபடி ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் அல்லது மாதத்தில் ஒரு சனிக்கிழமையாவது உணவில் உப்பு சேர்த்துக் கொள்ளாமல் சாப்பிட்டு மாலையில் மஹாவிஷ்ணு (ஆலய)தரிசனம் செய்து ஸ்திரவார வ்ரதத்தை பக்தியுடன் கடைபிடிக்கலாம்

★**अङ्ग हीन पङ्कु प्रीतिकरम्** அங்க³ ஹீன-பங்கு-ப்ரீதிகரம்: மாற்றுத் திறனாளிகளுக்கு குறிப்பாக இடுப்புக்குக் கீழேயுள்ள (கால் முதலான) பகுதியில் பாதிப்பை அடைந்த ஊனமுற்றோருக்கு அன்னமளிப்பதும் தேவையான உபகரணங்களை வாங்கித் தருவதும் அவர்களை மகிழ்ச்சியடையச் செய்வதும் சனி கிரஹ தோஷத்துக்கான முக்கியமான பரிஹாரமாகும்

★**स्थिरवार अभ्यङ्गम्**ஸ்தி²ரவார அப்⁴யங்க³ம்: ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் (பெண்கள் வெள்ளியன்று) தவறாது தலை முதல் கால் வரை சுத்தமான நல்லெண்ணையைத் தேய்த்துக் கொண்டு ஸ்நானம் செய்வது சனிகிரஹ தோஷ பரிஹாரமாக அமையும்

★**तिलै तैलाऽभिषेकम्**திலதைலாபி⁴ஷேகம்: ஆலயங்களிலுள்ள ஆஞ்சனேயர் ஐயப்பன் வெங்கடாசலபதி போன்ற தெய்வங்களுக்கு நல்லெண்ணையால் அபிஷேகம் செய்து வைப்பதும் நல்லெண்ணை விளக்கு ஏற்றுவதும் ஓர் சிறப்பான பரிஹாரம்.

★**शबरिगिरि-सप्तगिरि-क्षेत्र यात्रा** ஶப³ரீ-ஸப்தகி³ரி-க்ஷேத்ர யாத்ரா: கேரள மாநிலம் சபரிமலையிலுள்ள ஸ்ரீ ஐயப்பனை த்யானித்து விரதமனுஷ்டித்து நியமத்துடன் உத்திர நக்ஷத்ரத்தன்று தரிசனம் செய்வதும், திருப்பதி மலைக்கு நடந்து சென்று திருவோண நக்ஷத்ரத்தன்று ஸ்ரீ பாலாஜியை தரிசிப்பதும் நாமக்கல் போன்ற க்ஷேத்ரங்களிலுள்ள ஸ்ரீ ஆஞ்சனேயரை சனி அல்லது மூல நக்ஷத்ரத்தன்று தரிசிப்பதும் சனி கிரஹ தோஷ பரிஹாரமாக அமையும்.

★மேற்கூறிய செயல்களை முறையாகச் செய்வது ஸ்ரீ பகவத் கிருபையால் ஏழரை வருஷச் சனி அர்த்தாஷ்டம சனி அஷ்டமச் சனி ஜன்ம சனி போன்ற சனிகிரஹ தோஷத்தை (வீண் பண விரயத்தை) போக்கடித்து நன்மையை ஏற்படுத்தும், குழைந்தைகளின் நன்மை ஆரோக்யம் வேலைக்காரர்களின் அனுகூலம் நீண்ட ஆயுஸ், புகழ், போன்ற பலன்கள் கிட்டும்.

★தன்னிடம் வேலை செய்யும் தொழிலாளிகளை மதித்து மகிழ்வித்து தேவையானவற்றைத் தரும் நபர்களை சனி கிரஹ தோஷம் பாதிக்காது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் கீர்த்தனங்கள் -68

சிதம்பர நடராஜ மாஶ்ரயேஹம் (கேதார ராகம், ஆதி தாளம்)



चिदम्बर नटराज माश्रयेहम् शिवकामीपतिम्
चित् सभापतिम्–चिदम्बर विहारम् शङ्करम्
चिदानन्दकरम् गुरुगुह वरम्–केदारेश्वरम्
विश्वेश्वरम्, कमलापति नुत पदम् शशिधरम्

சித்³ம்ப³ர நடராஜ மாஶ்ரயேஹம்
ஶிவகாமீபதிம், சித் ஸபா⁴பதிம்
சித்³ம்பர விஹாரம் ஶங்கரம்
சிதா³நந்த³கரம் கு³ருகு³ஹ வரம்
கேதா³ரேஸ்வரம் விஶ்வேஶ்வரம் கமலாபதி நுத பத³ம் ஶஶித⁴ரம்

चिदम्बर नटराजम् சித்³ம்ப³ர நடராஜம் சிதாகாஶமாகிய சிதம்பரத்தில் ஆனந்த நடனமாடும் நடராஜாவை **अहम्** அஹம் நான் **आश्रये** ஆஶ்ரயே அடைக்கலம் அடைகிறேன், **शिवकामी पतिम्** ஶிவகாமீ பதிம், சிவகாம ஸுந்தரியின் கணவரும், **चित् सभापतिम्** சித் ஸபா⁴பதிம் சித்ஸபைக்குத் தலைவரும், **चिदम्बर विहारम्** சித்³ம்பர விஹாரம் சிதம்பரத்தில் (ஹ்ருதயாகாசத்தில்) விஹாரம் செய்பவரும் **शङ्करम्** ஶங்கரம் மங்களங்களை அருளுபவரும் **चिदानन्दकरम्** சிதா³நந்த³கரம் சித்தையும் ஆனந்தத்தையும் அளிப்பவரும், **गुरुगुहवरम्** கு³ருகு³ஹவரம் குரு குஹனிடம் அன்புள்ளவரும், **केदारेश्वरम्** கேதா³ரேஸ்வரம் கேதாரம் என்னும் வாராணஸி(காசி) க்ஷேத்ரத்தின் தலைவரும், **विश्वेश्वरम्** விஶ்வேஶ்வரம் உலகங்களுக்கு ஈஸ்வரரும் **कमलापति नुत पदम्** கமலாபதி நுத பத³ம் ஸ்ரீ மஹாவிஷ்ணுவும் வணங்கும் சரணங்களை உடையவரும், **शशि धरम्** ஶஶித⁴ரம் சந்திரனை சிரஸ்ஸில் தரித்தவரும் ஆன, **नटराज माश्रयेऽहम्** நடராஜ மாஶ்ரயேஹம் நடராஜப் பெருமானை நான் அடைக்கலம் அடைகிறேன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸிவானந்த லஹரீ - 12



गुहायां गेहे वा बहिरपि वने वाऽद्रिशिखरे
जले वा वह्नौ वा वसतु वसते: किं वद फलम् ।
सदा यस्यैवान्त: करणमपि शंभो तव पदे
स्थितं चेद्योगोऽसौ स च परमयोगी स च सुखी

கு³ஹாயாம் கே³ஹே வா ப³ஹிரபி
வனே வா (அ)த்³ரி ஸிக²ரே
ஜலே வா வஹ்னௌ வா வஸது வஸதே: கிம் வத³ ப²லம்!
ஸதா³ யஸ்யைவாந்த: கரணமபி ஸம்போ⁴! தவ பதே³
ஸ்தி²தம் சேத்³ யோகோ³ஸௌ ஸ ச பரம யோகீ³ ஸ ஸுகீ²

गुहायां கு³ஹாயாம் குஹைக்குள்ளோ **गेहेवा** கே³ஹே வா இல்லறத்திலோ (வீட்டிற்குள்ளோ),**बहिरपि** ப³ஹிரபி வெளியிலோ கூட **वने वा**வனே வா காட்டிற்குள்ளோ, **अद्रिशिखरे** (அ)த்³ரி ஸிக²ரே மலையின் உச்சிப்பகுதியிலோ, **जले वा** ஜலே வா தண்ணீரில் நின்று கொண்டோ, **वह्नौ वा** வஹ்னௌ வா நெருப்பிலோ (ஒருவன்), **वसतु** வஸது இருக்கட்டும் (வஸிக்கட்டும்). **वसते:** வஸதே: அப்படி வஸிப்பதால் மட்டும், **किं फलम् ?** கிம் ப²லம்? என்ன பலன் கிட்டும்? **वद** வத³ கூறு பார்ப்போம், **सदा** ஸதா³ எப்போதும், **यस्यैव** யஸ்யைவ யாருடைய, **अन्त: करणमपि** அந்த: கரணமபி உள் மனதில் கூட, **शंभो!** ஸம்போ⁴! ஸம்புவான ஹே பரமேஸ்வரா!, **तव** தவ உம்முடைய **पदे** பதே³ சரணங்களில் (கால்களில்), **स्थितं चेत्** ஸ்தி²தம் சேத்³ ஸ்திரமாக நிலைத்து நிற்கும் என்றால், **असौ** அஸௌ அதுவே, **योग:** யோக³: யோகம் எனப்படும். **स च** ஸ ச அவனேதான், **परमयोगी** பரம யோகீ³ சிறந்த யோகி எனப்படுகிறான், **स** ஸ அவன்தான் **सुखी** ஸுகீ² ஸுகமாக இருப்பவன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கருத்து: ஒரு மனிதன் குஹையிலாவது, - கிருஹத்திலாவது, - வெளியிலாவது,காட்டிலாவது, மலையுச்சியிலாவது,தண்ணீரிலாவது , நெருப்பிலாவது, வஸிக்கட்டும். அப்படி அவன் வஸிப்பதினால், என்ன பயன்? - சொல், அழிவற்ற ஸுகத்திற்குக் காரணமான ஈச்வரா! எந்த புருஷனுடைய, - மனது, எப்பொழுதும், - உன் திருவடியிலேயே நிலைத்து இருக்குமானால், - இதுதான் சிவ யோகம், அவனேதான், உயர்ந்த யோகீ, - அவன் தான் பரமானந்த ஸுகத்தையடைந்தவன். ஒருவன் வசிக்கும் நிலையிலும் செய்யும் தவத்திலும் தனிச்சிறப்பு ஒன்றுமில்லை, மனஸானது இறைவனுக்கு பக்தி செலுத்துவதே வேண்டப்படுவதே யோகம் என்றால் மனஸ்ஸை நுகத்தடியில் பூட்டுவதென்பது பொருள், உண்மையான யோகம் என்பது மனதை இறைவனுடன் பூட்டுவதேயாகும். ஒருவன் மனஸ் இறைவனைச் சுற்றியே அமையும் பொழுது அவன் பேரானந்தத்தை அடைகிறான்.

☛சந்திராஷ்டம நாட்கள்- ஜனவரி 2018

மேஷம்	12.01.18	அ.கா	04.36	முதல்	14.01.18	மாலை	03.33	முடிய
ரிஷபம்	14.01.18	மாலை	03.34	முதல்	17.01.18	அ.கா	03.16	முடிய
மிதுனம்	17.01.18	அ.கா	03.17	முதல்	19.01.18	பகல்	02.07	முடிய
கடகம்	19.01.18	பகல்	02.08	முதல்	21.01.18	இரவு	10.54	முடிய
ஸிம்மம்	21.01.18	இரவு	10.55	முதல்	24.01.18	அ.கா	05.14	முடிய
கன்னி	24.01.18	அ.கா	05.15	முதல்	26.01.18	காலை	09.21	முடிய
துலாம்	26.01.18	காலை	09.22	முதல்	28.01.18	பகல்	12.11	முடிய
வ்ருஸ்	01.01.18	அ.கா	03.58	முதல்	03.01.18	காலை	06.17	முடிய
வ்ருஸ்	28.01.18	பகல்	12.12	முதல்	30.01.18	பகல்	02.31	முடிய
தனுஸ்	03.01.18	காலை	06.18	முதல்	05.01.18	காலை	09.09	முடிய
தனுஸ்	30.01.18	பகல்	02.32	முதல்	01.02.18	மாலை	05.17	முடிய
மகரம்	05.01.18	காலை	09.10	முதல்	07.01.18	பகல்	01.24	முடிய
கும்பம்	07.01.18	பகல்	01.25	முதல்	09.01.18	இரவு	07,48	முடிய
மீனம்	09.01.18	இரவு	07,49	முதல்	12.01.18	அ.கா	04.35	முடிய

வைதிகஸ்ரீயின் வாசகர்கள் **www.vaithikasri.com** என்னும் வெப்ஸைட் மூலம் தாங்கள் செலுத்திய சந்தா தொகை, சந்தா கால முடிவு, முகவரி, முதலியவற்றை ஸரி பார்த்துக் கொள்ளலாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மஹான்களின் மஹத்துவம்

(ஸத்குரு ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள்)



ஸத்குரு ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் தமிழ்நாட்டில் தஞ்சை ஜில்லா திருவாரூரில் 04-05-1767 ல் (ஸர்வஜித் சித்திரை 25 திங்கள் பூச நக்ஷத்திரம் கடக லக்னத்தில்) ராம ப்ரும்ஹம் என்பவரின் இரண்டாவது குமாரராக பிறந்தார். த்யாகராஜருக்கு 8ஆவது வயதில் உபநயனம் நடந்தது. அப்பொழுதே, ஜயதேவருடைய அஷ்ட பதிகள், நாராயணதீர்த்தரின் தரங்கங்கள் புரந்தரதாஸரின் பதங்கள், பத்ராசலராமதாஸர், அன்னமாசாரியார் கீர்த்தனங்கள் முதலானவற்றை கற்று, தெலுங்கிலும், ஸம்ஸ்க்ருதத்திலும் க்ருதிகளை இயற்ற ஆரம்பித்தார். வீணைவித்வான் சொண்டி வெங்கடரமண ஐயரிடம், ஸங்கீதத்தை முறையாக கற்றுக்கொண்டார். அக்காலத்தில் தஞ்சாவூர் ஸமஸ்தானத்தில், அநேக கவிகளும், பாடகர்களும் அரசரின் ஆதரவு பெற்று வாழ்ந்து வந்தார்கள். ஆனால் த்யாகராஜரோ, எளிய வாழ்க்கை. இறைபணி, உயரிய நோக்கு இவைகளைக் கடைபிடித்து, அன்றாடம், அஹிம்சை, வைராக்யம், புலனடக்கம் இவைகளில் சிறந்த உஞ்ச வ்ருத்தி! என்ற உத்தமமான பணியை மேற்கொண்டு, பரம ஸாதுவாகத் திகழ்ந்தார். 18 வயது நிறையும் முன்பே காஞ்சீபுரம் ஸ்ரீராமக்ருஷ்ணயதீந்த்ரர் என்னும் மஹான் இவருக்கு ஸ்ரீராம (தாரக) மந்த்ரத்தை உபதேசித்து, 96-கோடி ஜபிக்கு மாறு அருளினார். அது முதல் 21 வருடங்கள் தீவிரமாக தொடர்ந்து நாள் தோறும், 1,25,000 நாமாக்கள் வீதம் ஸ்ரீ ராமநாமத்தை ஜபம்செய்து முடித்தார். இதன் மஹிமையால் ஸ்ரீஸீதாராமர் பலமுறை இவருக்கு நேரடியாகவும் கனவிலும் தரிசனம் தந்தருளி உள்ளார். அவ்வப்போது, தனது ஆனந்த அநுபவங்களை ஸ்ரீராமரிடம் க்ருதிகள் மூலம் தெரிவிப்பார் ஸ்ரீ த்யாகராஜர். வால்மீகி முனிவருக்கு ஸ்ரீராமாயணத்தை உபதேசித்த நாரதமஹரிஷியே, அவருடைய அம்சமாய் தோன்றிய த்யாகராஜருக்கு,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இசைஞானத்தை அருளுவதற்காக ஒருநாள் ஒரு ஸந்யாசி (துறவி) வடிவில் வந்து ஸ்வரார்ணவம், நாரதீயம் என்ற ஸங்கீத இலக்கண நூல்களை அளித்து மறைந்தார். தினந்தோறும், காலையில் நித்ய கர்மாநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, தனது குலதனமான ஸ்ரீராமபஞ்சாயதன விகரஹத்திற்கு, விசேஷ அபிஷேக, அலங்கார பூஜைகள் செய்து, பின் உஞ்சவ்ருத்திக்குப் பல சிஷ்யர்கள் புடைசூழச் சென்று, அன்றைக்குப் போதுமான அளவு த்ரவ்யங்களைச் சேகரித்து வந்து, நைவேத்யங்களைச் செய்துமுடித்து, பிற்பகலில் ப்ரவசனம் செய்து, கீர்த்தனங்களை இயற்றி சிஷ்யர்களுக்கு கற்பித்தும்மாலையில் பகவானுக்கு ஆராதனை பஜனை முதலியவைகளை நடத்தியும் இவ்விதமாக, நிம்மதியான, நிறைந்த, தூய வாழ்க்கை நடத்திவந்த ஸ்ரீ த்யாகராஜரின் புகழ் நாடெங்கும் பரவலாயிற்று. இசை ஞானத்தாலும் உபாஸனாபலத்தாலும், பக்தி மேலீட்டாலும், சூழ்நிலை களில் ஏற்பட்ட அநுபவ உணர்ச்சிகளாலும், இவர் இயற்றிய க்ருதிகள் எண்ணற்றவை.அவற்றில் தற்போது கிடைப்பவை ஒருசில தான்.

ஸ்ரீத்யாகராஜர் சிஷ்யர்களுடன் காஞ்சீபுரம்சென்று ஸ்ரீவரதராஜப் பெருமாள்பேரில் - வரதராஜ நிநு, விநதாஸுத வாஹநுடை - என்றும்,- காமாக்ஷியின் பேரில் - விநாயகுனிவலெனு - என்றும் க்ருதிகள் பாடினார். திருப்பதிக்குச் சென்று ஸ்ரீவேங்கடேசப் பெருமாளை தரிசித்து-தெர தீயக ராதா, வேங்கடேச நின்னு- என்று துதித்தார். சென்னைக்கு வரும் வழியில், புத்தூரில் ஒரு கோயில்கிணற்றில் விழுந்து உயிர் துறந்த ஒரு பக்தனை -நாஜீவாதார- பாடி உயிர்ப்பித்து, சோளிங்கபுரம்வந்து ஸ்ரீநரஸிம்ஹ மூர்த்தியையும், ஆஞ்சநேயரையும் வழிபட்டு, சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

சென்னையில் பந்தர் தெரு, கோவூர் ஸுந்தரேச முதலியார் வீட்டில் தங்கி தேவ காந்தாரி ராகத்தை விஸ்தாரமாகப்பாடினார். பின் வீணைகுப்பையர் வேண்டு கோளுக்கிணங்கி திருவொற்றியூர் வந்து, அங்கு புகழ்பெற்ற, ஸ்ரீ த்ரிபுர ஸுந்தரி அம்மன் பேரில் ஸுந்தரி நீ திவ்ய, ஸுந்தரி நந், தரினிதெலுஸு, ஸுந்தரி நிந்நு, கன்னதல்லி என ஐந்து கீர்த்தனைகளைப்பாடினார்..பின்னர் ஸுந்தரேச முதலியார் விரும்பியபடி, குன்றத்தூருக்கு அருகாமையிலுள்ள கோவூர்வந்து அங்கு ஸ்ரீஸௌந்தர்ய நாயகியுடன் வீற்றிருக்கும், ஸ்ரீ ஸுந்தரேஸ்வர மூர்த்தியைத் தரிசித்து -சம்போ மஹா தேவ, ஈவஸுத, கோரிஸே விம்ப, நம்மி வச்சின, ஸுந்தரேச்வருனி -என ஐந்து கீர்த்தனங்கள் பாடினார். ஸத்குரு ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் ஒரு காட்டுப்பாதையில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

செல்லும் போது, திருடர்கள் சிலர் இவரை வழிமறித்துக் கற்களை வீசினார்கள். பல்லக்கின் உள்ளே இருந்த ஸ்ரீ ஸ்வாமிகள் ஸ்ரீராமனை முந்து வெநுகனிரு என்ற தர்பார் க்ருதியால் வேண்ட ஸ்ரீராம லக்ஷ்மணர்கள் வில்லேந்தியவர்களாக வந்து இவரை ரக்ஷித்தார்கள். அந்த திருடர்கள் திருந்தி ஸ்ரீ த்யாகராஜரிடம் உபதேசம் பெற்றார்கள். மற்றும் லால்குடி, (தபஸ் தீர்த்த புரம்) நாகப் பட்டினம், ஸ்ரீரங்கம் முதலான பல ஸ்தலங்களுக்கும் சென்று, திரும்பி திருவையாறுக்கு வந்து, ஸ்ரீ பஞ்சநதீச்வரர், தர்ம ஸம்வர்த்தினி அம்மன் பேரில் அநேக அற்புதமான கீர்த்தனைகளை ப்பாடி மகிழ்ந்தார் ஸ்ரீ த்யாகறாஜர். .

ஸ்ரீரங்கத்தில் சித்திரைத் திருவிழாவில் தெற்குவீதியில் தங்கியிருந்த ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் ஸ்ரீ ரங்கனாதப்பெருமாள், தங்கக்குதிரை வாஹனத்தில் பவனி வரும் அழகை 'ராஜு வெடலெ' என்ற க்ருதியில் வர்ணித்தார். ஜன நெருக்கத்தால், அருகில்சென்று தரிசிக்க இயலவில்லை. பவனி தொடர்ந்தது, வாஹனம் மேற்கு வீதியில் திரும்பியவுடன் திடீரென்று நின்றுவிட்டது காரணம் யாருக்கும் தெரியவில்லை. வாஹனத்தை ஸுமந்து வந்தவர்கள் எவ்வளவு முயன்றும், த்ருஷ்டிகழித்தும், அர்ச்சகர்கள் வேண்டியும், வாஹனத்தை நகர்த்த முடியவில்லை. ஒரு அர்ச்சகர் மீதுஆவேசம் வந்து 'தெற்குவீதியில் ஒரு சிறந்த பக்தன் தர்சனம் செய்ய ஆவல் கொண்டிருக்கிறான், அவனை அழைத்துவாருங்கள்' என்று உத்தரவு வர, உடனே அவர்கள், த்யாகராஜரை அழைத்துவந்து தரிசனம் செய்வித்த பிறகு அவர் மனமுருகி 'வினராதா நா' என்ற தேவகாந்தாரி க்ருதியைப்பாடி முடித்தவுடன் ஸ்ரீ ரங்கனாதர் உடனே புறப்பட ஆரம்பித்தார். அனைவரும் ஸ்ரீ ஸ்வாமிகளின் பெருமையைக்கண்டு வியந்தார்கள். ஓரங்கசாயீ, ஜூதாமு ராரே, என்ற க்ருதிகளும் ஸ்ரீரங்கத்தில் பாடப்பெற்றவையே. மற்றும் ஒரு சமயம், த்யாகராஜ ருடைய சிஷ்யரான வெங்கடரமண பாகவதர் ஒரு கோதண்டராமர் படத்தைப் பரிசாக அளித்த போது, மனம் கவர்ந்த அந்த உருவத்தைத் தரிசித்து, ஸ்வாமிகள் 'நன்னு பாலிம்ப' என்ற ப்ரஸித்தமான 'மோகன' ராக க்ருதியைப் பாடியதாக வரலாறு. சரபோஜி மன்னன், இம்மஹானின் மஹிமையை உணராமல், இவரை அரச ஸபைக்கு வரவழைக்க விரும்பிய தோடு, தன் மீது பாடல் இயற்றவும் வேண்டினான். சிறந்த ஸன்மானம் அளிப்பதாகவும் தெரிவித்தான். ஸ்ரீத்யாகராஜர் மனம் நொந்து உடனே 'நிதிசால ஸுகமா' என்ற க்ருதியைப் பாடி ஸ்ரீராமபிரானின் அருளையே நாடினார்.(இன்னும்...)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

विदुर नीति விதுர நீதி

यस्तात! न क्रुध्यति सर्वकालं भृत्यस्य भक्तस्य हिते रतस्य।

तस्मिन् भृत्या भर्तरि विश्वसन्ति न चैन मापत्सु परित्यजन्ति।।३१२।।

யஸ்தாத ந க்ருத்'யதி ஸர்வகாலம்

ப்'ருத்யஸ்ய ப'க்தஸ்ய ஹிதே ரதஸ்ய

தஸ்மிந் ப்'ருத்யா ப'ர்தரி விஶ்வஸந்தி ந சைந மாபத்ஸு பரித்யஜந்தி

எந்த மனிதன் தன்னிடம் அன்புடன் (பக்தியுடன்) இருப்பவனாகவும், தனது ஹிதத்தை (நன்மையை) விரும்புபவனாகவும், இருந்து தனக்கு ஸேவை செய்கிறானோ அப்படிப்பட்ட வேலைக்காரனை எந்த ஸமயத்திலும் கோபித்துக் கொள்ளக் கூடாது, அவ்வாறு இருந்தால் அவர்கள் தனது முதலாளியிடம் விஶ்வாஸத்துடன் எப்போதும் கூடவே இருப்பார்கள், ஆபத்து காலத்திலும் கூட முதலாளியை விட்டு விலகி விட மாட்டார்கள்

முதலாளி செய்யக் கூடாத செயல்கள்:

न भृत्यानां वृत्ति संरोधनेन राज्यं धनं सञ्जिघृक्षे दपूर्वम्।

त्यजन्ति ह्येनं वञ्चिता वै विरुद्धाः स्निग्धा ह्यमात्याः परिहीनभोगाः।।३१३।।

ந ப்'ருத்யாநாம் வ்ருத்தி ஸம்ரோத'நேந

ராஜ்யம் த'நம் ஸஞ்ஜிக்'ருக்ஷேத'பூர்வம்

த்யஜந்தி ஹ்யேநம் வஞ்சிதா வை விருத்'தா':

ஸ்நிக்'தா' ஹ்யமாத்யா: பரிஹீந போ'கா': (313)

வேலைக்காரர்களின் வ்ருத்தியை (வாழ்வை)த் தடுத்து விட்டு, பணம் அல்லது பதவிக்காக முதலாளி எந்த ஒரு செயலையும் செய்ய-முடிவையும் எடுக்க-மனதாலும் நினைக்கக் கூடாது, அவ்வாறு செய்தால், எதிர்பாராமல் ஏற்பட்ட இழப்பைத் தாங்க இயலாததால் முன்னர் மிகவும் விஶ்வாஸத்துடன் இருந்த வேலைக்காரர்கள் கூட தாங்கள் வஞ்சிக்கப்பட்டாவர்களாக உணர்ந்து முதலாளிக்கு எதிராக செயல்படத் துவங்குவார்கள். ஆகவே பணத்திற்காகவோ பதவிக்காகவோ முதலாளி ஒரு போதும் தொழிலாளியை பாதிக்கும் முடிவை எடுக்கக் கூடாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

செயல்களை திறம்பட நிறைவேற்ற என்னென்ன செய்ய வேண்டும்?

कृत्यानि पूर्वं परिसङ्ख्याय सर्वाण्याय व्ययेचानुरूपां च वृत्तिम्।

सङ्गृह्णीया दनुरूपान् सहायान् सहाय साध्यानि हि दुष्कराणि।।३१४।।

க்ருத்யாநி பூர்வம் பரிஸங்க்²யாய

ஸர்வாண்யாய வ்யயே சாநுரூபாம் ச வ்ருத்திம்

ஸங்க்³ருஹ்ணீயா த³நுரூபாந் ஸஹாயாந்

ஸஹாய ஸாத்⁴யாநி ஹி து³ஷ்கராணி (314)

முதலாளி என்பவர், செய்ய வேண்டிய செயல்களை முறையாக வகைப்படுத்திக் கொள்ள வேண்டும், பிறகு அதற்கான வரவையும் செலவையும் அனுகூலங்களையும் கணக்கிட்டுக் கொள்ள வேண்டும், அதன் பிறகு தனக்கு அனுகூலமாகவும் ஸஹாயமாகவும் இருப்பவர்களை தன்னுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும், செய்ய இயலாத செயல்கள் கூட பலரது ஸஹாயத்தால் செய்து முடித்துவிட முடியும் அல்லவா?

விஸ்வாஸமுள்ள தொழிலாளியிடம் முதலாளியின் நடத்தை?

अभिप्रायं यो विदित्वा तु भर्तुः सर्वाणि कार्याणि करोत्यतन्द्री।

वक्ता हिताना मनुरक्त आर्यः शक्तिज्ञ आत्मेव हि सोऽनुकम्प्यः।।३१५।।

அபி⁴ப்ராயம் யோ விதி³த்வா து ப⁴ர்து:

ஸர்வாணி கார்யாணி கரோத்யதந்த்³ரீ

வக்தா ஹிதாநா மநுரக்த ஆர்ய:

ஶக்திக்ஞ: ஆத்மேவ ஹி ஸோநுகம்ப்ய: (315)

முதலாளியின் மனோபாவத்தை அறிந்து கொண்டு, அதன்படியே சோம்பல் இல்லாமல் அனைத்து செயல்களையும் செய்பவனும் அவ்வப்போது ஹிதமான ஆலோசனைகளைச் சொல்பவனும், தன்னிடம் அன்புடையவனும், நேர்மையானவனும், செயல்களை செய்து முடிக்கும் திறனுடையவனுமான வேலைக்காரர்களை, முதலாளியானவன், தன்னைப்போலவே கருதி அவனிடம் அன்பு செலுத்தி அவனை கௌரவத்துடன் நடத்த வேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அத்புதமான ஸ்தோத்ரங்கள்

।। नारद पुराणोक्त श्री दत्तात्रेय स्तोत्रम् ।।

(நாரத புராணோக்த) ஸ்ரீ தத்தாத்ரேய ஸ்தோத்ரம்(2)

நாரத புராணத்தில் ஸத்குரு நாரதரால் உபதேசிக்கப்பபட்ட தத்தாத்ரேய ஸ்தோத்ரம், நல்லறிவையும் புத்தி சக்தியையும் ஆத்ம ஞானத்தையும் (மெய்யறிவையும்)விக்ஞானத்தையும் அளிக்க வல்லது, (ஆசை, கோபம், லோபம், மோஹம், அஹங்காரம், மாத்ஸர்யம்ஆகிய) விரோதிகளையும் விரட்டி அடிக்கும் ஆற்றலுள்ள இந்த ஸ்தோத்ரத்தை தினஸரியோவியாழன் தோறுமோ பாராயணம் செய்வதால் ப்ருஹ்மா விஷ்ணு ருத்ரன் ஆகிய மும்மூர்த்திகளின் ஸ்வரூபமான ஸ்ரீ தத்தாத்ரேயரின் அருள் கிட்டும்.

(முன் மாதத்தொடர்ச்சி)

जम्बू द्वीप महाक्षेत्र माता पुर निवासिने । जय मानसतां देव दत्तात्रेय नमोऽस्तुते

ஜம்பூ³ த்³வீப மஹாக்ஷேத்ர மாதாபுர நிவாஸினே

ஜயமாந ஸதாம் தே³வ! த³த்தாத்ரேய! நமோஸ்து தே

ஜம்பூத்வீபத்திலுள்ள மிகப்பெரிய க்ஷேத்ரங்களில் (திவ்ய தேசங்களில்) வஸிப்பவரும், ஸாதுக்களுக்கு தேவருமான ஸ்ரீ தத்தாரேயரே! தங்களுக்கு நமஸ்காரம்

भिक्षाटनं गृहे ग्रामे पात्रं हेममयं करे । नानास्वाद मयी भिक्षा दत्तात्रेय नमोऽस्तुते

பி⁴க்ஷாடநம் க்³ருஹே க்³ராமே பாத்ரம் ஹேமமயம் கரே

நாநா ஸ்வாத³மயீ பி⁴க்ஷா த³த்தாத்ரேய! நமோஸ்து தே

ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு கிராமத்திலும் பிக்ஷை எடுக்கும் வ்யாஜத்தில் உலா வருபவரும்,கையில் தங்கத்தாலான பிக்ஷா பாத்ரம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வைத்துள்ளவரும், பற்பல சுவைகளுள்ள பிக்ஷையை (உணவை) உடையவருமான ஸ்ரீ தத்தாரேயரே! தங்களுக்கு நமஸ்காரம்

ब्रह्मज्ञान मयी मुद्रा वस्त्रे चाकाशभूतले । प्रज्ञानघन बोधाय दत्तात्रेय नमोऽस्तुत

ப்³ரஹ்ம க்³ஞாநமயீ முத்³ரா வஸ்த்ரே சா(ஆ)காஶ பூ⁴தலே

ப்ரக்³ஞாந க⁴நபோ⁴தா⁴ய த³த்தாத்ரேய! நமோஸ்து தே

ஜீவ ப்ருஹ்ம ஐக்யத்தை போதிக்கும் முத்ரையுடனும் ஆகாசத்தையும் பூமியையும் வஸ்த்ரமாக (ஆடையாக) உடையவரும், பரப்ருஹ்ம வடிவில் இருந்து அனைத்தையும் அனுபவிப்பருமான ஸ்ரீ தத்தாரேயரே! தங்களுக்கு நமஸ்காரம்

अवधूत सदानन्द परब्रह्म स्वरूपिणे । विदेह देहरूपाय दत्तात्रेय नमोऽस्तुते ।१२।

அவதூ⁴த ஸதா³நந்த³! பரப்³ரஹ்ம ஸ்வரூபிணே

விதே³ஹ தே³ஹ ரூபாய த³த்தாத்ரேய! நமோஸ்து தே

அவதூதரும், எப்போதும் ஆனந்தமயமான பரப்ருஹ்ம ஸ்வரூபியும், உடலற்ற தேஹ வடிவினருமான ஸ்ரீ தத்தாரேயரே! தங்களுக்கு நமஸ்காரம்

सत्यरूप सदाचार सत्य धर्मपरायण । सत्याश्रयपरोक्षाय दत्तात्रेय नमोऽस्तुते

ஸத்ய ரூப! ஸதா³சார! ஸத்ய த⁴ர்ம பராயண!

ஸத்யாஶ்ரய! பரோக்ஷாய! த³த்தாத்ரேய! நமோஸ்து தே

ஸத்ய (உண்மை) வடிவானவரும், எப்போதும் ஆசார முடையவரும், ஸத்யம் தர்மம் ஆகியவற்றில் ஈடுபாடுடையவரும், ஸத்யத்துக்கு ஆச்ரயமானவரும், உள்ளத்தால் (மனஸ் சித்ததால்) உணரக் கூடியவருமான ஸ்ரீ தத்தாரேயரே! தங்களுக்கு நமஸ்காரம்

शूलहस्तगदापाणे वनमाला सुकन्धर । यज्ञसूत्रधर! ब्रह्मन्! दत्तात्रेय नमोऽस्तुते।।

ஶூலஹஸ்த க³தா³பாணே! வநமாலா ஸுக³ந்த⁴ர!

யக்³ஞ ஸூத்ரத⁴ர! ப்³ரஹ்மந்! த³த்தாத்ரேய! நமோஸ்து தே

சூலம், கதை ஆகியவற்றை கைகளில் தாங்கியவரும், வநமாலையால் அழகான கழுத்துடையவரும், யக்ஞ ஸூத்ரத்தை (பூணூலை) தரித்திருப்பவரும், ப்ரஹ்ம ஸ்வரூபியுமான ஸ்ரீ தத்தாரேயரே! தங்களுக்கு நமஸ்காரம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

क्षराक्षरस्वरूपाय परात्परतराय च । दत्तभुक्ति पर स्तोत्र! दत्तात्रेय नमोऽस्तुते ।।

க்ஷராக்ஷர ஸ்வரூபாய பராத்பர தராய ச

த³த்த முக்தி பர ஸ்தோத்ர! த³த்தாத்ரேய! நமோஸ்து தே

க்ஷரம் அக்ஷரம் ஆகிவ வடிவானவரும், பரம் அபரம் ஆகியவற்றை தரிப்பவரும், முக்தியை (மோக்ஷத்தை) அளிக்கவல்ல ஸ்தோத்ரத்தை தந்தருளியவருமான ஸ்ரீ தத்தாரேயரே! தங்களுக்கு நமஸ்காரம்

दत्त विद्याढ्यलक्ष्मीश दत्त स्वात्म स्वरूपिणे ।गुणनिर्गुण रूपाय दत्तात्रेय नमोऽस्तुते

த³த்த வித்³யாட்⁴ய! லக்ஷ்மீஶ த³த்த ஸ்வாத்ம ஸ்வரூபிணே

கு³ண நிர்கு³ண ரூபாய! த³த்தாத்ரேய! நமோஸ்து தே

சிறந்த கல்வியறிவைத்தந்தவரே! மஹாலக்ஷ்மியின் நாயகரே! தனது அறிவை அனைவரும் காணும்படி உலகுக்கு அளித்தவரே!ஸகுண நிர்குண வடிவானவரே! ஸ்ரீ தத்தாரேயரே! தங்களுக்கு நமஸ்காரம்

शत्रुनाशकरं स्तोत्रं ज्ञान विज्ञान दायकम् । सर्वपापं शमं याति दत्तात्रेय नमोऽस्तुते

ஶத்ரு நாஶகரம் ஸ்தோத்ரம் க்³ஞான விக்³ஞான தா³யகம்

ஸர்வ பாபம் ஶமம் யாதி த³த்தாத்ரேய! நமோஸ்து தே

உள் விரோதியாகிய காம க்ரோத மத மாத்ஸர்யங்களையும், வெளி விரோதிகளையும் அழிக்கவல்லதும், க்ஞானம் விக்ஞானம் ஆகியவற்றை அளிப்பதும், அனைத்து பாவங்களையும் ஶமனம் செய்வதுமாகிய இந்த தத்தாத்ரேய ஸ்தோத்ரத்தால் மகிழ்ச்சியடையும் ஸ்ரீ தத்தாரேயரே! தங்களுக்கு நமஸ்காரம்

इदं स्तोत्रं महत् दिव्यं दत्त प्रत्यक्ष कारकम् । दत्तात्रेय प्रसादाच्च नारदेन प्रकीर्तितम्

இத³ம் ஸ்தோத்ரம் மஹத் தி³வ்யம் த³த்த ப்ரத்யக்ஷ காரகம்

த³த்தாத்ரேய ப்ரஸாதா³ச்ச நாரதே³ந ப்ரகீர்த்திதம்

மஹத்தானதும் திவ்யமானதும் ஸ்ரீ தத்தாத்ரேயரை ப்ரத்யக்ஷமாகக் காணச் செயவ்துமான இந்த ஸ்தோத்ரமானது ஸ்ரீ தத்தாத்ரேய ப்ரஸாதத்தால் ஸ்ரீ நாரத முநிவரால் அருளி செய்யப்பட்டது, ஸ்ரீ தத்தாரேயரே! தங்களுக்கு நமஸ்காரம்

வைதிகஸ்ரீயின் அத்புதமான ஸ்தோத்ரங்கள் அடங்கிய ஸ்தோத்ரஸ்ரீயின் மூன்றாவது பாகம்-வாங்கி விட்டீர்களா!!!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பால போதினீ



தங்கம் வியாபாரம் செய்யும் கடைக்கு ஒருத்தர் போகிறார். ஐந்தாயிரம் ரூபாய் கொடுத்து இதற்கு உண்டான தங்கத்தைக் கொடுங்கள் என்கிறார். வியாபாரியும் ஐந்தாயிரம் ரூபாயை வாங்கி உள்ளே போட்டுக் கொண்டார். போட்டுக்கொண்டு தராசை எடுத்தார். அதிலே ஒரு பக்கத்தில் தங்கத்தை வைத்தார். ஒரு பக்கத்தில் குந்து மணிகளை வைத்தார். வைத்துவிட்டு சரியா? என்று கேட்டார். ரொம்ப சரி என்றார் வாங்க வந்தவர். தங்கம் ரொம்ப வருத்தப்பட்டது. என்னை நெருப்பிலே போட்டு வாட்டுகிறார்கள். அதற்கும் கவலைப் படவில்லை.கம்பி-கம்பியாக இழுக்கிறார்கள் .அதற்கும் கவலைப் படவில்லை. சுத்தியால் அடிக்கிறார்கள். ரத்தினங்களையெல்லாம் பதிப்பதற்காக என்னைப் போட்டு நெருப்பிலே காய்ச்சுகிறார்கள். இதற்கெல்லாம் கவலைப் படவில்லை. என்னைப் போய் நான்கு குந்துமணி எடை, ஐந்து குந்து மணி எடை என்றுசொல்கிறார்களே. இதை நினைக்கும்போது தான் ரொம்ப வருத்தமாக இருக்கிறது. என்று தங்கம் மனது கஷ்டப்பட்டுக் கொண்டதாம் பெரிய மகாவித்வான் எல்லா சாஸ்திரங்களையும் கற்றறிந்தவர்.12 வருஷம் குருவினிடம் முறைப்படி வேதத்தை கனாந்தம் அத்யயனம் செய்தவர். அவரையும் கனபாடிகள் என்று சொல்லி, ஒன்றுமே தெரியாதவரையும் கனபாடிகள் என்று அழைத்தால் எப்படி இருக்கும்.அப்படிப்பட்ட நிலைமை இது. வியாபாரி பார்த்தார். தங்கத்தை எடுத்து உள்ளே போட்டுக் கொண்டு தங்கம் வாங்க வந்தவரிடம் குந்துமணியை நீட்டினார்.அவர் வாங்க மறுத்துவிட்டார். என்ன அக்கிரமம்! ஐந்தாயிரம் ரூபாயையும் வாங்கிக் கொண்டு ஐந்து குந்துமணியைக் கொடுக்கிறீரே...! என்றார் கடைக்காரரிடம். நீர்தான் சமம் என்று சொன்னீரே.. என்றார் கடைக்காரர்! என்ன அக்கிரமம்! குந்துமணி தங்கமாகிவிட முடியுமா.....? என்கிறார் வாங்க வந்தவர்.அதே மாதிரிதான் .குந்துமணி எப்படித் தங்கம் ஆகாதோ அப்படியே சாதாரண நபரும் சாஸ்திரிகளும் கனபாடிகளுமாக ஆக முடியாது. ஒவ்வொரு வித்யையிலும் சிரமப்பட்டவர்களுக்குத்தான் அந்தந்த (கனபாடிகள், தீக்ஷிதர், சாஸ்திரிகள், சிவாசார்யார், ஆசார்யர், போன்ற) பட்டங்கள் பொருந்தும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸந்தேஹ நிவாரணீ!

☛ தற்போது ஏராளமான பஞ்சாங்கங்கள் ஒன்றுக்கொன்று மாறுபாட்டுடன் வெளியிடபடுகின்றன. இவற்றில் எது சரியானது? என எப்படித் தீர்மானிப்பது?

பஞ்சாங்கங்களில் வானசாஸ்திரத்தின் அடிப்படையில் கிரஹங்களின் ஸஞ்சாரம் கணக்கிடப்பட்டு வெளியிடப்படுகிறது. இவ்வாறு கணக்கிடும்போது கணக்கிடப்படும் முறையானது த்ருக் என்றும், வாக்யம் என்றும் மாறுபடுகின்றன. ஆகவேதான் பஞ்சாங்கங்களுக்குள் வேறுபாடும் மாறுதலும் ஏற்படுகின்றன. ஆனாலும் இருபதுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் பஞ்சாங்கங்கள் இருந்தாலும் அவைகள் பொதுவாக ' த்ருக்-கணிதம் ' என்றும் 'வாக்யம் ' என்றும் இரண்டு வகைகளாகத்தான் வேறுபடுகின்றன . இவற்றில் திருக்கணிதம் என்னும் கணக்கிடும் முறையில் கணித்த சில பஞ்சாங்கங்கள் உள்ளன. வாக்யம் என்னும் கணித முறையைப் பின்பற்றி சிலபஞ்சாங்கங்கள் கணிக்கப்படுகின்றன. ஆக இரண்டு விதமான வேறுபாடுகள்தான் உண்டு. அனைத்து பஞ்சாங்கங்களும் 90% சரியாகத்தான் ஒன்றுக்கொன்று ஒத்துப் போகின்றன. ஆகவே நமது முன்னோர்கள் எந்த பஞ்சாங்கத்தை அனுஸரித்து வந்தார்களோ, அதாவது வாக்ய கணிதமோ!, த்ருக் கணிதமோ! அதையே நாமும் அனுஸரிப்பதுதான் சிறந்தது.

☛ தக்ஷிணாயணம் மற்றும் உத்தராயணம் என்றால் என்ன?

உத்தரம் என்றால் வடக்கு, அயனம் என்றால் செல்லுதல் , உத்தராயணம் என்றால் வடக்கு நோக்கிச்செல்லுதல் எனப்பொருள். ஒவ்வொரு நாளும் ஸூர்யன் கிழக்கே உதயமாகி மேற்கு திசையை நோக்கிச் சென்று மேற்கே அஸ்தமிக்கிறார் (மறைகிறார்), ஆனால் எப்போதும் (சித்திரை ஐப்பசி மாதப் பிறப்பு நாளைத்தவிர) நேர் கிழக்கு திசையில் ஸூரியன் உதயமாவது இல்லை. மாறாக சிறிது தென்திசை அல்லது வடக்குதிசை சாய்வாகவே உத்தயமாகிறார், அவ்வாறே பகல்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முழுவதும் மேற்கு திசை நோக்கிச் சென்று , மாலையில் மறைகிறார். சிறிது தென்திசை சாய்வாக ஸூர்யனின் ரதம்(தேர்) செல்வதையே தக்ஷிணாயனம் என்றும், ஸூரியனின் ரதம் (தேர்) சிறிது வடக்கு திசை சாய்வாகச் செல்வதையே உத்தராயணம் என்றும் அழைக்கிறோம்.

☞ ஸ்ரீ மஹா கணபதிக்குத் துளஸியால் அர்ச்சனை செய்யலாமா?

नाऽक्षतैरर्चयेत् विष्णुं न तुळस्या गणाऽधिपम्

நாக்ஷதைரர்ச்சயேத் விஷ்ணும் ந துளஸ்யா க'ணாதி'பம்

என மஹாவிஷ்ணுவுக்கு அக்ஷதையினாலும், மஹாகணபதிக்கு துளஸியினாலும் அர்ச்சனை செய்யக்கூடாது , ஆனால் விநாயக சதுர்த்தியன்று மட்டும் **एकविंशति पत्रपूजा** ஏகவிம்சதிபத்ரபூஜா என்று இருபத்தியோறு இலைகளால் செய்யப்படும் பூஜையில் துளஸியும்ஒன்று. ஆகவே அன்றுமட்டும் துளஸியால் அர்சனை செய்யலாம். மற்ற நாட்களில் செய்யக்கூடாது .

☞சிவனுக்கு பலதிரவியங்களால் அபிஷேகம் செய்யும் போது அதன் வரிசை (முறை) எப்படி? அபிஷேக த்ரவ்யங்கள் என்னென்ன ?

பொதுவாக தெய்வங்களுக்குச் செய்யப்படும் பூஜை, ஜபம், ஹோமம், அர்ச்சனை ஆகிய பலவிதமான உபசாரங்களில் **अभिषेक प्रियः शिवः** அபிஷேகப்ரிய: சிவ: என்கிறபடி சிவனுக்கு முறையாக பலவிதமான பொருட்களைக் கொண்டு முறையான (ருத்ர)அபிஷேகமே மிகவும் ப்ரியமானது.ஆகவே சிவனுக்கு பதினோரு திரவியங் (பொருள்) களால் மஹன்யாஸம் மற்றும் பதினோரு முறை ஸ்ரீருத்ர மந்திரம் ஜபம் செய்து அபிஷேகம்செய்வதும் மிகச் சிறந்தது. அபிஷேகம் செய்யும் பதினோரு பொருட்களும் ,அவற்றின் வரிசையும்....

प्रथमं गन्धतोयञ्च द्वितीयं पञ्च गव्यकम्।
पञ्चामृतं तृतीयं स्यात् घृत स्नानं चतुर्थकम्।
पञ्चमं पयसा स्नानं दधि स्नानं तु षष्ठकम्।
सप्तमं मधुना स्नानं इक्षुसार मथाऽष्टमम् ॥
नवमं फलसारञ्च दशमं नाळिकेरकम्।

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

एकादशं गन्धतोयं द्वादशं तीर्थमुच्यते ।।

ப்ரத²மம் க³ந்த⁴தோயம் ச, த்³விதீயம் பஞ்ச க³வ்யகம்

பஞ்சாம்ருதம் த்ருதீயம் ஸ்யாத், க்⁴ருத ஸ்னானம் சதுர்த²கம்

பஞ்சமம் பயஸா ஸ்னானம், ததி⁴ ஸ்னானம் து ஷஷ்ட²கம்

ஸப்தமம் மது⁴நா ஸ்னானம், இக்ஷூஸார மதா²ஷ்டமம்

நவமம் ப²ல ஸாரம் ச, த³ஶமம் நாளிகேரகம்

ஏகாத³ஶம் க³ந்த⁴தோயம், த்³வாத³ஶம் தீர்த்த² முச்யதே

என்கிறபடி முதலாவது 1. வாஸனைத்தைலம், 2. பஞ்ச கவ்யம், 3. பஞ்சாம்ருதம், 4. பசு நெய், 5. (காய்ச்சாத) பசும்பால், 6. பசுந்தயிர், 7. சுத்தமான தேன், 8. கரும்புச்சாறு, 9.அப்போது தயார் செய்யப்பட்ட பழங்களின் சாறு, 10. இளநீர், 11. வாஸனை சந்தனம், 12. சுத்தமான (நதி) ஜலம் அல்லது விபூதி என்னும் வரிசையில் சிவனுக்கு பதினோரு த்ரவியங்களை அபிஷேகம் செய்வது சிவனுக்கு மிகவும் மகிழ்ச்சியைத்தரும் நன்மை ஏற்படும்.

☛ வீட்டில் பூஜையில் வைக்கப்பட்டுள்ள விக்ரஹத்துக்கு-சிலைக்கு தினந்தோறும் கட்டாயம் அபிஷேகம் செய்யத்தான் வேண்டுமா?

प्रतिमा पट्ट यन्त्राणां नित्यं स्नानं न कारयेत् ப்ரதிமா பட்ட யந்த்ராணாம் நித்யம் ஸ்னானம் ந காரயேத் என்கிறபடி விக்ரஹங்கள் (சிலைகள்), ப்ரதிமைகள், படங்கள் முதலியவைகளுக்கு தினந்தோறும் புஷ்பங்கள் போட்டு அர்ச்சனை செய்து, நிவேதனம் செய்து, சுருக்கமாக பூஜைகள் செய்து வந்தாலே போதும். பர்வ தினங்கள் எனப்படும் பௌர்ணமி, அமாவாஸை போன்ற நாட்களில் மட்டும் விக்ரஹங்களுக்கு அபிஷேகத்துடன் முறையாக பூஜையைச் செய்யலாம்.

☛ மஹாகணபதி ஸன்னதியில் ஶுக்லாம்பரதரம் ச்லோகம் சொல்லி தலையில் குட்டிக்கொள்வதற்கு ஏதாவது எண்ணிக்கை உள்ளதா?

ஸ்ரீ மஹாகணபதியை சந்தோஷப்படுத்த மிகவும் சுலபமான வழி பிள்ளையார் ஸன்னிதியில் தோப்புக்கரணம் போடுவதாகும், அதைப்போலவே சுக்லாம்பரதரம் விஷ்ணும் என்னும் ச்லோகம் சொல்லிதலையின் இருபுறமும் குட்டிக்கொள்ளுவதும் பிள்ளையாரை மகிழ்விக்கும் தலையின் இருபுறமும் நெற்றிப் பொட்டில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இருகைகளாலும் சுக்லாம்பரதரம் ச்லோகம் சொல்லி ஐந்து முறை குட்டிக்கொள்ள வேண்டும். ச்லோகம் முடியும் வரை குட்டிக் கொள்ள வேண்டும் என்னும் கட்டாயம் இல்லை என்கிறது விநாயக புராணம்.

☛ தெய்வ ஸன்னிதியில் விளக்கேற்ற சிறந்தது எண்ணெயா-நெய்யா ?

தெய்வ ஸன்னதியில் சுத்தமான என்னெய் அல்லது சுத்த நெய்யால் தீபம் (விளக்கு) ஏற்றலாம். தெய்வ ஸன்னிதியில் சுத்தமான பசு நெய்யினால் தீபம் ஏற்றுவது சிறந்த ஞானத்தை (அறிவை) த் தரும். சுத்த நல்லெண்ணையால் தெய்வ ஸன்னிதியில் தீபமேற்றினால் அறியாமல் செய்த பற்பலபாவங்களும் விலகும், அதன் மூலம் துன்பமும் விலகும், ஆனால் கடலை எண்ணை மற்றும் கூட்டு எண்ணை மற்றும் கசப்பான வேப்பெண்ணை போன்றவற்றால் தெய்வ ஸன்னிதியில் விளக்கு தீபம் ஏற்றக் கூடாது.

☛ ஒரு தெய்வத்தை அர்ச்சனை செய்ய அந்த தெய்வ (அஷ்டோத்தரம் ஸஹஸ்ரநாமம் போன்ற) மந்த்ரம் தெரியாத போது, மற்றொரு தெய்வ மந்த்ரத்தால் பூஜை அர்ச்சனை செய்யலாமா ?

சாஸ்திரத்தில் அந்தந்ததெய்வத்தின் பெருமைகளை விளக்கும் விதமாக ஒவ்வொரு தெய்வத்திற்கும் தனித்தனியே (அஷ்டோத்தரம் ஸஹஸ்ர நாமம் போன்ற) மந்த்ரங்கள் அமைந்துள்ளன. ஒரு தெய்வத்தின் பெருமைகளை விளக்கிக் கூறப்படும் குணங்கள்-மந்திரங்கள் , மற்ற தெய்வத்துக்கு சரியாக பொருந்தாமல் போகலாம். ஆகவே அந்தந்த தெய்வத்திற்குரிய மந்த்ரத்தால் அந்தந்த தெய்வத்தை ஆராதிப்பதே சிறந்தது. ஆனால் அந்தமந்திரங்கள் கிடைக்காதபோது, அனைத்து பெண்(ஸ்த்ரீ) வடிவமான தெய்வங்களுக்கும் ஸ்ரீ லக்ஷ்மி அஷ்டோத்தரம் அல்லது ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமத்தாலும், அனைத்து ஆண் (புருஷ) வடிவ தெய்வங்களுக்கும் புருஷ ஸூக்தத்தாலும் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தாலும், அர்ச்சனை செய்யலாம்.

☛ தனுர்(மார்கழி)மாத பூஜையில் ஸூர்யோதயத்துக்கு முன்பு நிவேதனம் செய்ததை ஸூர்யோதயமான பிறகு சாப்பிடலாமா? அதற்கு யாதயாம (பழையவை) என்னும் தோஷம் கிடையாதா?

பொதுவாக மஹாவிஷ்ணுவின் நிவேதனத்துக்கு உச்சிஷ்டம் (எச்சில்) முதலிய எந்ததோஷமும் கிடையாது. மார்கழி மாதம் விடிகாலை நேரத்தில் செய்யவேண்டிய தனுர்மாத பூஜையில், ஸூர்யோதயத்துக்கு (காலை 6 மணிக்கு) முன்பு அபிஷேகம் அலங்காரம் வரை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

செய்துவிட்டு ஸூர்யோதயத்துக்குப்பிறகு அர்ச்சனை மற்றும் நிவேதனம் முதலியன செய்வது ஶிஷ்டாசாரமாக உள்ளது. இப்படிச் செய்வதால் நிவேதனத்துக்கு யாதயாமதோஷம் ஸம்பவிக்காது

☛புதிதாக கடையில் வாங்கிய ஸாளகிராமத்தை பூஜை செய்ய ஆரம்பிக்கும் முன்பு, அதற்கு ஏதாவது கிரியை செய்ய வேண்டுமா?

எந்தஒரு புதிய தெய்வ விக்ரஹங்களையோ சிலைகளையோ கடையில் வாங்கிய பின்னர் அதை நம் வீட்டில் பூஜையில் வைத்து பூஜை செய்ய ஆரம்பிக்கும் முன்பாக, அவற்றை பஞ்சகவ்யத்தால் சுத்தி செய்து அதற்கு முறையாக (ஸம்ப்ரோக்ஷணம்) ப்ராணப்ரதிஷ்டை என்னும் ஸம்ஸ்காரத்தைச் செய்து விட்டு அதன் பிறகுதான் அவற்றை பூஜை செய்ய வேண்டும் என்பது பொதுவிதி. ஆனால் ஶ்ரீ மஹாவிஷ்ணு ஸான்னித்யமாக உள்ள சாளகிராம சிலைக்கு இந்த ஸம்ஸ்காரம் தேவையில்லை, அதாவது

साळग्राम शिलायास्तु न च सम्प्रोक्षणं स्मृतम्।

न प्रतिष्ठा विधातव्या न चैव आवाहनादिकम्॥

ஸாளக்ராம ஶிலாயாஸ்து, ந ச ஸம்ப்ரோக்ஷணம் ஸ்ம்ருதம்,

ந ப்ரதிஷ்டா விதாதவ்யா, ந சைவ ஆவாஹனாதிகம்

என்னும் வசனப்படி கண்டகி நதியில் கிடைக்கும் ஸாளக்ராமம் என்னும் சிலையில் ஶ்ரீ ஹரி மஹாவிஷ்ணுவானவர் எப்போதும் ஸான்னித்யமாகவே இருக்கிறார். ஆகையால் பிராணபிரதிஷ்டை செய்துதான் அவற்றில் தெய்வ ஸான்னித்யம் ஏற்படுத்த வேண்டும் என்பது இல்லை, ஆகவே ஸாளகிராம பிம்பத்திற்க்கு மட்டும் ஸம்ப்ரோக்ஷணமோ (ப்ரதிஷ்டையோ) ஆவாஹனமோ தேவையில்லை. கடையில் வாங்கிய பின்னர் அதை பஞ்சகவ்யத்தால் சுத்தி செய்து விட்டு பூஜையில் வைத்து பூஜை செய்யத் தொடங்கலாம்.

வாஸ்து நாள் 25.01.2018 வியாழன்

25.01.2018 வியாழன் காலை 09.12 முதல் 10.42 மணி வரை குறிப்பாக காலை 10.06 முதல் 10.42 மணி வரை புதியவீடு(கட்டடம்) கட்ட ஆரம்பிக்க-பூமி(வாஸ்து) பூஜை செய்ய சிறந்த நாள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறுபதைக்கடந்த ஆத்யாத்மிக மஹான்கள்

2ஆம் கட்டளை ப்ருஹ்மஸ்ரீ பாலஸுப்ரமணிய (பாலு)கனபாடிகள்

ஆசாரமான குடும்பத்தில் பிறந்து பல வித்வான்களிடம் முறையாக வேதம் வேதபாஷ்யம் கற்று, கும்பகோணம் இரண்டாங்கட்டளை திருவனந்தபுரம் போன்ற பலஊர்களில் பாடசாலை அத்யாபகராக இருந்து நூற்றுக் கணக்கான மாணவர்களுக்கு வேதம் கற்றுத்தந்து தற்சமயம் சென்னையில் தனது கிருஹத்தில் குருகுல முறையில் வேதபாடசாலை நடத்தி வருபவரான ப்ருஹ்மஸ்ரீ பாலஸுப்ரமண்ய கனபாடிகளின் ஷஷ்ட்யப்த பூர்த்தி 2017 Sep 4 தேதியில் சென்னையில் ஸ்ரீ மஹாருத்ரத்துடன் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ பாலு கனபாடிகள் சென்னை போன் 044-23710602-

திருவிடைமருதூர் (ஹைதராபாத்) ப்ருஹ்மஸ்ரீ ராம கனபாடிகள்

மத்யார்ஜுனத்தில் (திருவிடைமருதூரில்) வஸித்த ஆசாரசீலரான ஸ்ரீ குருமூர்த்தி ஐயரின் புத்ரரும் பற்பல வித்வான்களிடன் முறையாக ஸலக்ஷண கனாந்தம் வேதம் மற்றும் வேதபாஷ்யம் கற்று ஸுமார் முப்பது வருஷங்களாக ஹைதராபாத் வேத பவன் பாடசாலையில் தலைமைப் பொருப்பை வஹித்துவருபவரும் நூற்றுக் கணக்கான வித்யார்த்திகளுக்கு முழுமையாக வேதம் போதித்தவரும் சிறந்த பண்பாளருமான ப்ருஹ்மஸ்ரீ (திருவிடைமருதூர்) ராம கனபாடிகள் ஸௌ ஜயஸ்ரீ அம்மாளின் ஷஷ்ட்யப்தபூர்த்தி ஹைதராபாத்தில் ஸ்ரீ வெங்கட்ராமகனபாடிகள் அத்யக்ஷத்தில் பரனூர் மஹாத்மா ஸ்ரீ அண்ணா மற்றும் வடகுடி ப்ருஹ்மஸ்ரீ ராமதீக்ஷிதர் போன்ற மஹான்கள் முன்னிலையில் சிஷ்யர்கள், (வைதிகஸ்ரீ ஆசிரியர் உட்பட) பலவித்வான்கள், உறவினர்கள், ஆஸ்திகர்கள், சூழ 03-12-2017 அன்று சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ ராமகனபாடிகள் போன் 9490562562

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அல்லூர் ப்ருஹ்மஸ்ரீ (சிவராம கிருஷ்ண) ராஜு கனபாடிகள்

திருச்சி ஜில்லா அல்லூர் கிராமத்தில் சிறந்த வேத-வேதாந்த வித்வானாக வஸித்த ப்ருஹ்மஸ்ரீ யக்ஞேஸ்வர சர்மாவின் புத்ரரும் ஸலக்ஷண கனாந்தம் வேதமும் ந்யாய சாஸ்திரமும் முறையாகக் கற்று ஸுமார் இருபது வருஷங்கள் திருப்பதி ஸ்ரீ வேங்கடேஸ்வரர் ஸன்னிதியில் வேதபாரா யணம் செய்தவரும் சிறந்த நற்பண்புகள் உடையவருமான திருப்பதி (அல்லூர்)ஸ்ரீ சிவராமகிருஷ்ண (ராஜு)கனபாடிகளின் ஷஷ்ட்யப்த பூர்த்தி 27 ,08,2017 அன்று அல்லூர் கிராமத்தில் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ ராஜுகனபாடிகள் -திருப்பதி போன் 9491311485

கல்பஸ்ரீ வைதிக ஸ்மார்த்த ப்ரயோக பரீக்ஷை

சென்ற வருஷங்களைப்போலவே இந்த வருஷமும் ஸ்ரீ ஸீதாராம குருகுலம் மற்றும் வைதிகஸ்ரீ இணைந்து ஸமூஹத்துக்கு தகுதியுள்ள வைதிகர்களை உருவாக்கும் மற்றும் ஊக்கப்படுத்தும் நோக்கத்தில் கல்பஸ்ரீ என்னும் வைதிக ஸ்மார்த்த பிரயோக பரீக்ஷைகள் சென்னை ஆழ்வார்பேட்டை ஸ்ரீ ஸீதாராம குருகுலத்தில் டிஸம்பர் 4, மற்றும் 8 ஆகிய தேதிகளில் ப்ருஹ்மஸ்ரீ ராஜகோபால கனபாடிகள் தலைமையில் நடைபெற்றது, மும்பை ஸ்ரீ நரஸிஹ்ம கனபாடிகள் , திருநெல்வேலி ஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள் , குருவாயில் ஸ்ரீ சந்திரமௌளி ச்ரௌதிகள் ஆகியோர் கிருஷ்ண யஜுர் வேதத்துக்கும் (பி எஸ் சி) ஸ்ரீ ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகள் சுக்ல யஜுர் வேதத்துக்கும் ஸ்ரீ ரவி சர்மா ரிக்வேதத்துக்கும் பரீக்ஷாதிகாரிகளாக இருந்தார்கள். காலை முதல் மாலை வரை நடைபெற்ற இதில் வந்திருந்த அனைவரும் ஆஹாரம் பானம், ஸம்பாவனை, சார்ஜ் தந்து உபசரிக்கப்பட்டார்கள். ஸ்ரீ மஹாபெரியவாள் ச்ராத்தாஞ்ஜலி நிகழ்ச்சியன்று (14-12-2017) சர்டிபிகேட் சால்வை ஸம்பாவனை விருதுகள் வழங்கி கௌரவிக்கப் பட்டார்கள். (கல்ப ஸ்ரீ பரீக்ஷை தொடர்ந்து ஐந்தாவது வருஷமாக வருஷாவருஷம் தொடர்ந்து ஸ்ரீ ஸீதாராம குருகுலம் சார்பாக நடத்தப்படுகிறது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கல்பஸ்ரீ 2017 ப்ரயோக பரீக்ஷையில் தேர்ச்சி பெற்றவர்கள்

ரிக்- வேதம் RIG-VEDA (4)

R.Ramakrishnan
Ph:98416-02990

S.Guruprasad
Ph:83448-73785

K.Vignesh Butt
Ph:90433-48626

Lakshimikanth
Ph:81221-15158

சுக்ல யஜுர் வேதம் SUKLA YAJUR VEDA (6)

க்ருஷ்ண யஜுர் வேதம்

N.Gnyana shakthi
Ph:94441-54517

S.Vijayakumar sarma
Ph:98403-52582

K.S.Kannan
Ph:99940-84388

T.N.Arunachalam
Ph: 98410-58910

க்ருஷ்ண யஜுர் வேதம் KRISHNA YAJUR VEDA (14)

K.Sekar Shivam
Ph 94440-73319

M.Senthilkumar
Ph 70940-69448

K.S.Sampathkumar
Ph 98428-25993

L.Hariprasad
Ph 91762-76640

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கல்பஸ்ரீ 2017 ப்ரயோக பரீக்ஷையில் தேர்ச்சி பெற்றவர்கள்

க்ருஷ்ண யஜுர் வேதம் KRISHNA YAJUR VEDA (14)

V.Muthumani
Ph:94441-30104



G.Gowtham
Ph:98417-11320

K.Srikrishnan
Ph 98411-72098

vaithikasri

P.Ramakrishnan
Ph-94440-07373

S. Jayashankar
Ph-94448-61719

S.Krishna Sharma
Ph-96000-95823

S.Rajaganesh
Ph-98417-36376

M.Parthasarathy
Ph-98403-83669

R.Srinivasan
Ph-94444-54609

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நல்வழிகாட்டும் நல்லவர்கள்-16

(ஸ்ரீ தண்டபாணி ச்ரௌதிகள்)

உயர்ந்த ச்ரோத்ரிய வம்சத்தில் புதுப்பாளையம் ஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள் ஸ்ரீ அலமேலு அம்மாள் தம்பதிகளுக்கு திருக்கோவிலூர் ஸமீபம் புதுப்பாளையம் கிராமத்தில் 1934ஆம் வருஷம் பிறந்து தனது தந்தையிடமும் சிதம்பரம் ஆர்.எம்.எஸ் பாடசாலையில் சேர்ந்து தப்பலாமுலியூர் ஸ்ரீ கோபால ச்ரௌதிகளிடமும் ஸாமவேதம் மற்றும் வைதிக பிரயோகங்கள் ஸம்ஸ்க்ருத காவியங்கள் ஆகியவற்றை முழுமையாகக் கற்று உணர்ந்து, முறையாக 1958ஆம் வருஷம் ஸ்ரீமதி மதுரம் அம்மாளை விவாஹம் செய்து கொண்டு, சென்னையில் நூற்றுக் கணக்கான ஆஸ்திகர்களுக்கு ஸத் போதனை செய்து (மஹா மஹோபாத்யாய எஸ்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் உட்பட) பலருக்கும் ஆசார்யராக இருந்து வைதிக (ஸ்மார்த்த) பூர்வ அபர ப்ரயோகங்களை நடத்தி வைத்தவரும், ஸுமார் பதினைந்து வருஷ காலம் சென்னை மாம்பலம் ஸ்ரீ அஹோபில மடம் பள்ளியில் நூற்றுக் கணக்கான மாணவர்களுக்கு ஸாமவேதம் சொல்லி வைத்தவரும், மற்றும் (வைதிகஸ்ரீ ஆசிரியர் உட்பட) பற்பல வித்வான்களுக்கும் ஸ்மார்த்த ப்ரயோகத்துக்கும் ஸோமயாகம் போன்ற யாகங்களுக்கும் தேவையான ஸாமவேத பாகங்களைச் சொல்லி வைத்தவரும், தற்போதும் வேதத்தில் முழுமையான நம்பிக்கையுடன் ஆஸ்திகர்களுக்கு ஸன்மார்க்கம் உபதேசித்து வருபவருமான ப்ருஹ்மஸ்ரீ தண்டபாணி ச்ரௌதிகள் தற்சமயம் **Old No 10, New No 19, R.D.S Ftat Gopalan Street West mambalam, Chennai 33, Ph:24712107** முகவரியில் வஸித்து வருகிறார். ஆஸ்திகர்கள் பலரும் இன்னும் மேன்மேலும் அவரவர் வேதங்களை குறிப்பாக ஸாமவேதத்தைக் கற்று அதற்கான ஸ்மார்த்த பிரயோகங்களை முறையாகச் செய்து பலனடைய வேண்டும் என்று தனது நோக்கத்தை வெளியிடும் ப்ருஹ்மஸ்ரீ தண்டபாணி ச்ரௌதிகள் நமது வைதிக ஸமூஹத்துக்கு நல்வழிகாட்டும் நல்லவர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

2018 ஜனவரி மீ ஷண்ணவதி தர்ப்பண ஸங்கல்பங்கள்

♦இந்தக் குறியிட்ட அனைத்து இடங்களிலும் கீழ்கண்டவற்றை சேர்த்துக் கொள்ளவும் (ப்ராசீனாவீதீ)....கோ³த்ராணாம்.....ஶர்மணாம் வஸுரூத்ர ஆதி³த்ய ஸ்வரூபாணாம் அஸ்மத் பித்ரு பிதாமஹ ப்ரபிதாமஹானாம் ....கோ³த்ராணாம்.....நாம்நீநாம் வஸுரூத்ர ஆதி³த்ய ஸ்வரூபாணாம் அஸ்மத் மாத்ரு பிதாமஹீ ப்ரபிதாமஹீநாம் (தாயார் உள்ளவர்கள்-பிதாமஹீ பிது: பிதாமஹீ பிது:ப்ரபிதாமஹீநாம்),...கோ³த்ராணாம்..ஶர்மணாம் வஸு ருத்ராதி³த்ய ஸ்வரூபாணாம் அஸ்மத் ஸபத்நீக மாதாமஹ மாது:பிதாமஹ மாது: ப்ரபிதாமஹானாம் உப⁴யவம்ஶ பித்ரூணாம் அக்ஷய்ய த்ருப்த்யர்த்த²ம்,

இந்தக் குறியிட்ட நாட்களிலும், தர்பணம் செய்பவர் ஜன்ம நக்ஷத்ர நாளிலும் தர்பணத்தில் கருப்பு எள்ளுடன் சுத்தஅக்ஷதையையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்

29-12-17-வெள்ளி-மன்வாதி-ஹேமலம்ப³ நாம ஸம்வத்ஸரே தக்ஷிணாயனே ஹேமந்தர்தௌ தனுர்மாஸே ஶுக்லபக்ஷே ஏகாதஶ்யாம் புண்யதிதௌ² ப்ருகு வாஸர யுக்தாயாம் அபபரணீ நக்ஷத்ர யுக்தாயாம் ஸித்தயோக³ பத்ராகரண ஏவங்கு³ண விஶேஷண விஶிஷ்டாயாம் ஏகாதஶ்யாம் புண்யதிதௌ²♦ மன்வாதி புண்யகாலே மன்வாதி ஶ்ராத்தம் தில தர்ப்பண ரூபேண அத்ய கரிஷ்யே

03-01-2018-புதன்-வைத்ருதி: ஹேமலம்ப³ நாம ஸம்வத்ஸரே தக்ஷிணாயனே ஹேமந்தர்தௌ தனுர்மாஸே க்ருஷ்ணபக்ஷே த்விதீயாயாம் புண்யதிதௌ ஸௌம்யவாஸர யுக்தாயாம் புனர்வஸூ (11.20க்கு மேல் புஷ்ய)நக்ஷத்ர யுக்தாயாம் வைத்ருதி யோக தைதுல கரண ஏவங்குண விஶேஷண விஶிஷ்டாயாமஸ்யாம் த்விதீயாயாம் புண்ய திதௌ ♦வைத்ருதி புண்யகாலே வைத்ருதி ஶ்ராத்தம் தில தர்ப்பணரூபேண அத்ய கரிஷ்யே

08-01-2018-திங்கள்-பூர்வேத்யுரஷ்டகா ஹேமலம்ப³ நாம ஸம்வத்ஸரே தக்ஷிணாயனே ஹேமந்தர்தௌ தனுர்மாஸே க்ருஷ்ண பக்ஷே ஸப்தம்யாம் புண்யதிதௌ இந்துவாஸர யுக்தாயாம் ஹஸ்த நக்ஷத்ர யுக்தாயாம் ஶோபன யோக பத்ரா (08.51 நாழிக்கு மேல் பவ) கரண ஏவங்குண விஶேஷண விஶிஷ்டாயாமஸ்யாம் ஸப்தம்யாம் புண்ய திதௌ ♦அஷ்டகா பூர்வேத்யு: புண்ய காலே பூர்வேத்யுரஷ்டகா ஶ்ராத்தம் திலதர்ப்பண ரூபேண அத்ய கரிஷ்யே.

09-01-2018-செவ்வாய்-அஷ்டகா-ஹேமலம்ப³ நாம ஸம்வத்ஸரே தக்ஷிணாயனே ஹேமந்தர்தௌ தனுர்மாஸே க்ருஷ்ணபக்ஷே அஷ்டம்யாம் புண்யதிதௌ பௌமவாஸர யுக்தாயாம் சித்ராநக்ஷத்ர

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

யுக்தாயாம் அதிகண்ட (10.35க்கு மேல் ஸுகர்ம யோக பாலவ (09.14 க்குமேல் கௌலவ) கரண ஏவங்குண விஶேஷண விஷிஷ்டாயாமஸ்யாம் அஷ்டம்யாம் புண்யதிதௌ ◆அஷ்டகா புண்ய காலே அஷ்டகா ஶ்ராத்தம் திலதர்ப்பண ரூபேண அத்ய கரிஷ்யே.

10-01-2018-புதன்-அன்வஷ்டகா-ஹேமலம்ப³ நாம ஸம்வத்ஸரே தக்ஷிணாயனே ஹேமந்தர்தௌ தனுர்மாஸே க்ருஷ்ணபக்ஷே நவம்யாம் புண்யதிதௌ ஸௌம்யவாஸர யுக்தாயாம் சித்ரா (07.34க்கு மேல் ஸ்வாதீ) நக்ஷத்ர யுக்தாயாம் ஸுகர்ம (9.16 க்கு மேல் த்ருதியோக தைதுல(9.36க்கு மேல்) கரஜ கரண ஏவங்குண விஶேஷண விஷிஷ்டாயாம் நவம்யாம் புண்யதிதௌ ◆அன்வஷ்டகா புண்யகாலே அன்வஷ்டகா ஶ்ராத்தம் தில தர்ப்பண ரூபேண அத்ய கரிஷ்யே.

14-01-2018-ஞாயிறு-உத்தராயண புண்யகாலம் (தை மாதப் பிறப்பு பகல் 04.30 மணி)ஹேமலம்ப³ நாம ஸம்வத்ஸரே தக்ஷிணாயனே ஹேமந்தர்தௌ தனுர்மாஸே க்ருஷ்ணபக்ஷே த்ரயோதஶ்யாம் புண்ய திதௌ ஜ்யேஷ்டா நக்ஷத்ர யுக்தாயாம் வ்ருத்தி(09.00க்கு மேல் த்ருவ) யோக கரஜ கரண ஏவங்குண விஶேஷண விஶிஷ்டாயாமஸ்யாம் த்ரயோதஶ்யாம் புண்யதிதௌ ◆உத்தராயண ஸம்க்ஞக மகர ரவி ஸங்க்ரமண புண்யகாலே மகர ரவி ஸங்க்ரமண ஶ்ராத்தம் தில தர்ப்பண ரூபேண அத்ய கரிஷ்யே.

16-01-2018 - செவ்வாய்- அமாவாஸை- ஹேமலம்ப³ நாம ஸம்வத்ஸரே உத்தராயணே ஹேமந்தர்தௌ மகரமாஸே க்ருஷ்ண பக்ஷே அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ பௌமவாஸர யுக்தாயாம் பூர்வாஷாடா நக்ஷத்ர யுக்தாயாம் வ்யாகாதயோக(09.42க்கு மேல் ஹர்ஷண)சதுஷ்பாத்கரண ஏவங்குண விஶேஷண விஶிஷ்டாயா மஸ்யாம் அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ ◆அமாவாஸ்யா புண்ய காலே தர்ஶ ஶ்ராத்தம் தில தர்ப்பண ரூபேண அத்ய கரிஷ்யே.

19-01-2018-வெள்ளி-வ்யதீபாதம்:ஹேமலம்ப³ நாம ஸம்வத்ஸரே உத்தராயணே ஹேமந்தர்தௌ மகரமாஸே ஶுக்லபக்ஷே த்விதீயாயாம் (11.19க்கு மேல் த்ருதீயாயாம்)புண்யதிதௌ ப்ருகுவாஸர யுக்தாயாம் ஶ்ரவிஷ்டா நக்ஷத்ர யுக்தாயாம் ஸித்தி(10.36க்கு மேல் வ்யதீபாத) யோக கௌலவ(11.22 க்கு மேல் தைதுல) கரண ஏவங்குண விஶேஷண விஶிஷ்டாயாமஸ்யாம் த்விதீயாயாம்(த்ருதீயாயாம்) புண்ய திதௌ ◆வ்யதீபாத புண்யகாலே வ்யதீபாத ஶ்ராத்தம் தில தர்ப்பண ரூபேண அத்ய கரிஷ்யே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

23-01-2018-செவ்வாய்-மன்வாதி (வாக்ய) ஹேமலம்ப³ நாம ஸம்வத்ஸரே உத்தராயணே ஹேமந்தர்தௌ மகரமாஸே ஶுக்லபக்ஷே ஷஷ்ட்யாம்(12.25க்கு மேல் ஸப்தம்யாம்) புண்யதிதௌ பௌம வாஸர யுக்தாயாம் ரேவதீ நக்ஷத்ர யுக்தாயாம் ஸித்தயோக³ தைதுல (12.25க்கு மேல் கரஜ)கரண ஏவங்கு³ண விஶேஷண விஶிஷ்டாயா மஸ்யாம் புண்யதிதௌ◆ மன்வாதி புண்ய காலே மன்வாதி ஶ்ராத்தம் தில தர்ப்பண ரூபேண அத்ய கரிஷ்யே

24-01-2018 - புதன் -மன்வாதி :(த்ருக்) ஹேமலம்ப³ நாம ஸம்வத்ஸரே உத்தராயணே ஹேமந்தர்தௌ மகரமாஸே ஶுக்லபக்ஷே ஸப்தம்யாம் புண்யதிதௌ ஸௌம்ய வாஸர யுக்தாயாம் அஸ்வினீ நக்ஷத்ர யுக்தாயாம் ஸாத்யயோக³ பவ கரண ஏவங்கு³ண விஶேஷண விஶிஷ்டாயாமஸ்யாம் ஸப்தம்யாம் (அஷ்டம்யாம்) புண்யதிதௌ◆ மன்வாதி புண்யகாலே மன்வாதி ஶ்ராத்தம் தில தர்ப்பண ரூபேண அத்ய கரிஷ்யே

29-01-2018-திங்கள்-வைத்ருதி: ஹேமலம்ப³ நாம ஸம்வத்ஸரே உத்தராயணே ஹேமந்தர்தௌ மகரமாஸே ஶுக்லபக்ஷே த்ரயோதஶ்யாம் புண்யதிதௌ இந்துவாஸர யுக்தாயாம் ஆர்த்ரா நக்ஷத்ர யுக்தாயாம் வைத்ருதி யோக கௌலவகரண ஏவங்குண விஶேஷண விஶிஷ்டாயாமஸ்யாம் த்ரயோதஶ்யாம் புண்யதிதௌ ◆வைத்ருதி புண்யகாலே வைத்ருதி ஶ்ராத்தம் தில தர்பணரூபேண அத்ய கரிஷ்யே

31-01-2018-புதன்-சந்திர க்ரஹணம்: (தர்ப்பணம் இரவு மணி 7.48 முதல் 08.41க்குள்) ஹேமலம்ப³ நாம ஸம்வத்ஸரே உத்தராயணே ஹேமந்தர்தௌ மகரமாஸே கிருஷ்ணபக்ஷே ப்ரதமாயாம் புண்ய திதௌ ஸௌம்யவாஸர யுக்தாயாம் ஆஶ்ரேஷா நக்ஷத்ரயுக்தாயாம் ஆயுஷ்மான் யோக பவகரண ஏவங்குண விஶேஷண விஶிஷ்டாயாம் ப்ரதமாயாம் புண்யதிதௌ◆ஸோமோபராக புண்ய காலே ஸோமோபராக ஶ்ராத்தம் தில தர்ப்பணரூபேண அத்ய கரிஷ்யே

அடுத்த (பிப்ரவரி 2018) மாத ஷண்ணவதி தர்ப்பண தினங்கள்

06-02-18பூர்வேத்யுரஷ்டகா(த்ருக்)

07-02-18-பூர்வேத்யுரஷ்டகா(வாக்)

07-02-18-புதன்-அஷ்டகா(த்ருக்)

08-02-18-வியா-அஷ்டகா(வாக்)

08-02-18-அன்வஷ்டகா(த்ருக்)-

09-02-18- -அன்வஷ்டகா(வாக்)

13-02-18 - செவ்-விஷ்ணுபதீ

14-02-2018-புதன்-வ்யதீபாதம்:

15-02-2018 - வியாழன்- யுகாதி-

15-02-18 - வியா- அமாவாஸை

23-02-2018-வெள்ளி-வைத்ருதி:

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வைதிகர்களுக்காக... (பகுதி-26)

பூஜை ஹோமம் முதலிய வைதிக கர்மாக்களில் கூறப்படும் சில ஸம்ஸ்க்ருத (பரிபாஷா) சொற்கள்

उत्तरीयम् = உத்தரீயம் =மேல் துண்டு

उत्तरम् = உத்தரம் = வடக்கு திசை

उक्त्वा = உக்த்வா =சொல்லி

करिष्ये = கரிஷ்யே =செய்கிறேன்

गन्धम् - க³ந்த⁴ம் = சந்தனம்

गृहीत्वा = க்³ரஹீத்வா = எடுத்து

ग्रन्थि = க்³ரந்தி² = முடிச்சு

चरु= சரு= கஞ்சி வடிக்காத அன்னம்

तण्डुलः = தண்டு³லः = அரிசி

दर्वी = த³ர்வீ = பலாசத்தின் நடுஇலை

तिलः = திலः =எள்ளு

तोयम् = தோயம் = ஜலம்

धृत्वा = த்⁴ருத்வா = தரித்து

निरस्य = நிரஸ்ய =எறிந்து

मदन्ति = மத³ந்தி = சூடாக்கப்பட்ட ஜலம் (வென்னீர்)

माल्यम् = மால்யம் = மாலை

यत्किञ्चित् = யத்கிஞ்சித் = ஏதோ கொஞ்சம்

यथा स्थानम् = யதா²ஸ்தா²னம் = முன்பு இருந்த இடம்

समित् = ஸமித் = ஹோமம் செய்யத்தகுந்த குச்சி (சுள்ளி)

सेचयित्वा = ஸேசயித்வா = ஜலத்தால் நனைத்து

स्वीकृत्य= ஸ்வீக்ருத்ய = பெற்றுக்கொண்டு

विसृज्य= விஸ்ருஜ்ய = அவிழ்த்து விட்டு

हिरण्यम् = ஹிரண்யம் = தங்கம் அல்லது வெள்ளி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

vaithikasri

ஹேவிளம்பி ஆ மார்கழி மீ தக்ஷிணாயணம்- ஹேமந்தருது (ஜனவரி-2018)

தனுஸ்	யோக	அஹஸ்	ப்ராதி	திதி	ஆங்	தமி	கிழ	திதி	நாழி	வி	மணி	நி	நக்ஷ	நா	வி	மணி	நி	யோகம், கரணம், விசேஷ விரதாதிகள்
2.34	ஸித்	28.27	த்ர-சது	31		16	ஞா	த்ரயோ	17	51	ப	01.08	ரோஹ்	25	25	ம	04.10	ஸுப 16.15, தைதுல 17.51, தி 06.39, 38.29
2.23	அஸி	28.27	பௌர்	01		17	திங்	சதுர்	12	11	ப	10.52	ம்ருக	21	25	ப	02.34	ஸுப்ர 08.14, வணிஜ 12.11, தி 40.59, வடஸாவித்ரி வ்ரதம், நடராஜர் அபிஷேகம், பௌர்ணமீ-வ்ரதம்
2.12	மஸி	28.27	ப்ர	02		18	செ	பௌர்	06.22	ப	08.33		திருவ	17	19	ப	12.56	ப்ராஹம் 0.43, மாஹே 52.13, பவ 06.22, தி 45.20, இஷ்டீ, புஷ்ய பகுளம், ஆர்த்ரா தரிசனம்
2.01	ஸித்	28.28	த்விதீ	03		19	புத	ப்ரத	0.37	ப	06.15		புனர்	13	20	ப	11.20	வைத்ரு 45.19, கௌலவ 0.37, தைதுல 27.13, தி 32.05, அவமாஹஸ், வைத்ருதீ-ப்ராத்தம்
								த்விதீ	54.26	மு	ழு							
1.50	அஸி	28.29	த்ருதீ	04		20	விய	த்ருதீ	50.02	மு	ழு		பூச	09	36	ப	09.50	விஷ்கம்ப 38.03, வணிஜ 22.32, தி 39.54
1.39	ம	28.29	சதுர்	05		21	வெ	சதுர்	45.50	இ	12.16		ஆயில்	06	25	ப	08.34	ப்ரீதி 31.18, பவ 17.51, தி 35.10, ஸங்கடஹர சதுர்த்தீ
1..28	அஸி	28.30	பஞ்ச	06	JANUARY 2018	22	�சனி	பஞ்ச	42.06	இ	10.50		மகம்	03	54	ப	07.34	ஆயுஷ்மான் 25.08, கௌலவ 13.53, தி 23.20, திருவையாறு ஸத்குரு ஸ்ரீ த்யாக ப்ரஹ்மேந்த்ராள் ஆராதனை
1.17	ஸிஅ	28.30	ஷஷ்	07		23	ஞா	ஷஷ்	39.34	இ	09.50		பூரம்	02	13	ப	06.53	ஸௌபாக்ய 19.42, கரஜ 10.50, தி 20.02
1.06	ஸித்	28.31	ஸப்த	08		24	திங்	ஸப்த	38.08	இ	09.15		உத்ர	01	36	ப	06.38	ஸோபன 15.08, பத்ரா 08.51, தி 22.47, திஸ்ரோஷ்டகா
0.55	ஸித்	28.31	அஷ்	09		25	செ	அஷ்	37.58	இ	09.11		ஹஸ்	02	08	ப	06.51	அதிகண்ட 11.30, பாலவ 08.03, தி 22.44, அஷ்டகா
0.44	ஸித்த	28.32	நவமீ	10		26	புத	நவமீ	39.05	இ	09.38		சித்தி	03	55	ப	07.35	ஸுகர்ம 08.52, தைதுல 08.31, தி 18.38, அன்வஷ்டகா
0.33	அஸி	28.32	தசமீ	11		27	விய	தசமீ	41.26	இ	10.34		ஸ்வா	06	58	ப	08.47	த்ருதி 07.14, வணிஜ 10.15, தி 21.56, கூடாரைவல்லி, கர்ப்போட்ட முடிவு-10.39, த்ரைலோக்ய கௌரீ வ்ரதம்
0.22	ஸித்	28.33	ஏகா	12		28	வெ	ஏகா	44.56	இ	11.48		விசா	11	08	ப	10.27	ஸுஷில 06.30, பவ 13.11, தி 23.00, ஸர்வ ஏகாதஸீ
0.11	ஸித்த	28.34	த்வா	13		29	சனி	த்வா	49.24	மு	ழு		அனு	16	21	ப	12.32	கண்ட 06.37, கௌலவ 17.10, தி 31.44, போகிப்பண்டிகை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஹேவிளம்பி ஜூ தை மீ உத்தராயணம்- ஹேமந்தருது (ஜனவரி-2018)

vaithikasri

மகர	யோக	அஹஸ்	ஸ்ராதிதி	ஆங்	தமி	கிழ	திதி	நாழி	வி	மணி	நி	நக்ஷ	நா	வி	மணி	நி	யோகம், கரணம், விசேஷ விரதாதிகள்
4.43	ம அ	28.35	த்ரய்	14	1	ஞா	த்ரய்	54.27	முழு			கேட்	22.18	ப	02.55		வ்ருத்தி 07.21, கரஜ 21.55, தி 44.25, மகர ரவி 26.16,
							கரிநாள், மஹா ப்ரதோஷம்,										உத்தராயண புண்யகாலம், சூன்யர்க்கம், தைப்பொங்கல்
4.34	ஸித்த	28.35	சதுர்	15	2	திங்	சதுர்	59.51	முழு			மூலம்	28.39	ம	05.28		த்ருவ 08.27, பத்ரா 27.09, தி 55.12, கரிநாள்,
																	மாஸ ஸிவராத்ரி, மாட்டுப் பொங்கல்,
4.24	ஸித்த	28.36	அமா	16	3	செ	அமா	60.00	முழு			பூரா	35.01	இ	08.00		வியாகா 09.42, சதுஷ்பாத் 32.34, தி57.02, கரிநாள்,
																	தை அமாவாஸை, திருதின ஸ்ப்ருக், காணும் பொங்கல்
4.15	அஸி	28.37	ப்ரத	17	4	புத	அமா	04.58	க	07.59		உத்ர	41.04	இ	10.26		ஹர்ஷ 10.44, நாக 04.58, தி 51.58,சேஷ 01.02, இஷ்டி,
4.05	ஸித்த	28.38	த்விதீ	18	5	வியா	ப்ரத	09.35	ப	09.50		திருவ்	46.26	இ	12.34		வஜ்ர 11.23, பவ 09.35, சந்-தரி,ஸ்ர-வ்ர,மாக ஸ்நாத்தம்
3.56	ஸித்த	28.39	த்ருதீ	19	6	வெ	த்விதீ	13.18	ப	11.19		அவிட்	50.48	இ	02.19		ஸித்தி 11.22, கௌல 13.18, சேஷ 01.10,வ்ய-ஸ்ராத்தம்
3.46	அம	28.40	சதுர்	20	7	சனி	த்ருதீ	15.55	ப	12.22		சதய	54.06	முழு			வ்யதீ 10.31, கரஜ 15.55, தி 09.47, குந்த சதுர்த்தீ
3.37	ஸிஅ	28.41	பஞ்ச	21	8	ஞா	சதுர்	17.20	ப	12.56		பூரட்	56.08	முழு			வரீயான் 08.47, பத்ரா 17.20, தி 10.39, சதுர்-வ்ர,
3.28	ஸித்த	28.42	ஷஷ்	22	9	திங்	பஞ்ச	17.25	ப	12.58		உத்ர	56.51	முழு	பரீக		06.02, பாலவ 17.25, தி 20.25, வஸந்த பஞ்சமீ
3.18	ஸித்த	28.43	ஸப்த	23	10	செ	ஷஷ்	16.15	ப	12.30		ரேவ	56.26	முழு			ஸிவ 02.17, ஸித்த 55.25, தைதுல 16.15, தி 26.38,
																	வைவஸ்வத மன்வாதி,ஷஷ்டீ-வ்ரதம்,
3.09	மஸி	28.44	அஷ்	24	11	புத	ஸப்த	13.57	ப	11.35		அஸ்	54.56	முழு			ஸாத்ய 52.07, வணிஜ 13.57, தி 45.11, கரிநாள்,
																	ரத ஸப்தமீ, ,பீஷ்மாஷ்டமீ, ஸ்ரீ ஸூர்ய ஜயந்தீ
2.59	ஸிம	28.45	நவமீ	25	12	வியா	அஷ்	10.35	ப	10.14		பரணீ	52.29	முழு			ஸுப 45.46, பவ 10.35, தி 17.57, வாஸ்து 08.00
2.50	ஸிம	28.46	தசமீ	26	13	வெ	நவமீ	06.20	க	08.32		க்ருத்	49.23	முழு			ஸுப்ர 38.54, கௌலவ 06.20, தி 20.56, தை க்ருத்திகை
2.40	அஸி	28.47	ஏகா	27	14	சனி	தசமீ	01.27	க	06.35		ரோ	45.46	முழு			ப்ராஹ்ம 31.36, கரஜ 01.27, வணிஜ 27.18, தி 26.58,
							ஏகா	54.37	முழு								அவமாஹஸ், ஸ்மார்த்த பீம ஏகாதஸீ

JANUARY 2018

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

Digitization by eGangotri-South Center

வைதிக ஸ்ரீ

ஆன்மீக விளக்கக் கூட்டங்கள்

Post Box 1456-Alwarpet-Chennai.18 ☎ 24361210

www.vaithikasri.com vaithikasri@yahoo.com

(608) 31-12-2017-ஞாயிறு மாலை 06.30 முதல் 08.00 மணிவரை

இடம் புது எண் 488, டி,டி,கே ரோடு, **ஆழ்வார்பேட்டை** ☎ 24361210

பொருள் புருஷ ஸூக்தம்-விரிவுரை-பலன்?(2) ஸந்தேஹ விளக்கம்

(609) நாள் 07-01-18-ஞாயிறு மாலை 7.00 முதல் 8.30 மணிவரை

இடம் அர்த்த நாரீஸ்வரர் ஆலயம், **நங்கநல்லூர்.** ☎ 9444812525

பொருள்: நக்ஷத்ர விளக்கங்கள் (அஸ்வதி-பரணி-கிருத்திகை)

(610) நாள்: 21-01-18 ஞாயிறு மாலை 03.00 மணி - 05.00 மணி

இடம்: ஸ்ரீ அயோத்யா மண்டபம், **மேலமாம்பலம்.** ☎: 24893077

பொருள்: நவகிரஹ(ஸௌரிய) வழிபாடும் பலன்களும் பரிஹாரங்களும் ஏன்? எப்படி? எப்போது? மற்றும் ஆன்மிக ஸந்தேஹ விளக்கங்கள்

மேற்படி கூட்டங்களில் ஆன்மிக ஸம்பந்தமான அனைத்து கேள்விகளுக்கும் இயன்றவரை பதில் தரப்படும், கூட்டம் நடைபெறும் இடங்களில் வைதிகஸ்ரீயின் அனைத்து புஸ்தகங்களும் கிடைக்கும், வைதிகஸ்ரீ மாத இதழுக்கு புதிய சந்தா, சந்தா புதுப்பித்தல் ஆகியவை ஏற்றுக் கொள்ளப்படும்.

மதுரையில் அதிருத்ர மஹாயக்ஞ ப்ரவசனம்

28-12-2017 & 29-12-2017 (06.30 Pm to 08.30 Pm)

வேதம் கூறும் வாழ்க்கை முறைகள்

Life Style By vedic Method

Pravachanam By V.Rajagopala Ganapatigal at Sri Lakshmi Sundaram Hall Kokale Road, Thallakulam, Madurai (organized by Athirudra committee) contact Ph: 94439-28884

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வைதிக ஸ்ரீ: வெளியீடுகள்

(புதிய வெளியீடு) ஸ்தோத்ர ஸ்ரீ: 3ஆம் பாகம்

- ஸந்தேஹ நிவாரணீ தமிழ் (1,2,5,6,7,8 பாகங்கள்) ரூ 780.00
- வைதிகஸ்ரீ ஆண்டு (12) புஸ்தகம் தமிழ் ரூ 300.00
- ஸுபாஷிதானி(நன்மொழிகள்)தமிழ்(1-2பாகம்) ரூ 120.00
- தர்ம சாஸ்த்ரம் (தமிழ்) (1,2,3,4 பாகங்கள்) ரூ 185.00
- ஸ்தோத்ரஸ்ரீ:(பாகம்1,2,3)(33+25+12) ஸ்தோத்ரங்கள்) ரூ400.00
- பித்ரு பூஜனம் - பாகம்(1-2) (தமிழ்) ரூ 250.00
- பித்ருகர்மாக்கள் சிராத்தம்-தர்ப்பணம்(தமிழ்) ரூ 150.00
- ஆசிரியர் எண்ணங்கள் (தமிழ்) (No Stock) ரூ 000.00
- மந்திரங்களின் மஹத்துவம் (தமிழ்)(1-2பாகம்) ரூ 250.00
- **Sandeha Nivaranee-English-Part 1-2,3,4,5,6,7 Rs 1250.00**
- **Subhashithani - English-Part 1 & 2 Rs 140.00**
- **Dharma Sasthram -English-Part 1,2,3,4 Rs 225.00**
- **Pithru Pujanam- English- Part-1 Rs 130.00**

Copies of these Books are available only with

Vaithikasri, New 488, (old 175), T.T.K.Road, Alwarpet, Chennai.600018 Ph:24361210,11,www.vaithikasri.com

E Mail: vaithikasri@yahoo.com

DD/ M O / Local cheque in favour of

"Vaidhika Sri Publications LLP"

You Can Pay Your (Subscription) Amount by netbanking :

Bank : State Bank of india,**Branch:** Abhiramapuram-Chennai.18

Account Name: **Vaidhikasri Publications LLP**

Account No: 33940661503 IFSC Code: **SBIN0040203**

Published by V. Rajagopala Ganapatigal on behalf of VAIDHIKASRI PUBLICATIONS LLP From New No.488, T.T.K. Road, Alwarpet, Chennai-18. Printed by V.Ravi at, Jai Ganesh Offset Printers, 19, Venkatasamy Lane, Santhome, Chennai-600004.

Editor:V.Rajagopala Ganapatigal. Ph: 044-24361210

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center
Postal Reg. No. TN/CH/(C)10/15-17 Licence to Post WPP No. TN/PMG (CCR) WPP-10/2015-17
ISSN 2455-3840 R N I No.TNBIL 2003/10977 Date of Publication: 4th Week of Every Month



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.